
# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 277 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 13, திங்கட்கிழமை 29.08.2016


## கொழும்புக்கு வருகிறது அமெரிக்க போர்க் கப்பல்

கொழும்பு, ஓக. 29
அமெரிக்கக் கடற்படையின் பெரிய போர்க் கப்பலான யு.எஸ்.எஸ். பிராங்க் கேபிள்



(ஏ.எஸ்-40) கொழும்புத் துறைமுகத்துக்கு இன்று வருகை தருவதாகக் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்தது.
வழக்கமான எரிபொருள் நிரப்பும்பயணமாகவேகொழும்புத்துறைமுகவருகைஅமைந்திருப்பதாகவும், இதன்போது அமெரிக்க >> 23ஆம் பக்கம்



அப்ப இவரும் அதுக்குள்ள ஒருவரோ...

# பன்னாட்டு பங்களிப்புடனேயே நீதி சாத்தியம்

### மக்கள் நம்புவதால் அரசு நிறைவேற்றவேண்டும் என்கிறார் பான் கீ மூன்

கொழும்பு, ஓகஸ்ட் 29
பாதிக்கப்பட்டவர்களும், பாதிக்கப்பட்ட சமூகங்களும் தங்களுக்கு நீதியைப் பெற்றுத்தரக் கூடிய நம்பகத் தன்மைமிக்க நடைமுறை பன்னாட்டுப் பங்களிப்புடன் மாத்திரமே சாத்தியம் என்று நம்புகின்றனர். இதன் காரணமாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையும், இலங்கை தொடர்பான தீர்மானமும் பன்னாட்டுப் பங்களிப்பை வலியுறுத்தியிருந்தன. அதனை இலங்கை நடைமுறைப்படுத்தும் என்று எதிர்பார்க்கின்றேன்.
இவ்வாறு தெரிவித்தார் ஐ.நா. பொதுச்



செயலர் பான் கீ மூன்.
இலங்கைக்கு நாளை மறுதினம் புதன் கிழமை வருகை தரவுள்ள நிலையில், அதற்கு முன்னதாக ஆங்கில வார ஊடகத்துக்கு வழங்கிய செவ் >> 23ஆம் பக்கம்

## போர்க்குற்றம், உண்மை, நீதி இவையே பான் கீ மூனின் இலக்கு

*தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எடுத்துரைப்பு*

கொழும்பு, ஓக. 29
உண்மையைக் கண்டறியும் குழு, போர்க்குற்ற விசாரணை, நீதிமன்றம் ஆகியவற்றை அமைக்கும் சட்டங்களை நிறைவேற்றுவதை துரிதப்படுத்தவே ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் இலங்கை வருகிறார்.
இவ்வாறு குற்றம் சுமத்துகிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.
இது தொடர்பில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலர் வசந்த பண்டார, கொழும்பு ஊடகத்துக்குத் தெரிவித்ததாவது:
அரசு இன்று பன்னாட்டுச்சமூகத்தின்தேவைகளான காணாமற்போனோரைக் கண்டறியும் அலுவலகத்தை இலங்கையில் அமைப்பதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறை >> 25ஆம் பக்கம்

## வலி.வடக்கில் விரைவில் விடுவிக்கவுள்ள காணிகளை காண்பித்தது இராணுவம்



யாழ்ப்பாணம், ஓக. 29
வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள பலாலி மற்றும் காங்கேசன்துறையைச் சேர்ந்த 5 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள 725 ஏக்கர் காணிகளை உரிமையாளர்களிடம் மீளக்கையளிப்பது தொடர்பாக மக்களுடனான சந்திப்பொன்று நேற்றுமுற்பகல் 10 மணியளவில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.
தெல்லிப்பழை பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், பலாலி இராணுவ அதிகாரி மற்றும் காணி உரிமையாளர்கள் கலந்துகொண்டனர்.
இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் குறித்த 5 கிராம அலுவலர் பிரிவிலுள்ள >> 23ஆம் பக்கம்

## அயலுறவு அமைச்சின் அலுவலகம் ஜனவரி இறுதிக்குள் வவுனியாவில்

### நல்லூரில் தெரிவித்தார் அமைச்சர் மங்கள

யாழ்ப்பாணம், ஓக. 29
யாழ்ப்பாணத்தில் இடம் கிடைத்தால் அயலுறவுத் துறை அமைச்சின் அலுவலகம் ஒன்றை நிரந்தரமாக அமைக்கலாம். அமைச்சின் தற்காலிக அலுவலகம் ஒன்றை வவுனியாவில் எதிர்வரும் ஜனவரி இறுதிக்குள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு அயலுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீர நல்லூரில் தெரிவித்தார்.
அயலுறவு அமைச்சின் 4 நாள்கள் நடமாடும்சேவை நல்லூரில் நேற்று முற்பகல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதில் முதன்மைவிருந்தினராகக் கலந்து கொண்டு அமைச்சர் மங்கள உரையாற்றினார். அவருக்கு முன்னர் விக்னேஸ்வரன் உரையாற்றுகையில்: வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அலுவலகம் ஒன்று வடக்கில் அமைய வேண்டியதன் அவசியத்தை அயலுறவு அமைச்சரிடம் வலியுறுத்தினார்.
இது தொடர்பில் அமைச்சர் மங்கள தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:
எமது அரசின் கொள்கை அடிப்படை >> 04ஆம் பக்கம்

## யாழ்ப்பாண பாடசாலைகளுக்கு புதனன்று விடுமுறை

யாழ்ப்பாணம், ஓக. 29
நல்லூர் கந்தன் ஆலய தேர்த்திருவிழாவுக்காக யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் நாளைமறுதினம் புதன் கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.
இவ்வாறு அறிவித்தார் வடமாகாணக் கல்வி அமைச்சின் செய >> 25ஆம் பக்கம்

## மீண்டும் தடை

யாழ்ப்பாணம், ஓக. 29
கீரிமலையில் கடற்படையினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பிரதேசம், மீளவும் கடற்படையினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் கீரிமலையில் உள்ள இந்து மயானத்துக்குத் சுற்றுப் பாதையினூடாகவே பொதுமக்கள் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
கீரிமலையில் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்து சில மாதங்களுக்கு முன்னர் மேற்படி இந்து மயானம் மற்றும் அதற்குச் செல்லும் பாதைகள் என்பன விடுவிக்கப்பட்டன. இதற்கான அறிவித்தலும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்டது.
இந்த நிலையில் கடந்த சில வாரங்களாக, இந்து மயானத்துக்கு உடல்களைத் தகனம் செய்யச் செல்வோரைக் கடற்படையினர் சுற்றுப் பாதையினூடாகச் செல்லுமாறு பணித்து வருகின்றனர். >> 25ஆம் பக்கம்

## காணி விரைவில் விடுவிக்கப்படும்; கடிதம் வழங்கத் தயாராகிறது அரசு

யாழ்ப்பாணம், ஓக. 29
நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 40 குடும்பங்கள், விரைவில் விடுவிக்கப்படவுள்ள பிரதேசத்தில் தமது காணிகள் உள்ளடங்கியுள்ளதாகப் பதிவுகள் மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கு, இரண்டொரு தினங்களுக்குள் 'உங்களது காணி விரைவில் விடுவிக்கப்படும்' என யாழ். மாவட்டச் செயலகத்தினால் கடிதம் வழங்கி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
வலி. வடக்கில் விரைவில் விடுவிக்கப்படவுள்ள 5 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு வலி. வடக்குப் பிரதேச செயலகத்தில் நேற்றுக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. கலந்துரையாடலின் முடிவில், விடுவிக்கப்படவுள்ள பிரதேசத்தை சிலருக்கு நேரில் அழைத்துச் சென்று காண்பிக்கப்பட்டது.
இதன் பின்னர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்கள், 40 >> 25ஆம் பக்கம்

## இலங்கையில் ஒரு சிலரே சிங்கள இனவாதிகள்

### இப்படிக் கூறுகிறார் ரணில்

கொழும்பு, ஓக. 29
இலங்கைச் சிங்கள மக்களை இனவாதிகளாக சித்திரித்து வெளிநாட்டவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். இலங்கையிலுள்ள அனைத்துச் சிங்கள மக்களும் இனவாதிகள் அல்லர். ஒரு சிலரே அவ்வாறானவர்கள்.
இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.
பிரதமர் ரணில் ஹட்டனுக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். இதன்போது அங்கு இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் ஒரே பிரதேசம் நுவரெலியா மாவட்டம். இலங்கையில் உள்ள சிங்கள மக்களை இனவாதிகளாக வெளிநாட்டவர்கள் சித்திரித்து கேள்வி கேட்கின்றார்கள். ஆனால் இலங்கையில் ஒரு சில சிங்களவர்களே இனவாதிகளாக செயற்படுகின்றனர். அனைத்துச் சிங்களவர்களும் அப்படி அல்ல. 1977ஆம் ஆண்டு குடியுரிமை அற்ற நிலையில் ஒரே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் நுவரெலியா மாவட்டத்தில் இருந்தார். இன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
இந்த நாட்டில் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தன மற்றும் பிரேமதாச உள்ளிட்ட இன்னும் பல ஜனாதிபதிகள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருந்தனர். நாட்டின் மாற்றத்துக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஊடாக செய்யப்ப >> 04ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று யாழ். வருகிறார்கள் உலக வங்கியின் பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஓக. 29

உலக வங்கியின் பிரதிநிதிகள் குழு இன்று திங்கட்கிழமை காலையில் யாழ். குடாநாட்டுக்குப் பயணம் மேற்கொள்கிறது. வலி. வடக்கில் உலக வங்கி நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் திட்டங்களையும் அந்தக் குழுவினர் பார்வையிடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

உலக வங்கிக்குழுவில் தலைவர் மற்றும் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினரே பயணம் மேற்கொள்கின்றனர்.

குழுவினர், வலி. வடக்கில் வயாவிளான் மகாவித்தியாலயம் , குரும்பசிட்டி, கட்டுவன், தெல்லிப்பழை ஊடாக யாழ். நகரை அடைந்து முற்பகல் 11 மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை சந்திக்கின்றனர்.

இந்தச் சந்திப்பையடுத்து கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்தின் புனரமைப்புப் பணிகளையும் பார்வையிட்டு திரும்புகின்றனர். இந்தக் குழுவினருடன் உலக வங்கியின் வடக்கு மாகாணப் பொறுப்பதிகாரி மனோகரனும் கலந்துகொள்வார் எனத் தெரி விக்கப்பட்டது.

(வ-101)

# அயலுறவு அமைச்சின் நடமாடும் சேவை நல்லூரில் ஆரம்பம்

## வடக்கு மக்களைப் பயன்பெறுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 29

வடக்கு மக்கள் வெளிநாட்டிலுள்ள தமது உறவுகளுக்கு சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்களை அனுப்புவதில் இடையூறுகளை எதிர்கொள்வதால், அவற்றைச் சரியான முறையில் எப்படி அணுகிச் செயற்படுத்துவது என்பது பற்றிய விளக்கமளிக்கும் நடமாடும் சேவை நல்லூரில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. நாளை மறுதினம் புதன்கிழமை யுடன் நடமாடும் சேவை நிறைவு பெறவுள்ளதனால் இங்குள்ள உறவுகள் சகலரும் அங்கு சென்று பயன்பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டது.

அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் முதன்மை அதிதிகளாகக் கலந்து கொண்டு நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்தனர்.

இதன்போது உரையாற்றிய வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அலுவலகம் இந்த நடமாடும் சேவையை இன்று தொடக்கம் எதிர்வரும் புதன்கிழமை வரை நடத்த முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கதே. எங்கள் பகுதிகளில் ஏற்பட்ட தளம்பல்நிலை காரணமாக எமது இளையோர்களில் பலர் கல்வி நடவடிக்கைக்காகவும், தொழில் நிமித்தமாகவும், வெளிநாடுகளில் குடியேறி அங்கு வாழ்கின்றனர். அவர்கள் அந்த நாட்டில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கும், உயர் கல்வியை மேற்கொள்வதற்கும் தாம் இலங்கையில் பெற்றுக் கொண்ட கல்விச் சான்றிதழ்கள், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் என இன்னோரன்ன



சான்றிதழ்களின் சான்று படுத்தப்பட்ட பிரதிகளை பெறுவதற்கு தமது தாய், தந்தையர், உறவினர், நணபர்கள் ஆகியோருக்கு விண்ணப்பங்களை அனுப்புகின்றனர்.

அவற்றை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் கொடுத்து உறுதிப்படுத்துவதற்காக இந்தப் பகுதிகளில் இருந்து பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து சொகுசு பஸ்கள் மூலமாகவும், புகையிரதங்கள் மூலமாகவும் கொழும்புக்குச் சென்று அங்கே வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அலுவலகத்தை தேடிப்பிடிப்பதற்கு வாடகை வண்டிகள், ஓட்டோ போன்றவற்றிற்குப் பணத்தைக் கொடுத்து உரிய கரும பீடங்களில் அவர்களின் ஆவணங்களைக் கையளிக்கும் போது, அவற்றில் பல குறைபாடுகளை அமைச்சுமட்ட அதிகாரிகள் இணங்காண்பதால், உரிய சேவைகள் கிடைக்காது அவர்கள் மீளத்திரும்பி வர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகின்றனர்.

இந்த விடயம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராலும் அமைச்சில் கடமையாற்றுகின்ற உயர்மட்ட அதிகாரிகளாலும் அடையாளம் காணப்பட்டிருக்கும் காரணத்தினால், இவ்வாறான ஒரு நடமாடும் சேவை இன்று இங்கு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்காக அமைச்சருக்கு நன்றிகளைத் தெரிவித் துக் கொள்கின்றேன்.


வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு 'கொன்சியூலர் வழி காட்டி' என்ற ஒரு சிறிய வழிகாட்டித் தொகுப்பு நூலை மும்மொழிகளிலும் தயார் செய்து வெளியிட்டிருக்கின்றார்கள்.

இந்த வழிகாட்டியில் உரிய ஆவணங்களை உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்வதற்கு முன் வைக்கவேண்டிய துணை ஆவணங்கள் பற்றித் தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை நன்கு வாசித்து அறிந்து, அதில் கேட்கப்பட்ட ஆவணங்களைத் திரட்டிக் கொண்டு ஒரே தடவையில் கொழும்புக்குச் சென்று உங்கள் தேவைகளை நிறைவு செய்து கொண்டு அன்றைய தினமே திரும்பக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றை இங்கேயே பெற்றுக்கொள்ள உங்கள் அமைச்சின் ஒரு சிறிய அலுவலகத்தை இங்கு உருவாக்கினால் என்ன என்ற விடயத்தையும் அமைச்சர் மங்கள சமரவீர கருத்தில் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் - என்றார்.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், அங்கஜன் இராமநாதன், யாழ். மாவட்டச் செயலர் வேதநாயகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(வ-4,101,ரி1)

# விடுதலைப் புலிகளின் கிளைமோர், கைக்குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன



உரப்பை ஒன்றினுள் பொதியிடப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் மீட்கப்பட்ட கிளைமோர், மற்றும் கைக்கண்டுகள் நீதிமன்ற அனுமதியுடன் நேற்று வெடிக்க வைக்கப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். அவை விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப்பட்வை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஆச்சிபுரம், மயிலங்குளம் பகுதியிலுள்ள வெற்றுக்காணி ஒன்றில் நேற்று முன்தினம் மாலை துப்புரவுப் பணிகளை மேற்கொண்ட காணி உரிமையாளர், அங்கு உரப்பை ஒன்றினுள் பொதி செய்யப்பட்ட சந்தேகத்திற்கு இடமான பொதி இருப்பதை அவதானித்தார். இது தொடர்பாக உடனடியாக மடுக்கந்தை பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர்.

குடாக்கச்சக்கொடி வெடிகுண்டு செயலிழக்கும் சிறப்பு அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்கினர். அத்தோடு வெடிகுண்டை மீட்டு செயலிழக்கச் செய்வதற்காக நீதிவானின் அனுமதியை பெற்றுக் கொண்டனர்.அதனடிப்படையில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் சம்பவ இடத்திற்குச் சென்ற வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் சிறப்பு அதிரடிப் படையினர், இரண்டு கைக்குண்டு மற்றும் கிளைமோர் என்பன வற்றை மீட்டு செயலிழக்கச் செய்தனர்.

(வ-21)

## கஞ்சா கடத்தியவர் பருத்தித்துறைக் கடலில் படகுடன் கைது

யாழ்ப்பாணம், ஓக. 29

57 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் பொதிகளுடன் பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து படகுடன் ஒருவரைக் கடற்படையினர் கைது செய்தனர். அவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று காங்கேசன் துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 8 மணியளவில் கடலில் ரோந்து சென்றிருந்த கடற்படையினர், படகைச் சோதனையிட்டு அவற்றை மீட்டு ஒருவரைக் கைது செய்தனர். அவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(வ-4,26)

## வெளிநாட்டிலிருந்து வந்தவர் மீது இரணைப்பாலையில் கத்திக் குத்து

புதுக்குடியிருப்பு இரணைப்பாலையில் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர் மீது கத்திக்குத்து இடம் பெற்றுள்ளது. அவர் உட்பட இருவர் படுகாயமடைந்து முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் வெளிநாட்டில் இருந்து விடுமுறைக்காக வருகைதந்து உறவினர் வீட்டில் தங்கியிருந்த ஒருவருக்கும், அவருடன் காணிப்பிணக்கொன்றில் தொடர்புடையவர்களுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றிருந்தது. அதன்பின்னர் கத்திக்குத்து இடம்பெற்றதாக விசாரணையில் தெரியவந்ததாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

இரணைப்பாலையில் இருந்து தேவிபுரம் செல்லும் வீதியில் வெளிநாடொன்றில் இருந்து வருகை தந்த குறித்த நபருக்குச் சொந்தமான வயல்காணிகள் உள்ளன. அந்தக்காணி தொடர்பான பிணக்கே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய இருதரப்பினரும் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சம்பவம் தொடர்பாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றது. மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4,ரி7)

# நாகர்கோவிலில் நேற்று வெடிபொருள்கள் மீட்பு

வடமராட்சி, நாகர்கோவிலில் அண்மையில் மீள்குடியமர்ந்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வெடிபொருள்கள் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டு உரிமையாளர் ஒருவர் வளவினுள் தோட்ட வேலையில் ஈடுபட்ட சமயம் வெடிபொருள்கள் இருப்பதைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

வடமராட்சி கிழக்கு, அம்பன் பகுதியில் பிரதேச செயலகப் பணியாளர் ஒருவரின் இல்லக் காணியிலேயே குறித்த வெடிபொருள்கள் இனம் காணப்பட்டன. இது தொடர்பில் பணியாளர் உடனடியாக கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலா



ளருக்கு அறிவித்தல் வழங்கினார். அதனைத் தொடர்ந்து அவர்களின் ஊடாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. குறித்த இடத்திற்கு நேற்றுச் சென்ற பொலிஸார் வெடிபொருள்களை மீட்டதாகத் தெரிவித்தனர்.

(வ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விடுவிப்பில் அரசிடம் கொள்கை இல்லை

**சாடுகிறார் ரில்வின் சில்வா**

வடபகுதி மக்களின் பூர்வீகக் காணிகளைக் கையளிப்பதில் அரசிடம் சரியான கொள்கை இல்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றஞ்சாட்டினார். யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட அவர், கட்சி அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். இதன்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் தெரிவித்ததாவது:

வடபகுதி காணிப் பிரச்சினை மிகவும் சிக்கலான பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்கு அரசினால் எடுக் கப்படும் நடவடிக்கைகள் கொள்கை ரீதியானதாக இல்லை. நல்லாட்சி அரசுக்குக் கொள்கை என்பது இல்லை. வடபகுதி மக்களுடனும், அரசியல்வாதிகளுடனும் பேசும்போது காணிப் பிரச்சினை குறித்த கருத்துக்கள் வேறாக இருக்கின்றன. ஆனால், தென்பகுதியில் இனவாதம் ஏற்படும்போது காணிப் பிரச்சினை குறித்து வெளிப்படும் கருத்துக்கள் வேறு. வடபகுதி காணி விடயத்தில் நல்லாட்சி அரசு கொள்கை இல்லாத காரணம்தான் மூல காரணமாக இருக்கின்றது.

வடபகுதியில் பூர்வீகமாக இருந்த மக்களின் காணிகள் கையளிக்கப்பட வேண்டும். அதற்காக அரசு பாதுகாப்பைப் பலவீனப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. பாதுகாப்பைப்பலப் படுத்தி வைத்துக்கொள்ள வேண்டியது அரசின் வேலை-என்றார். (த-106)

# இன ரீதியான பதற்றத்தை தூண்டும் நடவடிக்கைகளை அரசு தடுக்கவேண்டும்

*பிரதமரிடம் வலியுறுத்தியது கூட்டமைப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 29

வடக்கு-கிழக்கில் இன ரீதியான பதற்றத்தைத் தூண்டும் வகையில் - குடித் தொகை பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது. இத்தகைய செயல்களைக் கண்டிப்பதுடன், அவற்றை அரசு உடனே தடுத்து நிறுத்த வேண்டும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினருக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடை யில் நேற்றுமுன்தினமிரவு இடம் பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்கண்ட கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

வடக்கு-கிழக்கில் தீய நோக்கங்களையும் இனரீதியான பதற்றங்களையும் உருவாக்கும் நோக்கில் இடம்பெறும் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பில் பிரதமருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. தமிழ் இளையோர் வேலை வாய்ப்புக்களுக்கான தகுதி பெற்றிருந்தும், அவர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படாமையும் இதிலே உள்ளடங்கும்.

வடக்கு-கிழக்கில் இடம்பெறும் சட்டவிரோதமானதும், அதிகாரபூர்வமற்றதுமான குடியேற்றங்கள் தொடர்பிலும், வேண்டுமென்றே கோபமூட்டும் நோக்கில் அமைக்கப்படும் புத்தர்சிலைகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

சிங்கள மக்கள் வடக்கிலே மீளக் குடியேறுவதையும், அங்கே தமது மதத்தினையும் கலாசாரத்தினையும் பின்பற்றுவதை வரவேற்கிறது. எனினும் வேண்டுமென்றே இனரீதியான பதற்றத்தை தூண்டும் விதத்திலும் மற்றும் வடக்கு-கிழக்கிலே குடித்தொகைப் பரம்பலில் மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் செய்யப்படும் எந்தச் செயலும் இலங்கையில் மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்குக் குந்தகமாக அமைவதோடு, இவ்வாறான செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பில் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு பிரதமர் உறுதியளித்தாக, அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

*பேராதனை மாணவர் மீதான தாக்குதல்;*

# யாழ்.பல்கலை ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஓக. 29

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையை யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டித்து அறிக்கை அனுப்பியுள்ளது.

அதில், கடந்த திங்கட்கிழமை தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாகப் பல மாணவர்கள் காயங்களுக்குள்ளானார்கள். இந்த வன்முறைச் சம்பவத்தை யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மிக வன்மையாகக் கண்டிப்பதோடு, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட மாணவர்கள் தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, இவை மேலும்இடம் பெறாவண்ணம் எதிர்காலத்தில் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் நீண்ட காலமாகவே கல்வி பயின்று வருகின்றார்கள். எல்லா மாணவர்களுக்குமான பாதுகாப்பு, சம்பந்தப்பட்ட தரப்பால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். யாழ். பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட மாணவர் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு எட்டப்பட்டதைப் போன்று பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் தீர்வு எட்டப்பட்டு, மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு சகல தரப்பினரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்-என்றுள்ளது. (த-4)

# பழிவாங்கல்கள் இல்லாத நிர்வாகம் கிழக்கு மாகாணத்திலேயே உள்ளது

*முதலமைச்சர் நஸீர் அஹமட் பெருமிதம்*

கொழும்பு, ஓக. 29

கொழும்பு அரசில் நல்லாட்சி இடம்பெறுகின்றது. அந்த நல்லாட்சியை விட ச் சிறந்ததொரு நல்லாட்சி கிழக்கு மாகாண சபையில் நடைபெறுகின்றது. எந்தவொரு விடயத்திலும் அரசியல் பழிவாங்கல் இல்லாத ஒரேயொரு மாகாண சபை நிர்வாகம் கிழக்கு மாகாணத்திலேயே உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட்.

ஏறாவூர் கோட்டக் கல்விப் பிரிவிலிருந்து கல்வியியற் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய பயிலுநர்களை வரவேற்கும் நிகழ்வு ஏறாவூர் அறபா வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்ததாவது:

கல்வித்துறை உட்பட எந்தவொரு விடயத்திலும் அரசியல் பழிவாங்கல் இல்லாத ஒரேயொரு மாகாண சபை நிர்வாகம் கிழக்கு மாகாணத்திலேயே உள்ளது. கிழக்கு மாகாணம் நாட்டிற்கே முன்மாதிரியாகத் திகழ்கின்றது.

எல்லாக் கட்சிகளும் எல்லாச் சமூகங்களும் இணைந்து மிகவும் வெளிப்படைத் தன்மையாக, ஒழிவு மறைவும் வேறுபாடுகள், புறக்கணிப்புக்கள் இன்றி, எல்லா இடங்களையும், இனங்களையும், மதங்க




ளையும், சமமாக மதித்துப் பங்கீடு செய்கின்ற ஒரு நிலைப்பாட்டிலேயே கிழக்கு மாகாண சபை நிர்வாகம் ஒன்றித்து செயற்பட்டு வருகின்றது.

இதற்காக மிகப் பெரிய சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளோம். தொடர்ந்தும் அத்தகைய சவால்களை உள்ளும் புறமும் எதிர்கொண்டு வருகின்றோம். எனினும் மனம் சளைக்காமல் உறுதியுடன் இருந்து, தியாகம் செய்து, இன ஒற்றுமையைப் பலப்படுத்தியுள்ளோம்.

சொந்த மாவட்டத்தில், சொந்த ஊரில் அதிலும் வீட்டுக்கு அருகிலுள்ள பாடசாலையில் ஆசிரியர் இடமாற்றம் கோரி நாளாந்தம் முதலமைச்சர் அலுவலகத்தை நாடி வருவோர் எண்ணிக்கை குறைந்தபாடில்லை - என்றார். (வ-5)

## சட்டச் சிக்கல் காரணமாகவே பதவி விலக முடியவில்லை

*கூறுகிறார் மகிந்தானந்த*

தான் உட்பட 12 பேர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து விலக முடியாமல் இருப்பது, சட்டப் பிரச்சினை ஒன்றின் காரணமாகவே.

இவ்வாறு கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில், தாம் சட்ட ஆலோசனை பெற்றுக் கொண்டிருப்பதாகவும், இதற்கு ஏற்ப எதிர்வரும் நாள்களில் தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

சுயேட்சையாக விலகுபவர்களின் கட்சி உறுப்புரிமையை நீக்குவதற்கான தீர்மானத்தைக் கட்சி நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (த-4)

## மைத்திரியின் இணையத்துக்குள் இலங்கையரே ஊடுருவினர்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை இலங்கையில் உள்ள குழுவினர் ஹக் செய்துள்ளதாக புலனாய்வுப் பொலிஸார் மற்றும் இலங்கை கணினி அவசர உதவிப் பிரிவினர் கண்டறிந்தனர்.

கடந்த 25ஆம் திகதி இந்த இணையத் தளம் ஹக் செய்யப்பட்டிருந்தது. இலங்கை இளைஞர்கள் என்றபெயரில்அடையாளம்காணப்படாத குழுவினர் தகவலொன்றை அதில்பதிவிட்டுள்ளனர். இணையத்தளம் ஹக் செய்யப்பட்டுள்ளதை அறிந்ததுடன் ஜனாதிபதி செயலகம் உடனடியாக நடவடிக்கை எடுத்தது. ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையை ஏப்ரல் மாதம் நடத்துவதாகவும், நாட்டை நிர்வகிக்க முடியாவிட்டால் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதாகவும், பல்கலைக்கழக மாணவர்கள் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுப்பதாகவும் பிரதமரைப் பற்றியும் ஹக் செய்த குழுவினர் பதிவிட்டுள்ளனர். இதேவேளை, ஜனாதிபதியின் இணையத்தளம் முதற் தடவையாக வியாழக்கிழமை ஹக் செய்யப்பட்டதுடன், இரண்டாவது தடவையாக வெள்ளிக்கிழமையும் ஹக்செய்யப்பட்டுள்ளது. ஹக்செய்யப்பட்ட சில மணி நேரங்களின் பின்னர் [illegible] வந்ததாக இணைய குற்ற ஒழிப்பு பிரிவினர் தெரிவித்தனர். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலை வாய்ப்பு**

"அன்பு உள்ளங்களே" வேலை செய்து செய்து மாதம் முடியும் தருணத்தில் கையில் பணமேதும் இல்லாமல் உள்ளதா இதோ எம்நாட்டின் தலை நகரான கொழும்பில் உள்ள விமானநிலையத்தில் வேலைவாய்ப்பு Basic ரூ25000-35000 மூன்றுமாத காலங்களின் பின்னர் ரூ55000-75000 மேல் வழங்கப்படும். வயது -18-40 உணவு தங்குமிடம் இலவசம்

இன்றே தொடர்புக்கு -0722231518 0719215892


இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 28.08.2016 | வெற்றி வாரம் 2023 | ஊதா
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 04 32 39 42
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2,674,000 /-

Galaxy Star
வெற்றி வாரம் 087 | திகதி 28.08.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
01 06 09 11 55
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,000,000/=

# பெருமளவில் குறைகிறது

## மருந்துகளின் விலை

மருந்துகளின் விலையைப் பெருமளவில் குறைக்க அரசு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் நாளை மறுதினம் சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனரட்ன தெரிவித்தார். இதில் பல மருந்துகளின் விலை 85



சதவீதம் வரை குறைப்படும் எனவும் விலை உயர்ந்த மருந்துகள் 10 சதவீதம் குறைக்கப்படும் எனவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார். இலங்கையின் தேசிய மருந்து ஒழுங்கு முறை அதிகாரசபையுடனான பேச்சு வார்த்தையை அடுத்தே அந்த மாற்றம் நாளைமறுதினம் நடை முறைக்கு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (வ-5)

**வீடு. காணி விற்பனைக்கு உண்டு**

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அரியாலை மத்தி பகுதியில் 03 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (A9) கண்டி வீதி, அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்திற்கு முன்பாக உள்ள வீதியின் 50m தொலைவில் ஆள்காட்டி வீதியில் அனைத்து வளங்களுடனும் அமைந்துள்ளது. (J 41322)(14,17,18)

**077 033 3910/ 077 778 2192**
**021 221 1195/ 021 221 1414**

# காரில் பயணித்த குடும்பத்தின் மீது நேற்றிரவு சுழிபுரத்தில் தாக்குதல்

சுழிபுரம் சத்தியங்காட்டுச் சந்தியில் நேற்றிரவு காரில் சென்ற குடும்பத்தின் மீது இளைஞர்கள் குழு ஒன்று தாக்குதல் நடத்தியது. இதன்போது தாக்குதல் நடத்தியவரைப் பிடித்துக் கொடுத்தபோதும் பொலிஸார் தப்பிக்கவிட்டனர் என பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்தனர்.

சுழிபுரம் பத்திரகாளி கோவிலில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றுக்கு நேற்றிரவு 9.30 மணியளவில் சென்று திரும்பிய வேளையிலேயே குறித்த குடும்பத்தின் மீது இளைஞர்கள் குழு தாக்குதல் நடத்தியது. இதன்போது வட்டுக்கோட்டையைச் சேர்ந்த குடும்பத்தலைவர் மற்றும் அவரது மனைவி மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக வட்டுக் கோட்டைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்குப் பொலிஸார் வருவதற்கு முன்னர், அந்தப் பகுதியைச் சேர்ந்த வேறு இளைஞர்களால் தாக்குதல் நடத்தியவர்கள் பிடிக்கப்பட்டனர். பின்னர் அங்கு வந்த பொலிஸாரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். எனினும் தாக்குதலை மேற்கொண்ட இளைஞனைத் தப்பிக்கவிட்ட பொலிஸார், அவருடன் சேர்ந்திருந்த ஒருவரையே கைது செய்து அழைத்துச் சென்றனர் என பாதிக்கப்பட்ட தரப்பினர் குற்றஞ்சாட்டினர்.

இது தொடர்பில் பொலிஸாரிடம் தகவலைப் பெற்றுக்கொள்ள முயற்சித்த போதும், அவர்களின் பதில் எதுவும் கிடைக்கவில்லை. (வ-21)

## அயலுறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் இனங்கள் மத்தியில் நல்லிணக்கம், ஒற்றுமை, அன்பு என்பவற்றை உருவாக்கும் பொருட்டு எனது அமைச்சு இந்த நடமாடும் சேவையைத் தொடங்கியது. இந்த சேவையினை வடக்கு மாகாண மக்களின் நன்மைக்காகவும் புலம்பெயர் மக்களின் நன்மைக்காகவும் நாம் ஏற்பாடு செய்தோம். எனது அமைச்சின் கொன்சிலர் (ஆலோசனைப்) பிரிவு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்களுக்கு சேவையைக் கொடுக்கிறது. இந்த நடமாடும் சேவையின் ஊடாக பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களைப் பெற்று வெளிநாடுகளில் தவிர்த்துக்கொண்டிருக்கும் இலங்கையர்களுக்கு இலகுவாக அனுப்பலாம். அவர்களை மீள இலங்கைக்கு அழைக்க உதவி செய்தல், கடவுச்சீட்டு சம்பந்தமான விவரங்களைப் பெற்றுக்கொள்ளுதல் உள்ளிட்ட பல விடயங்களையும், அவற்றுக்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர், அயலுறவு அமைச்சின் பிரிவு ஒன்றினை வடக்கு மக்களுக்காக திறப்பது சம்பந்தமாக ஒரு கோரிக்கையை முன்வைத்தார். நல்லிணக்கத்தின் அடிப்படையில் அயலுறவு அமைச்சகத்தின் பிரிவை அடுத்த ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் வவுனியாவில் அமைக்க தீர்மானித்துளோம். இது பற்றி சாதகமான முறையில் பரிசீலனை செய்து தேவை ஏற்படின் யாழ்ப்பாணத்தில் அமைப்பது தொடர்பில் ஆராயப்படும் - என்றார் மங்கள.

இதன்போது இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உரையாற்றுகையில்,

வடக்கில் உள்ள மக்கள் 27 வருட காலமாக முகாம்களில் வாழ விடப்பட்டுள்ளனர். இது மனச்சாட்சிக்கு விரோதமான செயல். ஆகவே இது தொடர்பில் நிழற்படங்களுடன் மன்றில் எடுத்துக்கூறவேண்டும். எமது மக்களின் பிரச்சினைகளையும் அவர்களது நிலமைகளையும் தெற்கில் உள்ள அரசியல் வாதிகள் வந்து நேரில் பார்க்க வேண்டும். வடபகுதி மக்கள்படும் துன்பங்களை அவர்கள் உணரவேண்டும். முகாம்களில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் கடற்தொழிலையே செய்து வாழ்கின்ற மக்கள். ஆகவே அவர்களின் பிரதேசங்கள் விடுவிக்கப்பட வேண்டும். அவர்களது துன்பங்களை அயலுறவு அமைச்சர் நேரில் பார்த்து மிக வருத்தப்பட்டார்.

இது தொடர்பில் அவரும் அரசுக்கு அழுத்தம் கொடுப்பார் என நம்புகிறேன். இதனால் அடுத்த ஆண்டுக்குள் மக்கள் மீள் குடியேற்றப்படுவதுடன் மயிலிட்டி துறைமுகத்தையும் பொதுமக்களிடம் ஒப்படைப்பார்கள் என்று நம்புகிறேன். மயிலிட்டி துறைமுகத்தில் தனியார் ஒருவர் வர்த்தகத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார் என்றால், ஏன் எமது மக்கள் அங்கு வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாதுள்ளது? நல்லாட்சி அரசினால் கூட இதைச்செய்ய முடியவில்லை என்பது மிக வருத்தமளிக்கிறது.

போராளிகளுக்கு ஊசி ஏற்றப்பட்டமை தொடர்பில் சம்பந்தப்பட்டபோராளிகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு அறிக்கைகளைப் பெற்று அதன் மூலமாக அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் - என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்ததாவது:

சுமார் 27 வருடங்களாக இவ்வாறானதொரு அலுவலகம் வடக்கில் அமைக்கப்பட வேண்டும் என்று பல ஆவணங்களை சமர்ப்பித்தோம். இறுதியாக இந்த விடயத்தில் தீர்வொன்றைப் பெற்றுக் கொண்டோம். அரசின் பொறுப்புக் கூறல் நடவடிக்கைகளில் ஒரு அம்சமாக இந்த நிகழ்வு அமையப் பெற்றிருப்பது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது - என்றார்.

(வ-4,101,ரி1,ரி4,106)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் அபிவிருத்தித் திட்டங்கள் எதிர்காலத்தில் பெரிய மாற்றங்களை உருவாக்கும். நுவரெலியா மாவட்டத்தில் உருளைக்கிழங்கு விவசாயம், பெரியளவில் முன்னேற்றமடைந்து வருகின்றது. இந்தக் கிழங்கு விவசாயத்தை ஊக்கப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் அதேவேளை இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்குக்குச் சென்ற வாரத்தில் 40 வீத வரியை அதிகரித்துள்ளோம். பெருந்தோட்ட மக்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக அவர்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு அடையச் செய்ய வீட்டு வசதிகள் மற்றும் காணி உரிமைகள் என்று அமைச்சர் திகாம்பரத்தின் அமைச்சின் ஊடாக நடை முறைப்படுத்தவே அவருக்கு அமைச்சுப் பதவியை நாம் வழங்கியுள்ளோம். அதேபோன்று உயர்தர வகுப்பில் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சி பெறுவதற்காக எதிர்காலத்தில் சகல வசதிகளும் கொண்ட உயர்தர விஞ்ஞானக் கல்லூரி இந்தப் பகுதியில் நிறுவப்படும். வீட்டுரிமை மாத்திரம் அல்ல, மலையக மக்களுக்கு கல்வி உரிமையும் அவசியம் என்பதை காப்பதற்காக கல்வி இராஜாங்க அமைச்சராக வே.இராதாகிருஷ்ணனுக்கு அமைச்சு வழங்கப்பட்டது.

இதேபோன்றே பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சகல விதமான அபிவிருத்திகளையும் தோட்ட தொழில் தொடர்பிலான அபிவிருத்திகளையும் எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு பெருந்தோட்ட கைத்தொழில்துறை அமைச்சை கடந்த ஓகஸ்ட் மாதம் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவுக்கு வழங்கப்பட்டது.

பெருந்தோட்டங்களில் வீடுகள், காணிகளை வழங்குவதற்கு அமைச்சர் திகாம்பரம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.பியதாஸ ஆகியோருக்கு அதிகாரங்கள் கொடுத்து ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டங்களை நிர்வாகம் செய்து வரும் கம்பனிகளில் சிலர் தமக்கான இலாபத்தினை மட்டும் எதிர்பார்த்துக் கொண்டு மக்களுடைய நலனை கவனிக்காது செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான கம்பனிகளிடமிருந்து இந்த பெருந்தோட்டங்களைப் பெற்று தேசிய மற்றும் வெளிநாட்டு கம்பனிகளுக்கு வழங்கி தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொள்பவர்களாக மாற்றம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை கண்டி முதல் அம்பாந்தோட்டை வரை அவிசாவளை, ஹொரண போன்ற பகுதிகளிலும் பெரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்வாறான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்லவும், பிரதேசங்கள் முன்னேற்றமடையவும் பெரிய சக்தி தேவைப்படுகின்றது. எதிர்காலத்தில் முன்னேற்றம் செய்யப்படும் இந்த சக்தியானது ஐக்கிய தேசியக் கட்சி மூலமாகவே கிடைக்கும். நாம் நாட்டைப் பாதுகாக்கவும் நல்லாட்சியைப் பாதுகாக்கவும் மக்கள் சக்தி அவசியமாக அமைய வேண்டும் என்பது வேண்டுகோளாகும்.

இளைஞர்களும் எதிர்காலத்தில் அரசியலுக்கு வரவேண்டும். மக்களுக்கான தெளிவூட்டல்கள் அவசியம். இதன் பிரதிபலிப்பு இளைஞர்களும் எதிர்கால அரசியலில் உள்வாங்கப்படுவர் - என்றார்.

(வ-5)

**பணியாளர் தேவை**

வல்வெட்டித்துறையில் இயங்கும் கிளினிக் ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த பெண் பிள்ளைகள் தேவை. (J 41589)(12.18)

**077 913 9990**

**CHIEF SECRETARY'S SECRETARIAT**
**NORTHERN PROVINCE**
**SELECTION OF CONSULTANTS**

REQUEST FOR EXPRESSION OF INTEREST FOR CONSULTANTANCY SERVICES TO IMPLEMENT PROVINCIAL MANAGEMENT INFORMATION SYSTEM (PROMIS)IN NORTHERN PROVINCE

**UNDER**

**North East Local Services Improvement Project (NELSIP)**

The Chief Secretary now invites eligible consultants to indicate their interest in providing the consultancy services to implement **Provincial Management Information System** in Northern Province.

Interested consultants must provide information indicating that, they are qualified to perform the services (brochures, description of similar assignments, experience in similar conditions, availability of appropriate skills among staff, etc). Consultants may associate documents to enhance their qualifications.

Consultants will be selected in accordance with the procedures set out in the current edition of the world Bank's Guidelines : **Selection and Employment of Consultants by world Bank Borrowers.**

Interested consultants may obtain further information at the address below from 29.08.2016 to 05.09.2016 between 8.30 am to 4.00 pm.

Office of the Deputy Chief Secretary - Finance,
Northern Province.
61/1, Nallur Cross Road,
Nallur, Jaffna.
Tel : **021 222 0850**
Fax : **021 222 0853**
**Email : npctreasury@gmail.com**

**Expression of interest must be delivered to the address above on or before 06.09.2016, 4.00 pm.**

**A.Pathinathan - Chairman,**
**Chief Secretary's Procurement Committee,**
**Chief Secretary's Secretariat,**
**63,Nallur Cross Road, Nallur, Jaffna.**
**29.08.2016**

(C/85049)(2.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஆட்சேர்ப்பு செய்கிறதாம் அல்-குவைதா

## *ஏசியன் ஏஜ் ஊடகம் தகவல்*

கொழும்பு, ஓக. 29

அல்-குவைதா தீவிரவாத இயக்கம் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் ஆட்சேர்ப்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக ஏசியன் ஏஜ் ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதிகளினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பரப்புரையை முறியடிக்கும் வகையில் அல்-குவைதாவும் பரப்புரைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அல்-குவைதா இயக்கம் தனது பரப்புரை நடவடிக்கைகளைத் தமிழ், மலையாளம் உள்ளிட்ட பிராந்திய மொழிகளில் அச்சு வடிவில் வெளியிடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

குறித்த அமைப்பின் ஊடக வலையமைப்பான உலக இஸ்லாமிய ஊடக முன்னணியின் காணொலிகள், கட்டுரைகள், செய்திகள் போன்றவற்றைப் பிராந்திய மொழிகளில், மொழி பெயர்ப்புச் செய்யும் பணியில் ஆள்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அல்-குவைதா அமைப்பு தென்னிந்தியா மற்றும் இலங்கையில் ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது இதுவே முதன்முறை எனவும் அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ் அன்சார் மற்றும் ஒலிவின் சரத்து ஆகிய தளங்கள் இளைஞர்களை இலக்கு வைத்து செயற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, சமூக ஊடக வலையமைப்புக்களின் ஊடாகவும் பரப்புரைகளை தீவிரப்படுத் தியுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (த-4)

# புதிய எம்.பிக்கள் தேவையில்லை எமக்கு

## *கூறுகிறார் பிரதமர் ரணில்*

கொழும்பு, ஓக. 29

தேசிய அரசுக்கு மேலும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லையெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வெலிமடைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊழியர் அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரதமர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது-

தேசிய அரசில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் வந்து தியாகத்துடன் போட்டியிட்டு, வெற்றியீட்டிய ஒரு குழுவினர் உள்ளனர். இதன் பின்னர், தேசிய அரசுடன் வந்து இணைந்தவர்களும் உள்ளனர்.

இவ்வாறிருக்கையில், தேசிய அரசின் நுழைவாயிலை மீண்டும் திறப்பதற்கு எந்தத் தேவையும் இல்லை. தற்போது அது மூடியுள்ளது- என்றார். (த-4)

P.P.T Expressஇன் மற்றும் ஒரு விரிவாக்க சேவை






☑ பகல் இரவு சேவையாக விஸ்தரித்துள்ளது
☑ காலை 6.30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து யாழ் நகர் வந்து, காலை 7.30 மணிக்கு கொழும்பு நோக்கிப் பயணிக்கும்.
☑ கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு கொட்டாஞ்சேனை ஊடாக யாழ்ப்பாணம் வந்து பருத்தித்துறை செல்லும்.
☑ காங்கேசன்துறையிலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் ஊடாக கொழும்பு நோக்கிப் பயணிக்கும்.
☑ வழமைபோன்று இரவு சேவைகளும் நடைபெறுகின்றன.
மேலும் இலங்கையின் முதற்தர துரித வெளிநாட்டு பொதிகள் சேவைகளுடாக உங்கள் உறவுகளின் இல்லங்களுக்கு பொதிகள் துரிதமாக கையளிக்கப்படும்.
☑ யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் பொதிகள் சேவை நடைபெறுகின்றன.



இலங்கையில் சுற்றுலா பயணத்துக்கு உரிய பஸ்சேவைகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

email : info@ppttravel.com web : www.ppttravel.com

Colombo - 06
#296 A1, Galle Road, Wellawatte, Colombo - 06.
076 6036204 / 011 2364999. Fax: 011 2361144

Colombo - 13
#182, Central Road, Colombo-12,
077 5755175 / 011 4375790

Jaffna
#183, K.K.S. Road, Jaffna.
077 5731318 / 0214923240

Point Pedro
Arasadi Lane, Point Pedro.
021 4923724 / 077 573 6003

edexcel | UNIVERSITY OF WOLVERHAMPTON | London South Bank University | PEARSON

After A/Ls...

UGC அங்கீகாரம் கொண்ட | UK Degree
பட்டப்படிப்புகளை யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பு...

INTAKE NOW ON

UGC Recognized
TVEC Approved

ENG ENGINEERING
Civil & Construction
Telecommunication
Electrical | Electronics

IT COMPUTING & SYSTEM DEVELOPMENT

LLB LAW

BM MANAGEMENT
Business Management | Marketing
Human Resource Management

BMS BIOMEDICAL SCIENCE
BIOTECHNOLOGY

QS QUANTITY SURVEYING

BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)




17 YEARS

ISO 9001:2008 CERTIFIED

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF

CALL 077 710 2131

Jaffna Campus
16, Point Pedro Road,
Jaffna.

Corporate Office
32, Dharmarama Road,
Colombo 6.
T: 011 258 5391

HOTLINE : 021 221 9910

Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சியைப் பலமாக்க வெளிநாட்டுக் குழு

## அழைக்கின்றது ஐ.தே. க.

கொழும்பு, ஓக. 29
ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஊக்குவிப்புத் திட்டத்துக்கென வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வரவழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஊக்குவிப்புத் திட்டத்துக்கு ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள இவர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இதற்காக வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குழு ஒன்று இலங்கை வந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

உலகிலுள்ள பிரதான நாடுகளின் அரசியல் கட்சிகளின் வெற்றிக்கான ஆலோசனைகளை வழங்கிவரும் குழுவினரே இவ்வாறு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு வாரங்கள் நாட்டில் தங்கியிருக்கும் இவர்கள், உறுப்பினர் ஊக்குவிப்புத் திட்டத்துக்கு ஆலோசனை வழங்கவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-4)

### விகாரை அமைப்பு;

# பிரதமருடன் பேசி தெளிவான முடிவு

## மிகவிரைவில் எட்டப்படும் என்கிறார் மாவை எம்.பி



கொழும்பு, ஓக. 29
தமிழர் தாயகப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுவரும் பௌத்த விகாரைகள், சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரதமருடன் அடுத்த வாரம் அவசரக் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடவுள்ளனர். இதன்போது இந்தப் பிரச்சினைகளுக்குத் தெளிவான முடிவு எட்டப்படும்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

வடக்கு–கிழக்கு உள்ளிட்ட தமிழர் தாயகப் பிரதேசங்களில் பௌத்த மேலாதிக்கச் சிந்தனையில் விகாரைகள் அமைத்தல், திட்டமிட்ட குடியேற்றங்கள், இடம்பெயர்ந்து வாழும் மக்களின் மீள் குடியேற்றங்கள், பனை அபிவிருத்திச் சபையின் நிலைப்பாடுகள், வடக்கு–கிழக்கு மாகாண நிர்வாகச் சீர்கேடுகள் தொடர்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நாடாளுமன்றக் கட்டட பிரதமர் அலுவலகத்தில் கலந்துரையாடப்பட்டது.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் இராணுவத் தேவைக்காக பெருமளவான தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளைச் சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறித்த விடயங்கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாம் துறை சார்ந்த, அமைச்சர்கள், செயலாளர்கள், அதிகாரிகளுடன் கலந்துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் அடுத்த வாரம் நடைபெறும் சந்திப்பில் பதிலை வழங்குவதாகத் தெரிவித்தார்.

அடுத்த வாரம் தொடக்கம் தொடர்ச்சியான சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள் மேற்கொண்டு வடக்கு–கிழக்கில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்–என்றார்.

இதேவேளை – நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், கூட்டமைப்பு சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

---

## நெஞ்சைவிட்டகலாத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**செல்லத்துரை இராசேஸ்வரன் (வவி)**



மண்ணில்
21.07.1955

விண்ணில்
10.09.2015

திதி : அபரபக்ஷ துவாதசி (29.08.2016) திங்கட்கிழமை

ஓராண்டு ஆன போதிலும் உன் நினைவுகள் நீங்கவில்லையே
வாழ்வில் மங்கல விளக்கேற்றி வைத்த தெய்வமானாயே
குடும்பத்திற்காய் மெழுகுவர்த்தியானாயே பசிதீர்த்த உத்தமனே
மௌனமாய் மலரவன் அடி சென்றதேனோ ?
சென்ற வழி தேடி ஈரவிழி தவிப்பதேனோ ?
அறுபது வயதினிலே கண்டம் வந்ததேனோ ?
எத்தனை ஜென்மம் ஆனாலும் பிரியாத வரம் வேண்டி
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (29.08.2016) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் (சிரார்த்தம்) திவச நிகழ்வில் கலந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஓம் சாந்தி .

40, பழம் வீதி,
கந்தர் மடம் , யாழ்ப்பாணம்
021 492 1167
077 217 7973

மனைவி - திருமதி பரம்சோதி லீலா இராசேஸ்வரன்
மகன் - இரா. பிருந்திகன்.
(J.4075) (13.18)

---

## வாழும் உரிமை பறிக்கப்பட்டதன் 10ஆம் ஆண்டு நினைவு

**ஜேசுதாசன் டேமியன்**



தாயின் மடியில்
26.10.1975

மண்ணின் மடியில்
29.08.2006

"ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது"

என்ன தவம் நாம் செய்வோம் மீண்டும் உனைக்காண,
வாழ்வில் நிஜங்கள், நினைவுகள் கண்முன்னே
மாற்றிடும் சக்தி எதற்குண்டு?
ஒரே கருவறையில் உருவாகி, தந்தை தாய் ஏங்கித் தவிக்க
உற்ற உறவுகள் அனைவர் முன் நிஜமாக வந்து
போகின்றீர்
ஏனோ ஓடிச் சென்று பார்த்திட்டால் எல்லோர்
வீட்டிலும் படமாகத்தான் இருக்கின்றீர்
ஐயனே டேமி! நீங்கள் சொந்தங்களுக்கு அத்திபாரம்,
எம் ஊரின் ஆரவாரம்
நாம் பூஜிக்கும் கண்கண்ட தெய்வமே!
அடைக்கல் தாய் தவறியதேன்
அன்று உனைக் காத்திட
கண்களில் விழிநீர் இல்லை...
எம்மை நிஜமாகப் பார்க்க மீண்டும் வாராயோ...

உன் பிரிவால் துயருறும்
தாய், தந்தை, சகோதரர்கள்,
சகோதரிகள் மற்றும் மனைவி,
அன்பு மகன் டேனுஜா
இல.9/1, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
இல.186, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(லே/4146) (11.17 18.)

---

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
17 . 05 . 1940

விண்ணில்
01 . 09 . 2013

**அமரர் சங்கரப்பிள்ளை நாகராஜா**

மனிதரில் மாணிக்கமாய் பண்புடனும்
பாசத்துடனும் வாழ்ந்து விண்ணுலகில்
தெய்வமாகிவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் உழைப்பினால் உயர்ந்த எம் வாழ்க்கை
உயிர் உள்ளவரை எம் நினைவுகளை விட்டு நீங்காது.

துபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**மகேஸ்வரி (கமலா) இரட்ணசபாபதி**

கடந்த 28.07.2016 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 27.08.2016 சனிக்கிழமை நடைபெற்றது. மதிய போசன நிகழ்வு இன்று (29. 08.2016) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், மலர்வளையம், துண்டுப்பிரசுரம், பதாகைகள் மூலம் அஞ்சலி செலுத்திய யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானப்பீடம், விலங்கியல்துறை, யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ் கல்வி வலயம், தனியார் கல்வி நிறுவனங்கள் அனைவருக்கும், தொலைபேசியூடாகவும் மின்னஞ்சல் ஊடாகவும் வெளிநாட்டிலிருந்தும், உள் நாட்டிலிருந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றி நவிலலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

93, பலாலி றோட்,
திருநெல்வேலி.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 28
நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் தெய்வீக இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மிக உரைகள் என்பன நடைபெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள 22ஆம் நாள் திருவிழாவில் நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் 'ஈழத்தில் முருக வழிபாடு' எனும் தலைப்பில் ஆசிரியர் இ.மகேஸ்ராஜின் தெய்வீகச் சொற்பொழிவு மாலை 5 மணி முதல் இரவு 7.30 மணி வரையும், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையில் தெய்வீக இசையரங்கம் மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணி வரையும், நல்லை ஆதீன மண்டபத்தில் மொபேர்ண்சுவதேச இந்து ஆகம கலை, கலாசார நிறுவனத்தின் தெய்வீக இசைச் சங்கமம் இரவு 7 மணி முதல் 8 மணி வரையும் நடைபெறவுள்ளன. (த-ரி)

# அறநெறி மாணவரின் கலை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 29
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகியம்மன் ஆலயங்களின் அற நெறிப் பாடசாலையின் கலை நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகி இடம் பெற உள்ளன. (தி)

# சீர்திருத்த அலுவலர்களுக்கு நான்கு நாள் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஓக 29
சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தினர் வடக்கு மாகாண நீதிமன்றங்களில் பணிபுரியும் சீர்திருத்த அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் அபிவிருத்தி அலுவலர்களுக்கான நான்கு நாள் பயிற்சி நெறியை நேற்றுச் சாவகச்சேரியில் ஆரம்பித்துள்ளனர்.

நேற்று பிரதேச செயலகங்களில் பணிபுரியும் அபிவிருத்தி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றன.

இன்று தொடக்கம் 31 ஆம் திகதி வரை நீதிமன்றங்களில் பணிபுரியும் சீர்திருத்த அலுவலர்கள், பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர்களுக்கான பயிற்சிப் பட்டறை சாவகச்சேரி டச்சு வீதி ஐங்கரன் மணி மண்டபத்தில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய பயிற்சி வகுப்பில் திணைக்கள ஆணையாளர் டி.எல்.சனசூரிய, உதவி ஆணையாளர் லயனல் குணதிலக ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-9)

### வீடமைப்புப் பணியின்போது

# மாற்றுத் திறனாளிகளின் நலன்கள் புறக்கணிப்பு

## மக்கள் கருத்தறியும் செயலணியிடம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக. 29
வடக்கு-கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களினால் வழங்கப்படும் வீட்டுத் திட்டங்களின்போது, தமது வசதிகள், தேவைகள் பற்றிக் கவனம் செலுத்தப்படுவதில்லை எனப் போரினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

போருக்குப் பின்னர் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அரசினாலும் அரச சார்பற்ற அமைப்புக்களினாலும் பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இதனைத் தவிர இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய வீடுகளும் அரசின் தெரிவு ஊடாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குக் கிடைத்துள்ளன. இந்த வீடுகளைப் பொறுத்த வரை கழிப்பறை, வீட்டு நுழைவாயில் உட்படப் பல பகுதிகள் மாற்றுத் திறனாளிகளுக்குரிய வசதிகளைக் கொண்டதாக இல்லை எனக் கிழக்கு மாகாணத்தில் தற்போது நடைபெறும் நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான மக்கள் கருத்தறியும் செயலணியின் அமர்வுகளிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளியொருவரைக் கொண்டுள்ள குடும்பத்துக்குக் கிடைக்கும் வீடு அவருக்கு ஏற்ற வசதிகளைக் கொண்டதாகவே இருக்க வேண்டும் என்கிறார் கட்டைபறிச்சானைச் சேர்ந்த முன்னாள் போராளியான கவிதா சீவரத்தினம்.

போரில் காயமுற்று முதுகுத் தண்டு பாதிப்புக்குள்ளான பவானி வைரமுத்து, இடுப்புக்குக் கீழ் உணர்ச்சியற்ற நிலையில் தற்போது மாற்றுத் திறனாளி என்ற அடையாளத்துடன் சமூகத்தில் உள்ளார்.

நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான மக்கள் கருத்தறியும் செயலணி முன்னிலையில் போர் காரணமாக மாற்றுத் திறனாளியானோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்வைத்த அவர், தங்களுக்கு வழங்கப்படுகின்ற வீடுகள் மாற்றுத் திறனாளிகளுக்குரிய வசதிகளைக் கொண்டதாக இருக்கும் என அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களினால் கூறப்பட்டிருந்தபோதும் அவ்வாறு அமையவில்லை என்று கூறினார்.

கழிப்பறை, வீட்டு நுழைவாயில், நீர் மற்றும் மின்சார வசதிகள் என்பன மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்றவகையில் அமைக்கப்படவேண்டும் என்ற கருத்தையும் கவிதா சீவரத்தினம் வலியுறுத்தினார்.

மீள்குடியேற்ற அமைச்சினால் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 10 ஆயிரம் வீடுகள் அடிப்படை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. இதனைத் தவிர 7,500 கழிப்பறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவை மாற்றுத் திறனாளிகளுக்குரிய வசதிகளைக் கொண்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளும் அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி, எதிர்காலத்தில் வீடுகள் மற்றும் கழிப்பறைகள் அமையும் போது மாற்றுத் திறனாளிகள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படும் -என்றார்.

ஏற்கனவே இது தொடர்பாக மாவட்டச் செயலர்கள் அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கும் அவர், அவர்களின் கருத்துக்களையும் பெற்று மாற்றுத் திறனாளிகளுக்குரிய வீடுகள் மற்றும் கழிப்பறைகள் அமைக்கப்படும் என்றும் கூறினார்.

ஏற்கெனவே வீடுகள், கழிப்பறைகளைப் பெற்றுள்ளவர்கள் தொடர்பாகவும் அமைச்சு கவனம் செலுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார். (த-4)

# வர்த்தக நிலையங்கள் தேருக்காக விடுமுறை

## வணிகர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 29
நல்லூர்க் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழாவை முன்னிட்டு சகல வர்த்தக நிலையங்களுக்கும் விடுமுறை வழங்கவேண்டும் என யாழ். வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. யாழ். வணிகர் கழகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்துக்கு அமையவே நல்லூர் ஆலய தேர்த்திருவிழாவான எதிர் வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை அனைத்து வர்த்தக நிலையங்களுக்கும் விடுமுறை வழங்குமாறும், அத்துடன் பொதுமக்களின் நன்மை கருதி அத்தியாவசிய தேவைகளான மருந்தகங்கள் மற்றும் உணவகங்களைத் திறந்து வழமை போன்று சேவைகளை வழங்குமாறும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-ரி)

# எம்.ஐ. கிறீன் மிளகாய் விதைக்குத் தட்டுப்பாடு

## விரைவில் தருவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக .29
யாழ். குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் எம்.ஐ. கிறீன் இனத்தைச் சேர்ந்த மிளகாய் விதைகளை விரைவில் தருவிக்கவுள்ளது.

தற்போது இந்த எம்.ஐ. கிறீன் மிளகாய் விதைகளுக்கு குடாநாட்டில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மிளகாய் விதைகளைப் பெறுவதற்கு விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர். அதிக விளைச்சலைப் பெறக்கூடிய இந்த மிளகாய் விதைகளைத் தருவிப்பதற்கு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. பெரும்பாலும் இந்த வாரத்தில் ஒரு தொகுதி எம்.ஐ. கிறீன் மிளகாய் விதைகளைத் தெற்கில் இருந்து தருவிப்பதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார். (த-17)

# காலபோகச் செய்கைக்கு ஆயத்தப் பணிகள் ஆரம்பம்

## மழை பெய்ததை அடுத்து

தென்மராட்சி, ஓக. 29
தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் காலை மழை பெய்ததையடுத்து பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளை நெற் செய்கையாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

வயல்களுக்கு வரம்புகள் கட்டுதல் மற்றும் வாகனங்களில் குப்பைகள் கொண்டு சென்று வயல்களில் பறிக்கும் வேலைகளை தற்போது ஆரம்பித்துள்ளனர். (த-9)


# மரண அறிவித்தல்



## திருமதி கனகம்மா பரமநாதன்

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா பரமநாதன் நேற்று (28.08.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வாரித்தம்பி பரமநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, கந்தசாமி மற்றும் குமாரசுவாமி, சின்னத்தம்பி (கிட்டு), தர்மலிங்கம், இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீதரன், ஸ்ரீரஞ்சினி (சுவிஸ்), ஸ்ரீசுதன்(சுவிஸ்), மாலினி, நளினி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காஞ்சனா, கோபாலகிருஷ்ணன் (சுவிஸ்), காயத்திரி (சுவிஸ்), ஜெகதீஸ்வரன், பிரபாகரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், திஷானி, நர்மதா, டிலோஜினி, மேனுஜா, நிவேதன், நிதுஷா, நிகேஷன், மீனுஷா, மேகலா, தனுஷ், பவதர்சனா,தஷாந், தர்சா, அனந்த், அபிராமி, மிதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2016) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

48/2, ஐயனார் கோயில்வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: 077 756 9746 - ஜெகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமணத்துக்கு லாண்ட் மாஸ்ரரில் சென்ற மணமக்கள்

வவுனியா, ஓக. 29

லாண்ட் மாஸ்ரரில் மண்டபத்துக்குச் சென்று திருமணம் புரிந்த விசித்திர சம்பவம் ஒன்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் இணையத்தளங்களிலும் பரவலாக பதிவாகியுள்ளது.

வவுனியா றோயல் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற திருமண நிகழ்வுக்காக வவுனியா சிதம்பரபுரத்தில் இருந்து மணமகன்-மணமகள் உட்பட நண்பர்கள் பலர் லாண்ட் மாஸ்ரரில் சென்றுள்ளனர். மண்டபத்துக்குச் செல்லும்போது லாண்ட் மாஸ்ரர் வவுனியா வீதி வழியாகச் சென்றுள்ளது. இது அங்குள்ள மக்கள் மத்தியில் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. பலர் இதனை வேடிக்கை பார்த்துள்ளார்கள். இந்தச் சம்பவம் இணையத்தளங்கள், சமூகவலைத்தளங்களில் பரவலாகப் பதியப்பட்டிருந்தது. இதுபற்றிய கருத்துக்களையும் பலர் பகிர்ந்து கொண்டனர். பாரம்பரியங்களை வெளிப்படுத்துவதாகத் தெரிவித்து மணமகன்- மணமகள் மாட்டுவண்டியில் மண்டபத்துக்குச் சென்று திருமணம் புரிந்த சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் பல தடவைகள் பதிவாகியிருந்த நிலையில் வவுனியாவில் இந்த விசித்திரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (த-21)

# ஓமந்தைக் காணிகளை விடுவித்துத் தாருங்கள்


## இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் உரிமையாளர்கள் கோரிக்கை

வவுனியா, ஓக. 29

இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டு வவுனியா ஓமந்தை சோதனைச்சாவடி அமைக்கப்பட்ட தனியார் காணிகளை மீளப் பெற்றுத் தாருமாறு காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏ-9 வீதியின் இரு புறங்களிலும் ஓமந்தைச் சோதனை நிலையம் அமைந்திருந்த பல ஏக்கர் காணிகள் தனியாருக்குச் சொந்தமானவை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

"கடந்த காலங்களில் இடம்பெற்ற போரினால் நாங்கள் ஓமந்தையில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவுக்குச் சென்று விட்டோம், அன்று தொடக்கம் இன்று வரை 22 வருடங்களாக வாடகை வீட்டிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றோம். தற்போது போர் நிறைவு பெற்று ஏழு ஆண்டுகள் கடந்த நிலையில் நல்லாட்சி அரசு ஒன்று ஏற்பட்டுள்ளது எனச் சொல்லப்படுகின்றது. ஆயினும் எமது காணிகள் மீள விடுவிக்கப்படவில்லை. சொந்தக் காணிகளை இனியாவது மீட்டுத் தாருங்கள்" என்று காணிகளின் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



"ஓமந்தைச் சோதனை நிலையம் எங்களுடைய நான்கு ஏக்கர் காணியையும் உள்ளடங்கியே அமைக்கப்பட்டுள்ளது. தற்போது அந்தச் சோதனை நிலையத்தில் முன்னைய காலங்கள் போன்று சோதனை இடம்பெறுவது கிடையாது. இனியும் நாங்கள் சொந்த மாவட்டத்துக்குள் இடம்பெயர்ந்த மக்களாக வாழ முடியாது. காணியை மீண்டும் எங்களுக்கு வழங்குவதற்கு உரிய அரசியல்வாதிகள், அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுவரை காலமும் காணி ஆவணங்களுடன் பிரதேச செயலகம். மாவட்டச் செயலகம், அரச தரப்புகள் எனப் பலரையும் சந்தித்து காணியை மீட்டுத் தருமாறு கோரியும் பலன் கிடைக்கவில்லை.

நாங்களும் எமது காணிகளில் குடியமரவேண்டும் என்ற ஆவலுடன் இருக்கின்றோம். எனது குடும்பத்தின் எதிர்காலம் கருதி நல்லாட்சி அரசு என்று சொல்லப்படுகின்ற இந்த ஆட்சியிலாவது காணியை மீட்டுத்தருமாறு கேட்டு கொள்கின்றேன்" என்று காணி உரிமையாளர்களில் ஒருவரான சிவபாதசுந்தரம் தெரிவித்தார். (த-21)

# குடாக்கடல் மீன்பிடியில் பெரும் வீழ்ச்சி நிலை

## கடலுணவுகளின் விலைகள் உச்சம்

யாழ்ப்பாணம், ஓக.29

குடாநாட்டுக் கடற்பரப்பில் மீன்களின் பெருக்கம் மிக மிக குறைந்துள்ளதாகக் கரையோரப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீனவர்களின் வலையில் தினமும் குறைந்தளவு கடலுணவுகளே பிடிபடுகின்றன. இந்தக் கடலுணவுகள் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு கடற்றொழிலை மேற்கொள்ளும் செலவுகளைக்கூட ஈடு செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

போதியளவு கடலுணவுகள் பிடிபடாதமையால் மீனவர்களின் நாளாந்த வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று தீவுப்பகுதி, வடமராட்சி கடற்பகுதியிலும் இவ்வாறான நிலை ஏற்பட்டிருப்பதாகக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போதைய காலநிலை வேறுபாடும் மீன்களின் பிடிபாடு குறைந்தமைக்கு முக்கிய காரணம் என்றும், பெரும்பாலும் ஒக்ரோபர் மாதத்தில் வாடைக் காற்றுக்குப் பின்னர் மீன்களின் பிடிபாடு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்றும் கூறிய அவர், இந்திய மீனவர்களின் இழுவைப் படகுத் தொழில் மூலம் கடல்வளம் அருகிச் சென்றுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

குடாநாட்டில் இவ்வாறு கடலுணவுகளுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையினால் அவற்றின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன. கடலுணவு விலை அதிகரிப்பால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆலய மகோற்சவங்கள் இடம்பெற்று வரும் நிலையில், அதிகமான மக்கள் மரக்கறி வகைகளையே பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறான நிலையிலும் கடலுணவுகளின் விலையோ மிக அதிகரித்துச் செல்கின்றது.

யாழ். கொட்டடி மீன் சந்தையில் இறால் கிலோ 800 ரூபாவாகவும், பெரிய மீன் கிலோ 900 ரூபாவாகவும், சிறிய மீன்கள் கிலோ 500 ரூபாவாகவும், முதற்தர நண்டு கிலோ 700 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன. (த-17)

45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
ஸ்ரீதரன்
விஜயநதியா

தோற்றம்
10.03.1987

மறைவு
16.07.2016

அமரர் ஸ்ரீதரன் விஜயநதியா அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (29.08.2016) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதமாய் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மன் கோவில் வீதி,
நாவற்குழி கிழக்கு,
தச்சன் தோப்பு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 790 4115



# மரத்துடன் மோதுண்டு ஹை-ஏஸ் வான் விபத்து

## படுகாயமடைந்தார் சாரதி

வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஹை-ஏஸ் வான் வீதியின் அருகே இருந்த மரம் ஒன்றுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் வான் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இயக்கச்சிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த ஹை-ஏஸ் வான் இயக்கச்சிப் பகுதியில் ஏ-9 வீதியின் மறுபக்கத்தில் இருந்த மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்து சாரதி நித்திரை தூங்கியதால் இடம்பெற்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

விபத்தில் காயமடைந்த வான் சாரதி கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகின்றார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனப் பளை பொலிஸார் தெரிவித்தனர். (த-21-27)

# வடமராட்சி கிழக்கில் வீடமைப்புப் பணி துரிதம்

வடமராட்சி கிழக்கில் அரச வீட்டுத் திட்டத்தில் தற்போது 15 வீடுகளின் கட்டுமானப் பணிகள் நிறைவு [illegible] [illegible] அமைக்கும் திட்டத்தில் பெரும்பாலான வீடுகளின் கட்டட நிர்மாணப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார். தற்போது வீடுகளின் கட்டுமானங்களுக்கு ஏற்றவாறு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் அனேகமானவர்களுக்கு மூன்றாம், நான்காம் கட்டக் கொடுப்பனவுகள் விரை வில் வழங்கப்படும். குறிப்பாக வீடுகளின் கட்டுமானப் பணிகள் நிறைவுற்ற பயனாளிகளுக்கும் மீதிக் கொடுப்பனவுகள் விரைவில் வழங்கப்படும் என்று அவர் கூறினார். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒதுக்கியதே ரூ. 1,450 மி. என்றால் ரூ. 6,000 மி. எப்படித் திரும்பும்?

## ஆளுநரிடம் கேட்கிறார் கல்வி அமைச்சர்

யாழ்ப்பாணம், ஓக. 29
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு ஆயிரத்து 450 மில்லியன் ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டது. அவ்வாறான நிலையில் எப்படி 6 ஆயிரம் மில்லியன் ரூபா பணம் திரும்ப முடியும் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கேள்வி எழுப்பினார். வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 6 ஆயிரம் மில்லியன் ரூபா திறைசேரிக்குத் திரும்பவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் கூரே கிளிநொச்சியில் வைத்துத் தெரிவித்திருந்தார்.
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு 4 ஆயிரம் மில்லியன் ரூபா அனுமதிப்பதாகக் கூறப்பட்டது. இருப்பினும் ஆயிரத்து 450 மில்லியன் ரூபா மாத்திரமே வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக அனுமதிக்கப்பட்டது. அவ்வாறான நிலையில் எப்படி 6 ஆயிரம் மில்லியன் ரூபா திருப்பி அனுப்பப்பட முடியும்? எமக்கு வழங்கப்பட்ட பணத்துக்குரிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. நாம் கோரிக்கை விடுத்த எஞ்சிய பணத்தை வழங்குமாறு கோரி, கொழும்பில் திறைசேரியில் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் நான் கோரிக்கை விடுத்தேன் - என்றார் அமைச்சர். (உ-5-10)



# நல்லூர் உற்சவத்துக்காக ரயிலில் மேலதிக பெட்டி

யாழ்ப்பாணம், ஓக. 29
நல்லூர் ஆலயத் தேர் உற்சவத்தை முன்னிட்டுப் பயணிகளின் நலன் கருதி வழமையான ரயில் சேவையில் மேலதிக பெட்டி இணைக்கப்பட்டு பணி இடம்பெறவுள்ளதாக யாழ். ரயில் நிலைய அதிபர் தி.பிரதீபன் தெரிவித்தார்.
கல்கிசையில் இருந்து அதிகாலை 5.10 மணிக்குப் புறப்பட்டு,கொழும்புகோட்டையைச் சென்றடைந்து, பின்னர் அங்கிருந்து 5.45 மணிக்குப் புறப்படும் குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயிலிலும், காங்கேசன்துறையிலிருந்து பி.ப. 1.15 மணிக்குப் புறப்பட்டு, பி.ப. 1.45மணிக்கு யாழ்ப்பாணம் வரும் குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயிலிலும் எதிர்வரும் 30ஆம், 31 ஆம் திகதி மற்றும் செப்ரெம்பர் முதலாம் திகதி ஆகிய தினங்களில் மேலதிகமாகக் குளிரூட்டப்பட்ட ஒரு பெட்டி இணைக்கப்பட்டுள்ளது.
இந்தப் பெட்டிக்கான ஆசன ஒதுக்கீடுகள் தற்பொழுது நடைபெறுகின்றன. நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழா மற்றும் தீர்த்தோற்சவத்துக்கு வருகை தரும் பயணிகள் இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (த-ரி)

# ஓட்டுத் தொழிற்சாலையின் பணியாளருக்கு மீள்நியமனம்

## இல்லையேல் நட்ட ஈடு வேண்டும் வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக. 29
ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழில்சாலையில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு மீள்நியமனம் வழங்கப்பட வேண்டும் அல்லது நட்ட ஈடு வழங்கப்படவேண்டும். வடக்கு மாகாண சபையினால் மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபையின் 60 ஆவது அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது முல்லைத்தீவு மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரனினால் கொண்டு வரப்பட்ட மேற்படி பிரேரணையே சபையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.
1961 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை 1971 ஆம் ஆண்டு இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. பணிபுரிந்த ஊழியர்கள் அனைவருக்கும் இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபன ஊழியர்களாக உள்வாங்கப்பட்டுள்ளார்கள். 1990 ஆம் ஆண்டு இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டதிலிருந்து பாதிக்கப்பட்ட பணியார்களுக்கு எந்தவித கொடுப்பனவுகளோ, நட்டஈடுகளோ இன்றுவரை வழங்கப்படவில்லை. எனவே பாதிக்கப்பட்ட 74 ஊழியர்களுக்கும் நட்டஈடு பெற்றுக் கொடுக்கவேண்டுமென சபையில் பிரேரணை முன்மொழியப்பட்டது. வழிமொழிந்த பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன், நட்டஈடு என்று சொல்கிறார்கள். அதில் ஒன்றைச் சேர்க்க வேண்டும். 74 பேருக்கும் மீள்நியமனம் வழங்க வேண்டும் அல்லது நட்டஈடு வழங்க வேண்டும்.
அதே காலப் பகுதியில் மூடப்பட்ட தொழிற்சாலைகளில் உள்ளவர்களுக்கு தொழிலாளர்கள் என்று கருதி இன்று வரை சம்பளத்தை வழங்கி வருகிறார்கள். எங்களுக்கு அது மறுக்கப்பட்டது. அவர்களுக்கு அதே வேலையைக் கொடுக்க வேண்டும் அல்லது நட்டஈடு கொடுக்க வேண்டும் - என்றார்.
பிரேரணை திருத்தங்களுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அவைத் தலைவர் அறிவித்தார். (த-5-ரி1-ரி7)

# 25 மாணவரின் உயிர் காத்த சாரதி மாரடைப்பினால் சாவு

## மல்லாவியில் இருந்து குருநாகல் சென்றவேளை சம்பவம்

மாங்குளம், ஓக. 29
சாரதியின் சமயோசிதச் செயற்பாட்டால் 25 மாணவர்களின் உயிர் காப்பற்றப்பட்டதுடன் உடல் நலக் குறைபாட்டால் சாரதி உயிரிழந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
சம்பவத்தில்மல்லாவி அனிஞ்சியன் குளம் பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான செல்லத்துரை பிரான்சிஸ் (வயது - 43) எனும் தனியார் பஸ் சாரதியே உயிரிழந்தவராவார்.
இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:
மல்லாவியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு அரச சார்பற்ற பொது அமைப்பு ஒன்றினால் இசைக்கருவிகளை மீட்டும் பயிற்சி வழங்கப்படுகின்றது. இந்த மாணவர்களில் 25 பேர் கொண்ட அணி ஒன்று கடந்த 24 ஆம் திகதி புதன்கிழமை மல்லாவி தனியார் பஸ் ஒன்றின் மூலம் தென்பகுதிக்குச் சுற்றுலா செல்வதற்கு இசைப் பயிற்சி வழங்கும் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.
சுற்றுலா சென்ற மாணவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை குருநாகலிலிருந்து கண்டியை நோக்கி மலைப்பாதைஊடாகப்பயணத்தை ஆரம்பித்தனர். மாணவர்கள் பயணித்த பேருந்தின் சாரதிக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பேருந்தை நிறுத்திய சாரதி தன்னால் தொடர்ந்து பேருந்தைச் செலுத்த முடியாதிருப்பதாகவும், நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளதாகவும் கூறியிருந்தார். இதனை அடுத்து மாணவர்களால் சாரதி குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார் வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.
மலைப் பாதையில் சாரதி பேருந்தை நிறுத்தாது சென்றிருந்தால், சாரதிக்கு ஏற்பட்ட நெஞ்சுவலியில் அந்த 25 மாணவர்களுக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கலாம். அவரின் சமயோசிதச் செயற்பாட்டால் மாணவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன எனக் கூறிய மல்லாவிப் பிரதேசத்தைச் சேர்ந்த பாட சாலைகளின் மாணவர்கள், உயிரைக் காத்த சாரதியின் செயலை எண்ணி நெஞ்சம் நெகிழ்ந்ததோடு, இடைநடுவில் தமது பயணத்தை நிறுத்தி விட்டுச் சாரதியின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக மல்லாவி திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-422)

# 7 மாகாண பெண் சாரணியர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்

யாழ்ப்பாணம், ஓக. 29
அகில இலங்கைப் பெண் சாரணியர்களின் ஏற்பாட்டில் 7 மாகாணங்களிலும் இருந்து பெண் சாரணியர்களும், சாரணிய வழிகாட்டுநர்களும் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.
பிரதம பெண் சாரணிய விருது செயற்பாட்டுக்காக 7 மாகாணங்களிலும் உள்ள பெண் சாரணியர்கள் மற்றும் சாரணிய வழிகாட்டுநர்கள் என 155 பேர் இவ்வாறு வருகைதந்துள்ளனர்.
இவர்க்ள் நேற்று ஞாயிற்றுக் கிழமை நல்லூர்க் கந்தசுவாமி கோயில், பெருமாள் கோயில் ஆகியவற்றுக்குச் சென்று சிரமதானப் பணி மேற்கொண்டதுடன், இன்று நயினை நாகபூசணி அம்மன் கோயிலுக்குச் செல்லவுள்ளனர்.
பெண் சாரணிய யாழ். மாவட்ட ஆணையாளர் திருமதி நீலா தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவர்களுக்கான வரவேற்பு நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பெண் சாரணியர்களும், சாரணிய வழிகாட்டுநர்களும் கலந்துகொண்டனர். (த-ரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு உற்பத்தி நிலையம் சுண்டிக்குளத்தில் சிக்கியது

வவுனியா, ஓக. 29
புளியம்பொக்கணை ,சுண்டிக்குளம் களப்புப் பகுதியில் இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை முற்றுகையிட்டு 4 பரல்களில் இருந்த 792 போத்தல் கோடா மற்றும்கசிப்புஉற்பத்திசெய்வதற்கான உபகரணங்களை நேற்று முன்தினம் மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இரகசியத் தகவலை அடுத்து, தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். சத்துரங்க தலைமையிலான குழுவினர் குறித்த பகுதிக்குச் சென்று முற்றுகையிட்டு இவற்றை மீட்டனர். 45 போத்தல் கசிப்பும் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கசிப்பு உற்பத்தி செய்தவர்கள் தப்பியோடிவிட்டனர். மீட்கப்பட்ட பொருள்கள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்படும். விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று தருமபுரம் பொலிஸார் மேலும் கூறினர். (த-4)

# இலங்கைத் தம்பதி திருப்பூரில் கைது

## மோசடி மூலம் இந்திய அரசிடம் நிவாரணம் பெற்ற குற்றச்சாட்டில்

கொழும்பு, ஓக. 29
போலியான ஆவணங்களைத் தயாரித்து இந்தியக் கடவுச்சீட்டைப் பெற்று, அதன் மூலம் அந்நாட்டு அரசிடம் நிவாரணங்களைப் பெற்று வந்த இலங்கைத் தம்பதியினர் தமிழகத்தின் திருப்பூரில் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் இரு குழந்தைகளோடு கடந்த ஏப்ரல் மாதம் மதுரை வானூர்தி நிலையத்திலிருந்து இலங்கை வர முயற்சித்த போது சந்தேகம் கொண்ட அதிகாரிகள் கடவுச்சீட்டுக்களைப் பரிசோதித்துள்ளனர். இதன்போது அவை மோசடியான முறையில் பெறப்பட்டமை தெரியவந்ததாகவும், இதன் பின்னர் கடவுச்சீட்டுக்கள் முடக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் இந்தியச் செய்திகள் கூறியுள்ளன.

கே.தியாகராஜன் (வயது–29), தியாகராஜன் மேனகா (வயது–27) ஆகிய இருவரும் தாம் தமிழகத்தின் திருப்பூரில் பிறந்தவர்கள் எனத் தெரிவித்துள்ளனர். அவர்களின் மகள் ஒருவர் தனியார் பாடசாலை விடுதியில் தங்கிக் கல்வி கற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> போலியான இந்தியக் கடவுச் சீட்டைப் பெற்றுக் கொண்ட இவர்கள், இந்திய அரசினால் வழங்கப்படும் மானியங்களைப் பெற்றுக்கொள்ளும் ரேஷன் அட்டையைவைத்திருந்துள்ளனர்.

இந்தத் தம்பதியினர் தொடர்பில் தமிழகப் பொலிஸார் மேற்கொண்ட விச்சாரணைகளில், அவர்கள் இலங்கையின் புத்தளம் மாவட்டத்தின் தில்லையடி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

2011ஆம் ஆண்டு சுற்றுலா விசா மூலம் திருச்சி ஊடாக இந்தியாவுக்குச் சென்ற இந்தக் குடும்பம் மீண்டும் இலங்கை திரும்பவில்லை. அவர்கள் திருப்பூர் பிரதேசத்தில் வீடொன்றை வாடகைக்குப் பெற்று ஆடைத் தொழிலில் ஈடுபட்டு வந்த நிலையில், பின்னர் சென்னைக்கு வந்து ஒரு வருடம் வசித்துள்ளதாகப் பொலிஸ் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலியான இந்தியக் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்ட இவர்கள், இந்திய அரசினால் வழங்கப்படும் மானியங்களைப் பெற்றுக் கொள்ளும் ரேஷன் அட்டையை வைத்திருந்துள்ளனர். போலியான ஆவணங்கள் மூலம் வீடொன்றை வாங்கியதோடு வங்கிக் கணக்கொன்றையும் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆரம்பித்துள்ளனர் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட இந்த இலங்கைத் தம்பதியினருக்கு எதிராக இந்தியக் குற்றவியல் சட்டவிதிகள் மற்றும் கடவுச்சீட்டுச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக 'ரைம்ஸ் ஒப் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது. (த–4)

## பம்பலப்பிட்டி வர்த்தகர் கொலை; ஐந்து பேரிடம் சிறப்பு விசாரணை

கொழும்பு, ஓக. 29
பம்பலப்பிட்டியில் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட வர்த்தகர் மொஹமட் சகீப் சுலைமானின் படுகொலை தொடர்பில் சந்தேகத்துக்குரியவர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள 5 பேரும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் சிறப்புப் பொலிஸ் குழு சிறப்பு விசாரணையை முன்னெடுத்துள்ளது.

நீண்ட விசாரணைகளில் சகீப்புடன் 5 பேருக்கும் இருந்த தொடர்பு மற்றும் கொடுக்கல் வாங்கல் விவகாரங்கள், குடும்பப் பிரச்சினைகள் குறித்து விசாரணை செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சகீப்பின் படுகொலைக்கு முன்னர் அவரைக் கடத்திச் செல்ல சிறிய ரகக் கார் பயன்படுத்தப்பட்டுள்ளது. 10 இற்கும் மேற்பட்ட தனியார் சி.சி.ரி.வி கமெராப் பதிவுகளை விசாரணைகளுக்காகப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளுக்காகக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 12 பொலிஸ் குழுக்களில் மூன்று குழுக்கள் தலைநகரின் பிரதான இடங்களில் பொருத்தப்பட்டிருக்கும் சி.சி.ரி.வி. கண்காணிப்புக் கமெராக்களை ஆராய்வதாகக் கூறுகின்றனர்.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பல்வேறு தகவல்கள் வெளிப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரையான விசாரணைகளிலிருந்து 5 பேர் தொடர்பிலும், 10 தொலைபேசி இலக்கங்கள் குறித்தும் சிறப்பான அவதானம் செலுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (த–4)

## படை முகாம்கள் வடக்கில் தேவையே

### அவை தெற்கிலும் உள்ளனவே என்கிறார் தென்மாகாண ஆளுநர்

கொழும்பு, ஓக. 29
தெற்கில் இராணுவ முகாம் உள்ளதெனில் வடக்கிலும் அவசியமெனக் கருதும் படைமுகாம்கள் இருப்பதில் தவறில்லை. எனவே அரசியல்வாதிகள் குறிப்பிடுவதுபோல் வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றமுடியாதென தென்மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

தேசிய அரசு நாட்டிலுள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்வைத்து வருகிறது. வடக்கு-கிழக்கில் அரசு கையகப்படுத்திய காணிகள் விடுவிக்கப்பட்டு மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இராணுவ முகாம்களின் அவசியத் தேவைகளுக்கான காணிகள் தவிர்ந்த ஏனைய காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. வடக்கிலுள்ள அரசியல்வாதி ஒருவர், வடக்கில் இராணுவ முகாம் தேவையில்லை. அதனால் உடனடியாக அவற்றை அகற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். அவர் குறிப்பிடுவதுபோல் செய்ய முடியாது – என்றார். (த–5)

## சு.க. பொதுச் செயலருக்கு எதிராக முறையிட முடிவு

கொழும்பு, ஓக. 29
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் உட்பட சிலரின் நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு செய்வதற்குக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் குழுவொன்று தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுடைய செயற்பாட்டினால் கட்சி ஒன்றுபடுவதற்குப் பதிலாகப் பிரிவினை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக ஜனாதிபதியிடம் முறையிடவுள்ளதாகக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் கூறினார்.

அத்துடன், இவர்களுடன் இணைந்து செயற்படும்போது கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பிலும் ஜனாதிபதியிடம் முறையிடவுள்ளதாகவும் குறித்த உறுப்பினர் மேலும் குறிப்பிட்டார். (த–4)

## நிதி அமைச்சு மீது பாய்கிறார் சந்திம

கொழும்பு, ஓக. 29
தன்னிடம் எந்தவொரு ஆலோசனையும் பெறாது எரிபொருள் உற்பத்தி வரியை அதிகரிப்பதற்கு நிதி அமைச்சு மேற்கொண்ட தீர்மானம் குறித்து தனது அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்வதாகப் பெற்றோலிய வள அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முகம் கொடுக்கும் நிலைமை தொடர்பில் ஆராயாமல் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஒரு லீற்றர் டீசலை உற்பத்தி செய்வதற்கான வரி 13 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் கடந்த 26 ஆம் திகதி நிதி அமைச்சு அறிவித்திருந்தது. இந்நிலையிலேயே அமைச்சர் சந்திம இவ்வாறு தெரிவித்துள்ளார். (த–4)

## கடுவலையில் பெண் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு, ஓக. 29
கடுவலையில் பெண்ணொருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் படுகாயமடைந்த அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடுவலை, எசுருபுர பிரதேசத்தில் அவரது வீட்டில் இருந்த வேளை குறித்த பெண் மீது நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த 43 வயதான பெண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டை அடுத்து சந்தேகநபர்கள் தப்பிச்சென்றுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் அதுருகிரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த–4)

## எம்.பிக்கள் வாகனம் வாங்க ரூ.93 இலட்சம் வங்கிக் கடன்

### இலங்கை வங்கிக்கு அரசு பணிப்பு

கொழும்பு, ஓக. 29
சுங்கத் தீர்வை இல்லாமல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்யும் பொருட்டுக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அரசு இலங்கை வங்கிக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த ஆலோசனையின்படி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகன அனுமதிப் பத்திரத்தின் பெறுமதியான 6 லட்சத்து 25 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கான வங்கிக் கடனை அவர்கள் பெற்றுக் கொள்ள முடியும். இதன்படி நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்கு 93 இலட்சம் ரூபா கடனாக வழங்கப்படும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குச் சுமார் 200 கோடி ரூபாவை இலங்கை வங்கி கடனாக வழங்கும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கடனைத் திருப்பிச் செலுத்த வருடாந்தம் 13 வீத வட்டியுடன் ஏழு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினரொருவரின் பதவிக் காலம் 5 வருடங்கள். ஏற்கனவே பதவிக் காலத்தில் ஒரு வருட காலம் பூர்த்தியாகியுள்ளது. நான்கு வருட காலமே எஞ்சியுள்ளது. அப்படியிருந்தும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிக் காலத்தின் பின்னரும் இந்த கடனைச் செலுத்த மூன்று வருட காலம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வாகனக் கடனை ஏழு வருட காலத்தில் மீளச் செலுத்த வட்டியைத் தவிர்த்து மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாவுக்கு அதிகமாகச் செலுத்தவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்கு மாதாந்தம் சகல கொடுப்பனவுகளுடன் சுமார் ஒரு இலட்சம் ரூபா வரையே கிடைக்கிறது.

பொதுமக்கள் கடன்பெறும்போது அந்தக் கடனை மீளச்செலுத்த கடன் பெறும் நபருக்குப் போதிய வருமானம் கிடைக்கின்றதா என அங்கு ஆராயப்படும். வருமானத்தில் 40 சதவீதம் மாதாந்தம் கடன் செலுத்த வேண்டியிருந்தால் கடன் வழங்கப்படமாட்டாது என்பது விதிமுறை.

ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வங்கி இந்த நடைமுறையைப் பின்பற்றாமை குறித்து விமர்சனங்கள் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த–4)

## ஹெரோயினுடன் வந்த இந்தியர் கைதாகினார்

கொழும்பு, ஓக. 29
ஹெரோயின் போதைப் பொருளுடன் வந்த இந்தியர் கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது.

அதிகாலை 5.35 மணிக்கு அவர் கைது செய்யப்பட்டதாகக் கட்டுநாயக்க போதைப் பொருள் ஒழிப்புக் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் 838 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் காணப்பட்டதாக அவர்கள் மேலும் தெரிவித்தார். (த–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் மோசடிக்கு துணை போகக் கூடாது ஐ.நா.

## இனப்படுகொலை குறித்த பன்னாட்டு விசாரணைக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கிறார் வைகோ



கொழும்பு, ஓக. 29
இலங்கை அரசின் மோசடி நாடகத்துக்குத் துணை போகாமல் இனப்படுகொலை தொடர்பாக பன்னாட்டு நீதி விசாரணை நடைபெறுவதற்கும் காணாமற் போனவர்கள் குறித்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கும் ஐக்கிய நாடுகள் சபை, செஞ்சிலுவைப் பன்னாட்டுக் குழு ஆகியன நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலகின் பல நாடுகளில் பேரினவாத அரசுகளாலும் அடக்குமுறை சர்வாதிகாரத்தாலும் படுகொலைகள் நடைபெற்ற காலங்களில் காணாமற் போனவர்கள் கதி என்ன? இரகசியச் சிறைகளில் சித்திரவதை செய்யப்படுகின்றார்களா? அல்லது கொல்லப்பட்டு விட்டார்களா? என்பதை அறிந்து கொள்ள முடியாமல் உற்றார் உறவினர்களும் பாதிக்கப்பட்ட இன மக்களும் எழுப்பிய ஓலக் குரல்கள் மனித உரிமை ஆர்வலர்களின் மனசாட்சியைத் தட்டியதால் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அரசு சாரா அமைப்புக்களால் அறிவிக்கப்பட்டதுதான் 'ஓகஸ்ட் 30-காணாமற் போனோர் நாள்'.

இனப்படுகொலைக்கும் இன அழிப்புக் கொடுமைக்கும் உள்ளாகிய பகுதிகளில் காணாமற் போனவர்கள் குறித்த உண்மைகளைக் கண்டறிய வேண்டியது மனித உரிமைகள் ஆணையாளரின் பொறுப்பு ஆகும்.

அதுபோலவே செஞ்சிலுவைப் பன்னாட்டுக் குழுவும் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. 189 நாடுகளில் இயங்குகின்ற அவர்கள் தான், செய்தியாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட இடங்களுக்கு உள்ளேயும் சென்று தகவல்களைச் சேகரித்துத் தருகின்றார்கள். அதற்கு உரிய அனுமதியை ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு வழங்கி உள்ளது.

1992 டிசெம்பர் 18 ஆம் நாள் ஐ.நா. பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 47/133 இன்படி, காணாமற் போனவர்கள் குறித்து உண்மையைக் கண்டறியவும் அவர்களைப் பாதுகாக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

மனித உரிமைகளை அழித்துச் சிறைச்சாலைகளில் இரகசியமாக அடைத்து வைக்கின்ற கொடுமை 30 நாடுகளில் நடைபெற்று வருவதாக ஐ.நா. தகவல் சேகரித்துள்ளது.

2007ஆம் ஆண்டு ஓகஸ்ட் 30ஆம் திகதி பிலிப்பைன்ஸ் நாட்டில் அரசின் உளவுத்துறை இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள், காணாமற் போனவர்கள் குறித்து நீதி கேட்டுப் போராட்டம் நடைபெற்றது. 2008 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 30 ஆம் திகதி காணாமற் போனோருக்கான அனைத்துலகக் கூட்டு அமைப்பு நீதிகேட்டுப் போராடியது.

2009 ஏப்ரல், மே மாதங்களில் இலங்கை அரசு நடத்திய தமிழ் இன அழிப்புப் போரின் இறுதிக் கட்டத்தில் ஆயுதம் ஏந்தாத அப்பாவித் தமிழர்கள், தாய்மார்கள், முதியோர்கள், குழந்தைகள் உட்பட ஒன்றரை இலட்சம் பேர் படுகொலை செய்யப்பட்டனர் என்ற உண்மையை ஐ.நா. பொதுச் செயலாளர் அமைத்த தருஸ்மன் தலைமையிலான மூவர் குழு ஆதாரச் சாட்சியங்களோடு அறிக்கையாகத் தந்தது.

கவிஞர்கள், படைப்பாளிகள், கலைஞர்கள், விடுதலைப்புலிகள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்களைக் காணவில்லை. அவர்கள் கொல்லப்பட்டார்களா? வதை முகாம்களில் சித்திரவதைக்கு ஆளாகி உள்ளனரா? உண்மை வெளிவரவேண்டும். இரகசியச் சிறைகளில் இருப்போர் விடுதலையாக வேண்டும் என்று தொடர்ந்து தமிழ் இனக் கொலைக்கு நீதி கேட்கும் நாம் கோரி வருகின்றோம்.

காணாமற் போனவர்களின் கதி என்ன என்பதை அறியும் வகையிலும், அனைத்துலக அமைப்புகளான ஐ.நா., செஞ்சிலுவைப் பன்னாட்டுக் குழு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியன உரிய நடவடிக்கை எடுப்பதற்கு, இந்திய அரசின் வெளிவிவகார அமைச்சின் மூலம் தமிழக அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் கொழும்புக்குச் செல்கிறார். முன்னர் இவர் அங்கே சென்றபோது என்ன ஏமாற்று வேலைகளைச் செய்தார்களோ அதைத்தான் இப்போதும் செய்யப் போகின்றார்கள்.

இலங்கை அரசின் மோசடி நாடகத்துக்குத் துணை போகாமல், இனப்படுகொலைக்குப் பன்னாட்டு நீதி விசாரணை நடைபெறுவதற்கும், காணாமற் போனவர்கள் குறித்துத் தக்க நடவடிக்கை எடுப்பதற்கும் ஏற்ற வகையில பான் கி மூன் செயற்படவேண்டும்- என்றுள்ளது. (த-4)



இருபத்தோராம் நாள் வீதியுலா

## இருபத்திரண்டாம் திருவிழா

### மக்கள் குறைதீர்க்க மாமயில் ஏறவேண்டும் வடிவேலா

மாயவன் மருமகனே மனங்கவர் இறைவனே
மக்கள் குறை தீர்க்க மாமயிலேற வேண்டும் வடிவேலா
கூவும் சிறுகுயிலும் பாடும் உன் கவியே
அழகு புள்ளி மானும் தேடும் உன்அழகே
அன்பருக்கருளும் அழகு வடிவேலை
அனுதினம் பூஜிக்க அச்சமே இல்லை
ஆறுபடை கொண்டவன் அப்பன் எங்கள் சுந்தரன்
சேவற் கொடி கொண்டவன் பன்னிரு கரம் கொண்டவன்
அழகு திருசிவன் மைந்தன் எழில் கொஞ்சும் குமரன்
பண்பாடு பக்தி கல்வி இனி உயர
கலியுகத்தில் கலிதீர்க்க ஓடி வா! முருகா!
சக்தி சிவ பாலகன் வண்ணமயில் ஆண்டவன்
வக்கிர எண்ணம் அழித்து வழிகாட்டு வேலா!
தெய்வானை வள்ளி மணவாளன் அவனருள் பெற
பக்தர்கள் ஏந்தி ஆடுகின்றனர் பறவைக் காவடி
பாதக்கமலமதில் பக்தியுடன் வழிபட்டால்
முக்தியும் தருவான்
பச்சிளம் சிவகுகன் நல்லூர் பதிதனிலே.

- கிருஷ்ணராஜா சஞ்ஜீவன்

### அருள் தருவாய் நல்லைக் கந்தனே

கரம் இரண்டில் உன்னை
வந்தனை செய்திட
வரம் ஒன்று தருவாயா...
வடிவேலா உந்தன் திருவடி
நாடி வந்தால் மனத்துயர்
போக்கி வைக்கும் கதிர்வேலா...
வளர்மதி ஒளியினிலே
புருவம் படைத்தவனே உன்
பக்தர்கள் வாழ்வுதனை
ஜெயம் பெற வைப்பவனே...
மலர் விழிப் பார்வையினால்
பாவம் வினை தீர்ப்பவனே...
வண்ணமயில் வேலா உந்தன்
எழில் முகம் நாம் துதித்தால்
ஆனந்தம் அளிப்பவனே...
அடியவர் எம் வாழ்வினிலே
அருள் மழை பொழிந்திடுவாய்
நல்லூர்க் கந்தா!

ச. அகல்யா
சண்டிலிப்பாய்

# சு.க. மாநாட்டைப் புறக்கணிக்கத் தீர்மானம்

கொழும்பு, ஓக. 29
குருநாகலில் இடம்பெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 65 ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதில்லையென இரண்டு அமைப்பாளர் கூட்டங்களில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

மத்துகம மற்றும் ரத்கம தொகுதிகளிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இதேவேளை, மினுவங்கொட பிரதேசத்தில் பிரசன்ன ரணதுங்க தலைமையில் விசேட கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதன்போது, சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் கலந்துகொள்வது உள்ளிட்ட 4 தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# சு.கவின் வருடாந்த மாநாட்டில் பங்கேற்கப் போவதில்லை

## *மகிந்த ராஜபக்ச திட்டவட்டம்*



கொழும்பு, ஓக. 29
குருநாகலில் நடைபெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 65 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ளப்போவதில்லையென முன்னாள் ஜனாதிபதியும், அந்தக் கட்சியின் போசகருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

நீர்கொழும்பு, அகுருகாரமுல்ல பிரதேச விகாரையொன்றுக்குப் பயணம் செய்த மகிந்த ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

வெளிநாட்டுப் பயணமொன்றில் ஈடுபடவுள்ளதால் நான் அதில் கலந்து கொள்ள முடியாமல் போகின்றது. வெளிநாட்டுப் பயணம் எனக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பாகும். எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை அந்தப் பயணம் அமையவுள்ளது.

கூட்டு எதிர்க் கட்சியிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும், தொகுதி அமைப்பாளர்களும் அவர்களது தொகுதி மக்களுடன் கலந்துரையாடிய பின்னர், மாநாட்டில் கலந்துகொள்வது குறித்துத் தீர்மானம் எடுப்பார்கள்.

புதிய கட்சியை உருவாக்குவதை யாராலும் தடுக்க முடியாது-என்றார். (த-4)

நல்லைக்கந்தனுக்கு
இன்று (29.08.2016) திங்கட்கிழமை
22 ஆம் திருவிழா
மாம்பழத்திருவிழா
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:
அன்னை முத்துமாரி பஸ்சேவை
கொழும்பு ⇄ யாழ்ப்பாணம் ⇄ பருத்தித்துறை
12.08.2016 முதல் பகல் சேவை ஆரம்பம்
நான்கு புதிய A/C பஸ்களுடன்
இரு வழிச் சேவையை பகல், இரவு என விஸ்தரித்துள்ளது
BUS BOOKING

| | | | காலை | இரவு |
|---|---|---|---|---|
| கொழும்பு | + 94 77 544 9251 | | | |
| யாழ்ப்பாணம் | + 94 77 544 8503 | | | |
| வல்வெட்டித்துறை | + 94 21 226 1977 | பருத்தித்துறை | 7.00 am | 7.00pm |
| | + 94 77 544 7359 | யாழ்ப்பாணம் | 8.00 am | 8.00pm |
| நெல்லியடி | + 9477 285 0285 | வெள்ளவத்தை | 7.30 am | 7.30pm |
| பருத்தித்துறை | + 9477 555 2973 | கொட்டஹேனா | 8.30 am | 8.30pm |

Web www.annaimuthumari.com
www.valvaitourism.com
Bus booking || Courier || Boating

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நாட்டுக்கு உதவக் கூடிய கல்விமுறை அவசியமே

எமது நாட்டுக்கு உகந்த, அதன் வளர்ச்சிக்கு உதவ வல்ல கல்வி முறை ஒன்றை உருவாக்க முடிவாகி உள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அறிவித்துள்ளார்.

மாணவர்கள் தொழிற்றுறைகளில் இலகுவாகச் சேர்ந்து கொள்வதற்கு அது வாய்ப்பு வழங்கும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

அதன் பொருட்டு கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பில் புதிதாக இருபது பாடங்களை அறிமுகப்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தொட்டுக்காட்டி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

● புதிய பாடங்கள் அனேகமானவை தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொழில் பயிற்சித் துறை சார்ந்தவையாக அமையும்.

● இப்போது கற்பித்தல் நடைமுறையில் உள்ள பாடங்களே புதியனவாகப் பிரிக்கப்படும்.

● புதிய கல்விச் சீர்திருத்தத்தின் பிரகாரம் இப்போதுள்ளது போன்று கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்துடன் தமது படிப்பை நிறுத்திக் கொள்ளும் மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு பல்வேறு பாடங்கள் இருப்பதால் சகலரும் உயர்தரம் வரை தமது கல்வியைத் தொடர்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

● தொழில்சார் பாடங்களில் ஈடுபடும் மாணவர்கள் தெரிவு செய்யப் படும் நிறுவனங்கள் அல்லது தொழில் நிலையங்களில் தமக்குரிய பயிற்சிகளைப் பெறுவதற்கும் வகை செய்யப்படும்.

-- அத்தகைய பயிற்சிகளின்போது அவர்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

--அவர்கள் பயிற்சி பெறும் நிறுவனங்கள் அல்லது தொழில் நிலையங்கள் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு வகை செய்யப்படும்.

மேலும் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புவரை கல்வியைக் கட்டாயம் ஆக்குவது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது-- என்றும் அமைச்சர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

அரசின் மேற்போந்த கல்வி - தொழில் சார்ந்த உத்தேசத் திட்டம் நாடாளுமன்றத்தில் இந்த வருட இறுதியில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள், உயர்கல்வி நிலையங்களில் வெறும் ஏட்டுக்கல்வியை வழங்கி, கல்விப் போதனையை, மிகக் குறைந்த தொழில் மற்றும் தொழில்நுட்பப் பாடவிதானங்களை வகித்துப் பிரித்து கற்பிக்கும் முறை--

மாணவர்களுக்கு மட்டுமன்றி நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், எதிர்காலத்தின் தேவைகளுக்கும் உதவும்-- ஈடுசெய்யும் மிகவும் தாழ் நிலையிலேயே உள்ளது.

நாட்டின் தொழில் சார், தொழில் நுட்பம்சார், விஞ்ஞான வளர்ச்சி சார்ந்த பல்லின தேவைகளை மேம்படுத்த வேண்டிய கடமையும் பொறுப்பும், அறுபது வீதம் அரசுக்கும் மிகுதி நாற்பது வீதம் தனியார் துறைக்கும் பகிரப்பட வேண்டும்.

அரசுகள் மாறும்போது கல்வித் துறையையும், தொழிற்றுறைகளையும் அரசியல் தலைவர்கள் அடிக்கடி மாற்றி அமைப்பது இந்த நாட்டின் சாபக்கேடாகத் தொடர்ந்து வருகிறது.


அதனைப் போக்குவதற்கு, அரசியல், ஆட்சியியல் சார்ந்தவர்கள் மட்டுமன்றி துறைசார் நிபுணர்களின் கருத்துக்களும் ஒன்று சேர்க்கப்பட வேண்டும்

அது குறித்து நல்லாட்சி அரசாவது மனங் கொள்ளுமா,

செயற்படுமா...?

அப்போது தான் ஏனைய நாடுகளின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஈடுகொடுக்க இயலும்.

எதிர்பார்க்கலாமா, என்ன?



எம்.ஐ.முபாறக்

வடக்கு-கிழக்குத் தமிழர்கள் அவர்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கான தீர்வைப் பெறுவதற்கு எந்த வழிமுறைகளை நாடினாலும், அவர்கள் இறுதியாகவும் உறுதியாகவும் நாடும் வழிமுறை சர்வதேசம் ஒன்றுதான். இலங்கை ஆட்சியாளர்கள் தம்மைக் கைவிட்டாலும், சர்வதேசம் அப்படிச் செய்யாது என்று நம்பி அவர்களின் பிரச்சினைகளை அதிகளவில் சர்வதேசமயப்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக, அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளையும் ஐ.நாவையும் அவர்கள் பெரிதாக நம்பி இருக்கின்றனர். ஐ.நாவைப் பொறுத்தவரை அது தொடர்ச்சியாகத் தமிழர் பக்கம் நின்றே செயலாற்றி வருகின்றது. போர் முடிந்ததில் இருந்து, ஐ.நாவின் இந்த நிலைப்பாடு மேலும் இறுக்கமாக இருந்து வருகின்றது.

இறுதிப் போரின்போது தமிழருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற கோசத்தை ஐ.நா. தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. ஐ.நாவின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகின்றபோதெல்லாம், அவர்கள் தமிழர் பகுதிகளுக்குச்சென்று உண்மை நிலைமையைக் கண்டுவிட்டுத்தான் செல்கின்றனர். அந்த நிலைமையை ஐ.நா. தமிழருக்கு சாதகமாகப் பரிசீலிக்கின்றது.

இது தமிழரின் போராட்டத்துக்கு பலம் சேர்க்கும் விடயமாக அமைந்துள்ளது. அந்த அடிப்படையில்தான் ஐ.நாவின் பொது செயலாளர் பான்கீ-மூனின் இலங்கைக்கான பயணமும் நோக்கப்படுகின்றது.

இந்த மாதம் இறுதியில் இலங்கைக்கு வருகை தரவுள்ள மூனின் பயணத்தைத் தமிழர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். தமிழருக்கு தீர்வு வழங்குவதில் காட்டப்படும் கால தாமதத்தால் அவர்களுள் சிலர் விரக்தியடைந்து காணப்பட்டாலும் ஐ.நா. மீது அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையை அவர்கள் முழுமையாக இழக்கவில்லை. அந்த வகையில் மூனின் பயணத்தைத் தங்களுக்கு சாதகமாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர்.

> இறுதிப் போரின்போது தமிழருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற கோசத்தை ஐ.நா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. ஐ.நாவின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகின்ற போதெல்லாம் அவர்கள் தமிழர் பகுதிகளுக்குச் சென்று உண்மை நிலைமையைக் கண்டுவிட்டுத்தான் செல்கின்றனர். அந்த நிலைமையை ஐ.நா. தமிழருக்கு சாதகமாகப் பரிசீலிக்கின்றது.

மூனுக்கு இது இரண்டாவது உத்தியோகபூர்வ பயணமாகும். போர் முடிந்தவுடன், 2009 இல் அவர் முதலாவது உத்தியோகபூர்வ பயணத்தை இலங்கைக்கு மேற்கொண்டார். போரின் பின்னரான தமிழர்களின் நிலைமையைப் பார்த்துச் சென்றார். போர்க் குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைகளும் சர்வதேசமயப்படுத்துவதற்கு அவரது அந்தப் பயணம் காரணமாக அமைந்தது.

அந்தப் பயணத்தின்போது பல விடயங்களில் மூனுக்கும் அப்போதைய ஜனாதிபதி மகிந்தவுக்கும், இடையில் இணக்கம் ஏற்பட்டது. இருவரும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் பல வாக்குறுதிகளை மகிந்த வழங்கி இருந்தார். ஆனால், மகிந்த ஆட்சியில் இருந்து கவிழ்க்கப்படும் வரை அவர் எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. இதனால் ஐ.நாவுக்கு மகிந்தவுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்படத் தொடங்கியது.

மகிந்த இவ்வாறு வாக்குறுதியை மீறிச் செயற்பட்டதால் கடுப்பாகிப்போன ஐ.நா. மகிந்தவைப் பழிவாங்கத் துடித்தது. அவருக்கு எதிராகப் பல பிரேரணைகளைக் கொண்டு வந்து நிறைவேற்றியது. இந்த நிலைமை தமிழர்களின் போராட்டத்தை- பிரச்சினையை மேலும் சர்வதேச மயப்படுத்தியது.

இந்த நிலையில்தான் மகிந்தவின் ஆட்சியும் கவிழ்ந்தது. இதனைத் தொடர்ந்து மகிந்த வழங்கிய அதே வாக்குறுதிகளை புதிய அரசு நிறைவேற்ற வேண்டும் என்று ஐ.நா விரும்பியது. புதிய அரசும் அதற்கு சாதகமாகவே தலை அசைத்தது.

போர்க் குற்றச்சாட்டுத் தொடர்பில் ஐ.நாவால் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியதோடு, இந்த விசாரணைக்காக உள்ளகப் பொறிமுறை ஒன்று அமைக்கப்படும் என்று வாக்குறுதியும் வழங்கியது. இந்த வாக்குறுதியை நிறைவேற்ற வைப்பதற்காக ஐ.நா. இப்போது நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இலங்கை அரசின் அந்த வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பாகவும் தமிழர்களின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் ஆராய்வதற்காக பான்கீ-மூன் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல்-ஹுசைனை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மூனுக்கு இது இரண்டாவது உத்தியோகபூர்வ பயணமாகும். போர் முடிந்தவுடன் 2009 இல் அவர் முதலாவது உத்தியோகபூர்வ பயணத்தை இலங்கைக்கு மேற்கொண்டார். போரின் பின்னரான தமிழர்களின் நிலைமையைப் பார்த்துச் சென்றார். போர்க் குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைகளும் சர்வதேச மயப் படுத்துவதற்கு அவரது அந்தப் பயணம் காரணமாக அமைந்தது. அந்தப் பயணத்தின்போது பல விடயங்களில் மூனுக்கும் அப்போதைய ஜனாதிபதி மகிந்தவுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டது. இருவரும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் பல வாக்குறுதிகளை மகிந்த வழங்கி இருந்தார். ஆனால், மகிந்த ஆட்சியில் இருந்து கவிழ்க்கப்படும் வரை அவர் எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. இதனால் ஐ.நாவுக்கு மகிந்தவுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்படத்தொடங்கியது.”



# ஐ.நா.பொதுச் செயலாளர் தமிழர்களுக்கு நீதி வழங்குவாரா

அண்மையில் இலங்கைக்கு அனுப்பி வைத்திருந்தார். அதனைத் தொடர்ந்து மூனும் இப்போது வரப்போகின்றார்.

ஹூசைனின் பயணம் இலங்கை அரசுக்கு சாதகமாகவே அமைந்திருந்தது. இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகப் பொறிமுறைகள் நல்ல நிலையில் இருப்பதாகத் தெரிவித்து, போர்க் குற்ற விசாரணை இலங்கையின் உள்ளகப் பொறிமுறையால்தான் நடத்தப்பட வேண்டும் என்று அவர் கூறி இருந்தார். அது மாத்திரமன்றி, விசாரணையில் கண்டறியப்படுகின்றவை மனித உரிமை மீறல்களா? அல்லது போர்க் குற்றங்களா? என்று இலங்கை நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் கூறி இருந்தார்.

இவ்வாறு அவரது பயணத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட அரசு, மூனின் பயணத்தையும் சாதகமாகவே பயன்படுத்துவதற்கு முற்படும். மூனின் பயணத்தில் இருந்து உச்சப்பயனை அடைவதற்கு தமிழர் தரப்பு என்ன செய்யப் போகின்றது. எவ்வாறான யுக்திகளைக் கையாளப்போகின்றது என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது.

மூன் அவரது பதவிக் காலத்தின் இறுதிக் காலத்தில்தான் இந்த பயணத்தை மேற்கொள்கிறார். இந்த நிலையில், அவர் எடுக்கும் முடிவுகள் முக்கியமானதாகப் பார்க்கப்படும். இதனால்தான் தமிழர்கள் மிக ஆர்வத்துடன் அவரது பயணத்தை எதிர்பார்க்கின்றனர்.

இலங்கையின் தற்போதைய அரசு ஐ.நாவுடன் இணங்கிச் செயற்படுவதால், இலங்கை அரசுக்குச் சாதகமாக மூன் நடந்துகொள்வாரா? அல்லது மகிந்தவின் ஆட்சியில் அவர் மேற்கொண்ட பயணத்தைத் தொடர்ந்து எடுத்த அதே நிலைப்பாட்டை எடுப்பாரா? என்ற கேள்வியும் தமிழர் தரப்பால் முன்வைக்கப்படுகின்றன.

சர்வதேச பிரதிநிதிகள் வருவதும் போவதுமாக இருக்கின்றனர். எதுவும் நடப்பதில்லை என்ற விரக்தி மனப்பான்மையில் இருந்து தமிழர்கள் விடுபடுவதற்கு மூனின் பயணம் சாதகமாக அமையவேண்டும். தமிழருக்கு நல்லது செய்தார் என்ற நல்ல பெயருடன் அவர் ஓய்வு பெறவேண்டும் என்று தமிழர்கள் விரும்புகின்றனர்.

போர்க் குற்ற விசாரணை விரைவாகத் தொடங்கப்பட வேண்டும் என்ற தேவைக்கு அப்பால், மீள்குடியமர்பு, காணாமற் போனோர் தொடர்பான விசாரணை, அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் நீக்கம் போன்றவையும் உடனடியாக மேற்கொள்ளப்பட்ட வேண்டி இருக்கின்றன.

இந்த விடயங்கள் தொடர்பில், மூன் நல்லதொரு முடிவைப் பெற்றுத்தருவார் என்று தமிழர்கள் ஆவலாய்க் காத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பு -காத்துக்கிடப்பு இலவு காத்த கிளியின் நிலைமை போல் ஆகிவிடக்கூடாது என்பதே அனைவரினதும் விருப்பமாகும்.

# ஏமாறுபவர்கள் இருக்கும்வரை...

எமது வீட்டில் இருக்கும் 25 வருடங்கள் பழைமையான சுவர் மணிக்கூடு அண்மையில் பழுதடைந்து விட்டது. எனக்குத் தெரிந்த மணிக்கூடு திருத்தகம் வைத்திருக்கும் நண்பர் ஒருவரிடம் இது பற்றி கதைத்தபோது தற்சமயத்தில் குறிப்பிட்ட சுவர் மணிக்கூடுகளைத் திருத்துவதற்கு ஆள்கிடையாது. இருப்பவர்களிடம் நம்பிக் கொடுத்து விடவும் முடியாது. கொஞ்சம் பொறுங்கோ, பார்ப்போம் என்று தெரிவித்தார்.

அந்தக்கால சுவர் மணிக்கூடுகளுக்கு 7 நாள்களுக்கு ஒரு தடவை வைன் கொடுக்க வேண்டும். அரைமணிக்கு ஒருதடவை மணி அடிக்கும். ஆனால் என்னிடம் இருந்ததற்கு 21 நாள்களுக்கு ஒரு தடவை வைன் கொடுத்தால் போதும். இந்த மணிக் கூடு இயங்காமல் போனது கை விழுந்த மாதிரி இருந்தது, ஒரு வேலையும் ஓடவில்லை.

யாழ்.நகரில் இருக்கும் ஒரு மணிக்கூடு திருத்தகத்தில் மேற்குறிப்பிட்ட சில சுவர் மணிக்கூடுகள் இயங்கும் நிலையில் சுவரில் மாட்டப்பட்டிருந்தன. விசாரித்தபோது கொண்டு வாருங்கோ பார்ப்போம்-என்றார் அங்கிருந்தவர். வீட்டுக்குச் சென்று அதைக் கொண்டுவந்து காட்டினேன். இது பாருங்கோ வெம்பிளி (மணிக்கூட்டின் பெயர்), இதற்கு பாட்ஸ் எடுக்கோலாது-என்றார். சரி கொண்டுபோய் மூலையில் வைப்போம். பழைய மணிக்கூடுகளை நல்ல விலைக்குச் சிலர் எடுக்கிறார்களாம், அப்படிவரும்போது கொடுக்கவேண்டியதுதான் என்று சொல்லியபடி கடையிலிருந்து நான் புறப்படத் தயாரானபோது சரி சரி எதுக்கும் தந்து விட்டுப் போங்கள். பாட்ஸ் எங்காவது கிடைத்தால் திருத்தித் தருகிறேன், இடைக்கிடை வந்து பாருங்கள் என்றார் கடைக்காரர்.

மணிக்கூட்டை அங்கு கொடுத்துவிட்டு வந்தபின்னர் வாராவாரம் சென்று விசாரிப்பேன், பாட்ஸ் கிடைக்கவில்லை என்று பதில்வரும். இப்படியாக இரண்டு மாத காலம் கடந்தது. ஒரு நாள் போனபோது மணிக்கூடு இயங்கிக் கொண்டிருந்தது. சந்தோசத்துடன் கடைக்காரரை அணுகினேன். ஒரு மாதிரி ஓடி-அலைந்து பாட்ஸ் எடுத்து விட்டேன். சரியான கஷ்டப்பட்டுத் தான் திருத்தினேன் ஒழுங்காக ஓடுகிறது கொண்டு போகலாம் என்று சுவரில் இருந்து கழற்றி நேரமும் செற் பண்ணித்தந்தார். அதற் கான கூலியாக 1,500 ரூபா கேட்டார். மலைப்பாகத்தான் இருந்தாலும் என்ன செய்வது?

என்னிடம் இருந்ததே 500 ரூபா தான். அதனை அவரிடம் வெளிக்காட்டாது வீட்டுக்குச் சென்று வருகிறேன் என்றுவிட்டு வெளியேறினேன். விடயத்தை மனைவியிடம் தெரிவித்தபோது, இந்தக் காசுக்கு நல்ல பற்றறி மணிக்கூடு வாங்கி விடலாம் அநியாயக்காசு, திருத்தினாலும் எத்தனை நாளுக்கு ஓடுமோ தெரி யாது, பேசாமல் விடுங்கோ என்றார் மனைவி. அப்படியில்லை, என்னை நம்பித் தான் அந்தாள் திருத்த எடுத்தவர் என்றுவிட்டு 1,500 ரூபாவைக் கொண்டு போய்க் கொடுத்து மணிக்கூட்டை எடுத்துவந்து வழமையாக அது இருந்த இடத்தில் மாட்டினேன். மணிக்கூடு இயங்கியது. ஆனால் ஒரு நாளைக்கு 3மணித்தியாலம் முந்திக் காட்டியது. இரண்டு நாள் வைத்திருந்து பார்த்த பின்னும் சரி வராததால் அந்தக் கடைக்காரரிடம் சென்று கதைத்து, அவர் சொன்னபடி மீண்டும் அதனைக் கொண்டு போனேன்.

முந்தியமாதிரி ஓடாது தான், ஒருமாதிரி செற்பண்ணிப் பண்ணிப் பாவியுங்கள் என்றார். ஐயா நீங்கள் கேட்டபடி 1,500 ரூபா தந்தேன் முந்திய மாதிரி ஓடாது என்றால் ஏன் திருத்துவான் என்றேன். அதற்கு அவர் திருத்தமுடியாது என்று முதலில் சொன்னேன் தானே திருத்தித்தா, திருத்தித்தா என்று கெஞ்சி விட்டு இப்போ பிரட்டிக்கதைக்கக்கூடாது என்று கோபப்பட்டுக் கதைத்தார். அவரது கடையில் ஆஞ்சநேயர் படத்துக்கு நிறையப் பூக்கள் வைக்கப்பட்டிருந்தன. ஐயா நீங்கள் கும்பிடும் இவரைத்தான் நானும் கும்பிடுகிறேன். நான் பிரட்டிக் கதைக்கவில்லை. நீங்கள் கேட்ட காசைத் தந்தேன், மணிக்கூட்டை ஒழுங்காக ஓடப்பண்ணித் தர வேண்டியது தானே உங்கள் பொறுப்பு என்றதற்கு இதற்கு மேல்என்னால்இயலாது என்றுவிட்டார். இவ்வளவுகாசையும் வாங்கிக்கொண்டு இப்படிச் சொல்கிறீர்களே இது நியாயமல்ல, நீங்கள் பூவைத்திருக்கும் சுவாமி இதற்கு ஒரு வழி சொல்வார் தானே என்றுவிட்டு இயங்காத அந்த மணிக்கூட்டையும் தூக்கிக் கொண்டு வந்து விட்டேன்.

வே.கி.ஆனந்தன்
கொட்டடி.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம் ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook
Twitter : L

# திசை மாறிய தம்பதியர் ஒரு வாரத்தின் பின் மீட்பு

## பசுபிக் தீவான வெனோவில்



வொஷிங்டன், ஓக.29
பசுபிக்தீவான வெனோவில்திசை மாறிச் சென்ற தம்பதியர் ஒரு வார காலத்தின் பின்னர் மீட்கப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த லினுஸ்-சபீனா ஜக் என்ற தம்பதியினர் கடந்த 17 ஆம் திகதி மைக்றோனேசியா நாட்டுக்குச் சுற்றுலா சென்றனர்.
அந்த நாட்டில் உள்ள வெனோ என்ற தீவுக்குப் படகில் சென்றுகொண்டிருந்த போது படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மேற்கொண்டு செல்ல முடியாமல் 160 மைல்கள் தொலைவில் உள்ள ஒரு தீவை அடைந்தனர்.
இந்த நிலையில் ஒரு நாள் கடந்தும் அவர்கள் கரை திரும்பாததை அறிந்த மைக்றோனேசிய தேசிய கடல்சார் பொலிஸ் மற்றும் அமெரிக்கக் கடலோரக் காவல்படையினர் தேடுதல் வேட்டையில் இறங்கினர். இதற்கிடையே, உதவி கிடைப்பதற்கு ஒரு வார காலமாகியதால் தம்பதியர் கடற்கரையில் ஒரு குடிசை அமைத்துத் தங்கியுள்ளனர். உதவியை எதிர்பார்த்து அடிக்கடி கடற்கரை மணலில் எஸ்.ஓ.எஸ் என்ற ஆங்கில எழுத்தை எழுதி வைத்திருந்தனர். அத்துடன் அந்த வழியாக சென்ற கடலோரக் காவல்படைக் கப்பலுக்கு உதவி கேட்டுச் சமிக்ஞை காட்டியுள்ளனர்.
இதையடுத்து மறுநாள் காலை விமானத்தின் மூலம் அந்த தீவைச் சுற்றி தேடியதில் அவர்கள் ஆபத்தில் இருப்பது உறுதி செய்யப்பட்டது. இது குறித்து கடலோரக் காவல்படை அதிகாரிகளுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அவர்களை மீட்கச் சென்ற கடலோரக் காவல்படைக் கப்பல் தீவுக்கு அருகில் செல்ல முடியாதமையால் சிறிய படகுகள் அனுப்பி அவர்கள் மீட்கப்பட்டனர். தம்பதியர் பாதுகாப்பாக மீட்கப்பட்டதை அமெரிக்கத் தூதரக ஊடகப் பேச்சாளர் உறுதி செய்தார். (த-ரி4)

# ஜேர்மனியை வ...
# மேலும் 3 லட்சம் ...

## குடிவரவுத் திணைக்களம் அறிவி...



பேர்ளின், ஓக.29
ஜேர்மனிக்கு இவ்வாண்டு இன்னமும் 3 லட்சம் அகதிகள் வந்தடைவார்கள் என அந்த நாட்டுக் குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
ஜேர்மனிக்கு வருகை தரும் அகதிகளால்,அங்கு ஏற்படும் நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்தக் கணிப்பு நடத்தப்பட்டுள்ளது.
ஜேர்மனியில் இதுவரை ஒரு மில்லியனுக்கும் அதிகமான அகதிகள் குடியேறியுள்ளனர். இந்த வருடத்தில் மாத்திரம் 6 மாதகாலக் குடியுரிமை பெறுவதற்கு 3 லட்சத்து 90 ஆயி... கூறியுள்ளனர்.
தரையிறங்கும் அ... தொழில் வசதிகளை... அளவிலான பணம்... வருகை தொடர்ப... வாக்கெடுப்பு நடத்த... இந்த முடிவுக்கு ம...



# ஒரே தடவையில் 35 சடலங்கள் அடக்கம்

## இத்தாலியில் மனதை உருக்கும் நிகழ்வு

ரோம், ஓக.29
இத்தாலி நில நடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டன. ஒரே தினத்தில் 35 சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டமை மன நெகிழ்வை ஏற்படுத்தியது.
கடந்த புதன்கிழமை இத்தாலியில் இடம்பெற்ற நில அதிர்வில் 290 பேர் உயிரிழந்துள்ளனர். நில அதிர்வு இடம்பெற்ற பகுதி பிரபல சுற்றுலா பிரதேசமாகும். இதனால் பல வெளிநாட்டவர்களும் அங்கு உயிரிழந்துள்ளனர்.
அதிர்வு உணரப்பட்ட பகுதி 20 சென்ரி மீற்றர் கீழிறங்கியுள்ளமை செயற்கைக் கோள் ஒளிப்படத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 38 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்ற அதே வேளை, 2ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர்.
100 கிலோ மீற்றர் இடம்பெற்ற அதிர்வு, தலை நகர் ரோமிலும் உணரப்பட்டது. நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதிச் சடங்கில் மதத் தலைவர்கள், அரசியல் பிரபலங்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தமது இரங்கலை தெரிவித்தனர்.
இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம், பெட்டியில் வைத்து அடக்கத்துக்குத் தயார் செய்யப்பட்டிருந்தது. அப்போது, ஒரு நாய் ஒன்று தனது இறந்த உரிமையாளரின் பெட்டியின் அருகில் படுத்திருந்தமை அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. 35 பெட்டிகளில் இருந்து தனது உரிமையாளரை இனம் கண்டு கொண்ட நாய், அதன் அருகே விலகாமல் படுத்திருந்தது அங்கிருந்தோரை மனம் நெகிழச் செய்தது. (த-ரி4)

# ஐரோப்பா...
# கார்னி...

லண்டன், ஓக.29
மேற்கு லண்டனில் ... எனும் கார்னிவேல் ஆ... இரு தினங்கள் நடைபெ... கார்னிவேலில் ஒரு மில்... பட்ட பார்வையாளர்கள்... வார்கள் என எதிர்பார்க்... இது ஐரோப்பாவில் இ... பெரிய தெருக் கார்ன... பாட்டாளர்கள்தெரிவித்தனர்.
1960 ஆம் ஆண்டில் இருந்து 50 வருடங்களுக்கு மேலாக இந்த நிகழ்வு லண்டனில் வருடாவருடம் நடைபெற்று வருகின்றது. பல வருடங்கள் நடைபெற்று வரும் கார்னிவேல், பல தரப்பினரது மனதையும் கவர்ந்துள்ளது. பொலிஸார்- ஏற்பாட்டாளர் ஆகியோருக்கிடையில் உள்ள புரிந்துணர்வுவிழாவை வெற்றி பெற வைத்துள்ளது என ஏற்பாட்டாளர்கள் கூறினர்.
இதில் ஆபிரிக்க, ஐரோப்பிய கலைப் பாரம்பரியங்களை வெளிக்கொணரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வந்தடைவர் ...ம் அகதிகள்

## ...றிவிப்பு



...90 ஆயிரம் பேர் விண்ணப்பித்து இருப்பதாகக் குடிவரவு அதிகாரிகள் ...னர்.

...கும் அகதிகளுக்கு ஜேர்மனி, அடிப்படை வசதிகள் வழங்கியதுடன், ...சதிகளையும் வழங்கி வருகின்றது. இந்த நடவடிக்கைக்காக அதிக ...ன பணம் செலவாகியுள்ளது. இதற்கிடையே அண்மையில், அகதிகள் ...தாடர்பாக ஜனாதிபதி ஏஞ்சலா மோர்கலின் முடிவு ஆராயும் ...பு நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் நாட்டில் அரைவாசிப் பேர் ...யுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர். (த-ரி4)



# 145 வயது முதியவர் இந்தோனேசியாவில்

மணிலா, ஓக.29

உலகின் மிக வயதான மனிதர் என இந்தோனேசியாவைச் சேர்ந்த வயோதிபர் இனம் காணப்பட்டுள்ளார்.

இந்தோனேசியாவைச் சேர்ந்த 145 வயதான பா கோதோ 1870 ஆம் ஆண்டு பிறந்தார். 1992 ஆம் ஆண்டில் இருந்து தனது இறப்புக்கான ஆயத்தங்களைச் செய்து வரும் அவர், அதன் பின்னரும் 24 வருடங்களாக உயிரோடு இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

4 மனைவிகளுடனும் பிள்ளைகளுடனும் வாழ்ந்து வரும் அவர் சமீபகாலமாக நோய்வாய்ப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து இந்தோனேசிய ஊடகங்கள் அவரது பிறப்பை ஆவணப்படுத்தின. இவர் 1870 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி பிறந்தார். முன்னதாக அதிக வயதுடைய பெண் என இனம் காணப்பட்ட, பிரான்ஸைச் சேர்ந்த 122 வயதுடைய ஜேன் கல்மென்ட் என்பவர் கோதோவை விட 23 வயது இளையவர். இதற்கிடையே கோதோ, தனது ஆயுளுக்குக் காரணம் பொறுமை எனத் தெரிவித்துள்ளார். (த-ரி4)

# கணவனின் வருமானம் அறிய கடத்தல் நாடகமாடினார் பெண்

## மும்பாய் நகரில் சம்பவம்

மும்பை, ஓக.29

இந்தியாவின் மும்பாய் நகரில் பெண் ஒருவர், கணவரின் வருமானத்தை அறிந்து கொள்ளக் கடத்தல் நாடகம் ஒன்றை நடத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் பயிற்சி வகுப்பு நடத்திக்கொண்டிருந்த கணவருக்கு, மனைவி கடத்தப்பட்டுள்ளதாக வட்ஸ் அப் மூலம் தகவல் கிடைத்துள்ளது. இந்திய ரூபாவில் ஒரு மில்லியன் பணம் கேட்டு அவருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டது. இதனை அறிந்து கலக்கமடைந்த கணவர் பொலிஸாரின் உதவியை நாடினார். கிடைக்கப் பெற்ற தொலைபேசி இலக்கத்தை வைத்துத் தேடலில் இறங்கினார்.

இதனை அடுத்து இவரது மனைவி இறுதியாக ரயில் நிலையத்தில் இருந்தமை கண்காணிப்புக் கமெராவில் தெரியவந்தது. உடனடியாகப் பெண்ணைக் கைது செய்து பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டனர்.

அவரை எவரும் கடத்தவில்லை என்பதையும், தான் கடத்தப்பட்டமை போன்று படத்தைத் தானே எடுத்து அவர் கணவருக்கு அனுப்பியதையும் விசாரணையில் பொலிஸார் தெரிந்து கொண்டனர். தம்பதியராக ஆரம்பித்த பயிற்சி வகுப்புக்களில் கிடைக்கும் வருமானத்தைத் தன்னுடன் தனது கணவர் பகிர்ந்து கொள்வதில்லை என மனைவி விசாரணையில் தெரிவித்துள்ளார்.

இதனால் உண்மையான வருமானத்தை அறிந்து கொள்ள இவ்வாறு கடத்தல் நாடகத்தில் ஈடுபட்டதாகவும் அவர் கூறியுள்ளார். (த-ரி4)

# ...ப்பாவின் பிரமாண்டமான ...னிவேல் லண்டனில்

...29

...டனில் நொட்டிங் ஹில் ...வல் ஆரம்பமாகியுள்ளது. ... நடைபெறவுள்ள இந்தக் ...ஒரு மில்லியனுக்கும் மேற் ...ாளர்கள் கலந்து கொள் ...திர்பார்க்கப்படுகின்றது. ...வில் இடம்பெறும் மிகப் ... கார்னிவேல் என ஏற் ...தரிவித்

...ண்டில் ...ருடங் ...லாக ... லண் ...வருடம் ...ருகின் ...ங்கள் ...வரும் ... பல ... மன ...ந்துள் ...ர்-ஏற் ...கியோ ...உள்ள ...ாவை ... வைத் ...ற்பாட் ...னர். ...ரிக்க, ...லைப் ...களை ...னரும்

வகையில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பல வர்ண ஆடைகளுடன் கலைஞர்கள் கலந்து கொள்வர். கார்னிவேலின் ஒரு பகுதியாக இசை நிகழ்வுகள், உணவு வகைகள் என்பனவும் பரிமாறப்படும். நேற்று இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் பலரும் கலந்து கொண்டனர். இன்று இரண்டாவது நாள் நிகழ்வுகள் நடைபெறும். (த-ரி4)










துருக்கியின் இஸ்தான்புல்லில் ஆசிய-ஐரோப்பிய பகுதிகளை இணைப்பதற்காக அமைக்கப்பட்ட பாலம் ... திறக்கப்பட்டுள்ளது. யாவுஸ் சுல்தான் சலீம் என இந்தப் பாலத்துக்குப் பெயரிடப்பட்டுள்ளது. நிகழ்வில் வெள்ளை, சிவப்பு நிற பலூன்கள் வானில் விடப்பட்டுப் பாலம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் துருக்கி ஜனாதிபதி ஏர்டகன் மற்றும் பல அரசியல் பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

குருப் பெயர்ச்சி, ஓகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18, ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை-தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் - இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுபப்பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.



## கும்பம்

## அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள் வரை

செய்யும் தொழிலே தெய்வம் என்ற தத்துவத்தை மறவாத கும்ப ராசி அன்பர்களே!

தர்மம் தலைகாக்கும் என்ற தத்துவத்தை மறக்காதவர்கள் நீங்கள். வீட்டுக்கு வரும் விருந்தினர்களை உபசரிப்பதில் உங்களுக்கு நிகர் யாருமில்லை. புதிய மனிதர்களை சந்திக்கும் பொழுது அவர்களைப் பற்றிய அனைத்து விவரங்களையும் கேட்டு அறிந்து கொள்வீர்கள். ஆனால் உங்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட எடுத்துச் சொல்லமாட்டீர்கள். நீங்கள் அதிகம் ஆசைப் படாதவராக இருந்தாலும், வசதிகள் தானாக வரும் பொழுது அதை ஒதுக்கித்தள்ள மாட்டீர்கள்.

உங்கள் மண வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமானால் சூரிய பலம் நன்றாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் ராசிநாதன் சனிக்கு சப்தமாதிபதி சூரியன் பகைவன். உங்கள் சுய ஜாதகத்தைப் புரட்டிப் பாருங்கள். மேற்கண்ட மூன்று கிரகங்களின் அமைப்பைப் பொறுத்தே முன்னேற்றத்தின் முதல் படிக்குச் செல்ல இயலும். கிரகங்கள் சரியான அமைப்பில் இல்லாவிட்டால் பரிகாரங்கள் மற்றும் வழிபாடுகள் மூலமே பலன்களைப் பெற இயலும். இந்த குருப்பெயர்ச்சியின்போது, 8 ஆம் இடத்திற்கு குரு வருகிறது. அதுமட்டுமல்ல ஜூலை 2017 ராகு கேதுக்கள் மாற்றமடைகின்றன. அதுவரை உங்கள் ராசியிலேயே கேதுவும், ஏழில் ராகுவும் இருக்கிறார்கள். எனவே சர்ப்ப தோசத்தின் பிடியிலும் சிக்கியிருக்கிறீர்கள்.

### அஷ்டமத்திற்கு வருகிறார் குருபகவான்

ஆடி 18 ஆம் திகதி (2.8.2016) அன்று 8ஆம் இடத்துக்குக் குரு வருகிறார். என்னதான் குரு நல்லவராக இருந்தாலும் 8 இல் வரும் பொழுது, ஆரோக்கியத் தொல்லைகளை வழங்குவார். எனவே, சீரான உடல் அமைய மாற்று மருத்துவத்தை மேற்கொள்ளுங்கள். கோபத்தைக் குறைத்துக் கொண்டு குணமோடு செயல்படுவதன் மூலமும், குருவைப் பார்த்து தரிசிப்பதன் மூலமும் ஆபத்து அகலும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கலாம். வம்பு, வழக்குகள் வாசல் தேடி வரக்கூடும். நம்பிக்கைக் குரியவர்கள் உங்களை ஏமாற்ற முயற்சி செய்யலாம். சிந்தனையில் தெளிவு ஏற்படாது. சில சமயம் இனம் புரியாத கவலை இடம்பிடிக்கும். இருப்பினும், நீங்கள் செய்த பெரிய பாக்கியம், குரு உங்கள் ராசிக்கு 2 ஆம் இடத்தையும், 4 ஆம் இடத்தையும், 12 ஆம் இடத்தையும் பார்ப்பது தான். மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். கதிரவனைக் கண்ட பனித்துளிபோல் கவலைகள் அகல இறைவழிபாடும், இதயத்தில் உங்களுக்கு இருக்கும் தன்னம்பிக்கையும் கைகொடுக்கும். விரயங்கள் கூடுதலாக இருக்கும். விழிப்புணர்ச்சி தேவை. தீட்டிய திட்டங்கள் திசைமாறிச் செல்லும். குடும்பச் சுமை அதிகரிக்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாறலாம்.

### குரு பார்வை கொடுக்கும் பலன்கள்

நவக்கிரகங்களில் சுபகிரகம் என்று வர்ணிக்கப்படுபவர் குருபகவான். அவர் 8 ஆம் இடத்தில் இப்பொழுது சஞ்சரித்தாலும் அவருடைய பார்வை 2,4,12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே அந்த ஸ்தானங்களெல்லாம் புனிதமடைகின்றன. எனவே அவற்றிற்குரிய ஆதிபத்யங்களெல்லாம் சிறப்பாக நடைபெறப் போகிறது.

வாக்கு, தனம், குடும்பம் என்னும் இரண்டாமிடத்தை பார்ப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வைப்பார். குடும்பச் சுமை கூடுதலாக இருந்தாலும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. வீடுவாங்க, விற்க எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பூர்வீக இடத்தை விட்டுவிட்டு புதிய இடத்தில் வீடு கட்டலாமா? என்று சிந்திப்பீர்கள். பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும். கோயில் கும்பாபிசேகம் நடத்தும் வாய்ப்புக் கிடைக்கும்.

(தொடரும்)

# தமிழ் பேசும் கமரூன் வாசிகள்

சாமஸ்ரீ தேசமான்ய
கலைஞர் பா.பாலச்சந்திரன்

ஒன்றுபல ஆயிடினும்
பல்லுயிரும்பல உலகும்
படைத் தளித்துத்துடைக்கினும் ஓர்
எல்லையரு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களி தெலுங்கும்
கவின் மலையாளமும் துளுவும்
உன்னு தரத்தே யுதித் தெழுந்தே
ஆரியம் போல உலக வழக்கு
அழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே!

இந்த பாட்டில் கமரூன் மக்கள் பேசும் மொழியின் பெயரும் பொறிக்கப்பட்டிருக்கும். அந்தக்காலத்தில் இந்தத் தகவல், அறிஞர் சுந்தரம்பிள்ளைக்குக் கிட்டியிருக்குமானால்! அந்தப்பாடலில் தமசயிற்றைப்பற்றியும் (Tama zight - the language of the Berber people) குறிப்பிட்டு இருப்பார். இவர்கள் வடமேற்கு ஆபிரிக்காவில் உள்ள கமரூன் நாட்டில் வாழும் (Berber) பெர்பர் இனத்தைச் சேர்ந்தவர்கள். 'தமசயிற்' வேறு ஒன்றும் இல்லை. தமிழ் தான் என்கின்றனர். இதை அறிஞர்கள் உருக்குலைந்த அல்லது குழம்பிய தமிழ் என்று கூறுகின்றனர்.

கமரூன் நாட்டின் மேற்கு நைஜீரியா வடகிழக்கு சாட், மத்திய ஆபிரிக்கக் குடியரசு கிழக்கு, கினி, கபோன் கொங்கோ குடியரசு தெற்கு 230 மொழிகள் அவற்றில் 55 அfறோ ஆசி அறிக் மொழி வகையைச் சேர்ந்தவை. (ஆங்கிலம் மூல மொழி பெயர்ப்பு சில அப்படியே தமிழில் எழுதப்பட்டுள்ளண)

ஒருவாரத்துக்கு முன்பு எனது முகநூலில் நண்பர் ஒருவர் ஒரு வீடியோவைப் பகிர்ந்திருந்தார். அதில் நான் எழுதி இருக்கும் தலையங்கம் தான் போடப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் தமிழ் மீது உள்ள அன்பு காரணமாக அதை மற்றவரும் அறியச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டானது. அது ஆங்கில மூலமாக இருந்தபடியால் அதைக்கட்டாயம் தமிழாக்கி உதயன் வாசகர்கள் அறியச் செய்யவேண்டும் என்ற விருப்பினால் இதை எழுத ஆரம்பித்தேன். அதை தினேஸ்குமார் என்ற SRM பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர் தமக்கு அனுப்பியதாக அதில் உரையாற்றியவர் கூறி இருந்தார். அவர் மண்தூரா மலைவாசிகளுடன் இரண்டுமாதம் வாழ்ந்து அந்தச் செய்தியைத் தயாரித்ததாகவும் கூறப்பட்டது. தமிழில் மண் என்றால் எல்லோருக்கும் தெரியும். தூர்தல்-நிரம்புதல், படிதல்-அதுதான் மண்தூர்ந்த மலை mandura எனப்பெயர் பெற்றது. அவர்கள் பல பரம்பரையாக அந்த பாறைகள் அடர்ந்த மலையில் வாழ்ந்து வருகின்றனர். அது செழிப்பற்ற பிரதேசம். அங்கு இந்தியாவில் அப்படிப்பட்ட இடங்களில் பயிர் செய்யப்படும் சோளமே பயிர் செய்யப்படுகின்றது. அதைச் சோளம் என்றே அழைக்கின்றனர். மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்கின்றனர். mal-kutti மால்-கறுப்பு கொட்டி-குத்துதல் கறுப்புகொட்டி-கட்டெறும்பு. அதை அவர்கள் மாலுகொட்டே (malukotte) என்பர். thra Barbara தாற பர்பற-தரை வறவற-தரை நிலம் வறவற-வறண்டு போய்விட்டது.-(வறட்சி) (வ=ப) ஒரு சிறுவன் தம்பலப்பூச்சிய்யைப்பிடித்துக் கொண்டு போய் பேரனிடம் காட்டி இத என்னாமா(ங்)? (இது என்ன?) என்று கேட்கிறான்.

ஒருபூச்சியை புடிபுடி என்கிறான். புடிபுடி-பிடிபிடி இன்கிறுக்கு என்று இங்இருக்கு என்பதற்கு சொல்கிறான். அது என்ன? என்பதற்கு அத என்னாமா(ங்) என்கிறான். அவர்கள் சிகப்பு எறும்பை செவலபாக் (sevalabak) என்கின்றனர். சிவப்பு வாய் என்பது அதன் அர்த்தம். எங்கள் ஊரில் சிவலை ஆள் என்பதை ஒப்பிடுக. இறுதியாக கமரூன் என்பதும் தமிழ் என்கிறார்கள். காமன் + ஊர்= கமரூன் என்பதாக வந்துவிட்டது.

இந்தப்பெயர்களையும் கவனியுங்கள். சூடான்-சூடான காண்பூர். மெய்கங்கை கும்பா-(கும்பம்) போன்ற பெயர்கள் உங்களுக்கு எதைச் சொல்கின்றன. மேலும் எரித்திரியன் கடல் எனப்பெயர் வரக்காரணம் அக்கடலில் எர்தியா என்ற பக்ரீறியா இருப்பதாலேயே. அது சற்று சிவப்பு நிறமுடையது. எரிதிகிற என்ற தமிழ்ச் சொல்லே அதன் மூலம். இது சார்பாக ஓர் அன்பர் முகநூலில் கருத்துக்கூறுகையில் YEI என்னும் தெற்கு சூடானில் உள்ள இடத்தில் வேலை செய்யும் நண்பர் அவருக்குச் சொன்னாராம். அங்கு கொச்சைத் தமிழ் பேசினாலும் மாங்காய், நிலவு, மேகம், மழை, என நல்ல தமிழ் வார்த்தைகளும் பேசுகிறார்களாம்.


இதை அறிந்த பின்பு தமிழ் என்றசந்தோசம் ஏற்பட்டாலும் தமிழின் நிலை உருக்குலைவு கவலையைக் கொடுக்கின்றது. நாமும் குறிப்பாக இந்தியர் ஆங்கிலத்தைக் கலந்து பேசுவது தற்கொலைக்கு சமனாகும். சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தில் இந்தியாவில் தமிழாய் இருந்த இடங்கள் சில இன்று கொடுந்தமிழ் இடங்களாக இருக்கின்றன எனப் பெரியோர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில்: வெ.சந்திரமோகன்

# கறுப்பு இனத்தவர்களுக்கு வழி காட்டிய விடிவெள்ளி பிரெடரிக் டக்ளஸ்



இந்த ஆண்டு நடந்த அரசியல் கூட்டங்களில் வழக்கம்போல ஏராளமான ஓவியர்களும், இசைக் கலைஞர்களும் பங்கேற்றிருக்கிறார்கள். சில கேள்விகளை எழுப்பும் வியம் இது. அரசியலில் கலைஞர்கள் எந்த அளவில் ஈடுபடலாம்? சமூக மாற்றத்துக்கு எந்த அளவுக்குப் பங்களிக்கலாம்?

இதற்கு ஓர் உதாரணமாக நான் இங்கே காட்ட விரும்பும் நபர் ஒரு கலைஞர் அல்ல, ஆனால் ஒரு புதிய கலை வடிவத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று புரிந்துகொண்டவர். 19ஆம் நூற்றாண்டில், அதிக முறை ஒளிப்படம் எடுத்துக்கொண்ட அமெரிக்கர் பிரெடரிக் டக்ளஸ் என்பது வியப்பளிக்கும் விடயம். 160 முறை அவர் ஒளிப்படம் எடுக்கப்பட்டார் (ராணுவ அதிகாரி ஜார்ஜ் கஸ்டர் 155 முறையும், ஆபிரஹாம் லிங்கன் 126 முறையும் ஒளிப்படம் எடுக்கப்பட்டிருக்கிறார்கள்). ஒளிப்படக் கலையைப் பற்றி நான்கு உரைகளும் எழுதினார் பிரெடரிக்.

### மனிதனான அடிமை

கறுப்பினத்தவர் பற்றிய பார்வையை மாற்றுவதற்குத் தனது ஒளிப்படங்களை அவர் பயன்படுத்திக் கொண்டார். தனது உரை வீச்சின் உத்திகளில் ஒன்றாக அவர் கையாண்டது கயாஸ்மஸ் (chiasmus) பாணியை. ஒரு வாக்கியத்தின் முன்பாதியில் இடம் பெறும் வார்த்தைகளை, அதன் பின் பாதியில் தலைகீழாக மாற்றிப் பயன் படுத்தும் பாணி இது என்கிறார், ஹார்வர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் ஹென்றி லூயிஸ் கேட்ஸ் ஜுனியர். உதாரணத்துக்கு, ஒரு மனிதன் எப்படி அடிமையாக்கப்பட்டான் என்பதைப் பார்த்திருக்கிறீர்கள். இனி, ஓர் அடிமை எப்படி மனிதனாக்கப்பட்டான் என்பதைப் பார்ப்பீர்கள் என்று எழுதியிருக்கிறார் பிரெடரிக்.

ஒளிப்படங்களிலும் இதே பாணியைப் பின்பற்றினார். ஆப்பிரிக்க - அமெரிக்கர்கள் ஒளிப்படங்களில் பாமரத் தோற்றத்துடன், கேலிக்குரிய வகையில், தன்னம்பிக்கை இல்லாதவர்களாகக் காட்சியளிப்பதற்கு நேரெதிராகத் தனது ஒளிப்படங்களில் அவர் தோன்றுவார்.

ஒளிப்படங்களுக்கு மிகக் கவனமாக தோற்றம் கொடுப்பார் (போஸ்). காலப்போக்கில் அவர் தோற்றம் கொடுக்கும் விதத்தில் ஒரு பரிணாம வளர்ச்சி தெரிந்தது. அவரது அடுத்தடுத்த ஒளிப்படங்களில் தென்படும் மாற்றத்தை, சமீபத்தில் வெளியான பிக்சரிங் பிரெடரிக் டக்ளஸ் எனும் புத்தகத்தில் காணலாம். ஜான் ஸ்டாஃபர், ஜோ ட்ராட் மற்றும் செலெஸ்ட்-மேரீ பெர்னீர் ஆகியோர் தொகுத்த புத்தகம் இது. இது தவிர, சமீபத்திய அபெர்ச்சர் இதழில் கேட்ஸ் எழுதிய கட்டுரையிலும் இதைப் பற்றிப் படிக்கலாம்.

கிட்டத்தட்ட எல்லாப் ஒளிப்படங்களிலும், கருப்புக் கோட், மடிப்புக் கலையாத கொலர், கழுத்துப்பட்டை என்று நேர்த்தியாக உடையணிந்திருக்கிறார் டக்ளஸ். மதிப்புமிக்க சமூகத்தைச் சேர்ந்தவராக, கண்ணியமிக்க உயர்ந்த கலாசாரப் பின்னணியைச் சேர்ந்தவராக அப்படங்களில் காணப்படுகிறார்.

ஆனால், நடுத்தரவர்க்கத்துப் பாணியின் அந்தத் தோற்றத்துக்குப் பின்னால், மிகப்பெரிய தனியாளுமை வலிமை இருக்கிறது. வலிமை இல்லா மனிதன் மனித குலத்தின் அடிப்படைக் கண்ணியம் அற்றவன் என்று எழுதியிருக்கிறார் பிரெடரிக். உக்கிரமான அவரது தோற்றம், அவரது குலையாத உறுதியையும் சிங்கம் போன்ற பெருமிதத்தையும் உணர்த்துகிறது. 23 வயதுவாக்கில் எடுக்கப்பட்ட ஒளிப்படங்களில் முஷ்டியை மடக்கியபடி காட்சியளிக்கிறார்.

> பார்ப்பது என்பது மிக எளிதான விடயம் எனும்மாயையே பெரும்பாலும் நம்மிடம் இருக்கிறது. ஏதோ ஒன்றைப் பார்க்கிறீர்கள். அதிலிருந்து சில விடயங்களை எடுத்துக் கொள்கிறீர்கள். கடைசியாக அதை மதிப்பிடுகிறீர்கள். சிரமமான விடயம் அதுதான். உண்மையில், நாம் பார்ப்பதை அப்படியேதான் மதிப்பிடுகிறோம். நம் இயல்பு, அனுபவம் ஆகியவற்றால் ஆன தன்னுணர்வற்ற மனச் சட்டகத்தைச் சுமந்துசெல்கிறோம். உலகத்தை நாம் பார்க்கும் விதம், அதை எப்படி அர்த்தப் படுத்திக்கொள்கிறோம் என்பதை அதுதான் தீர்மானிக்கிறது.

### தோற்றமும் வலியும்

அமெரிக்க உள்நாட்டுப் போருக்கு முந்தைய காலகட்டத்தில் எடுக்கப் பட்ட சில படங்களில் கமராவை நேருக்கு நேராக உற்றுப் பார்க்கிறார் பிரெடரிக். அது அந்தக் காலகட்டத்தில் கறுப்பினத்தவர்களிடம் இல்லாத வழக்கம். அவரிடம் தெறித்த கம்பீரமான கோபம் அது. நான் அடிமையாக இருந்தபோது, வேறு எந்தக் காரணங்களையும்விட என் தோற்றத்துக்காகவே நான் அதிகமாகத் தாக்கப்பட்டிருக்கிறேன். அதாவது, அதிருப்தியடைந்திருக்கும் முகபாவனைக்காக. அதிருப்தி அடைந்திருந்ததால் தானே நான் அதிருப்தியான முகபாவத்தை வெளிப்படுத்தினேன்! என்று 1847 இல் பிரிட்டிஷ் மக்களிடம் உரையாற்றியபோது அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

புரட்சிகரமான அந்த அதிருப்தி முகபாவத் தைத் தனது ஒளிப்படங்களில் அவர் வெளிப் படுத்தினார். இளைஞராக அவர் இருந்தபோது ஒளிப்படங்களில் ஊடுருவும் பார்வையுடன், கம்பீரமாகக் காணப்படுகிறார். வயதாக ஆக, அவரது முகத்தில் ஆழ்ந்த அறிவு முதிர்ச்சியும், கவலையும் தொனிக்கின்றன. ஆழ்ந்த மாண்பும், மேதைமையும் கலந்த தோற்றம் அவருக்கு வந்துவிட்டிருக்கிறது.

அமெரிக்காவில் அன்றைக்குக் கருப்பினத்தவர்கள் மீது முத்திரை குத்தப்பட்டிருந்ததற்கு மாறாக, ஒரு கருப்பின மனிதனின் மனிதத்துவத்தைத் தனது புகைப்படங்கள் மூலம் பிரெடரிக் காட்டினார். எல்லாவற்றுக்கும் மேலாக, மக்கள் எப்படிப் பார்க்க வேண்டும் என்று கற்றுத்தருவதற்குப் புகைப்படக் கலையைப் பயன்படுத்திக்கொண்டார்.

### உடைக்கப்படும் கற்பிதங்கள்

பார்ப்பது என்பது மிக எளிதான விடயம் எனும் மாயையே பெரும்பாலும் நம்மிடம் இருக்கிறது. ஏதோ ஒன்றைப் பார்க்கிறீர்கள். அதிலிருந்து சில விடயங்களை எடுத்துக் கொள்கிறீர்கள். கடைசியாக அதை மதிப்பிடுகிறீர்கள். சிரமமான விடயம் அதுதான். உண்மையில், நாம் பார்ப்பதை அப்படியேதான் மதிப்பிடுகிறோம். நம் இயல்பு, அனுபவம் ஆகியவற்றால் ஆன தன்னுணர்வற்ற மனச் சட்டகத்தைச் சுமந்துசெல்கிறோம். உலகத்தை நாம் பார்க்கும் விதம், அதை எப்படி அர்த்தப்படுத்திக்கொள்கிறோம் என்பதை அதுதான் தீர்மானிக்கிறது.

பிரெடரிக் தனது ஒளிப்படங்கள் மூலம், அந்த மனச் சட்டகத்தை மாற்றியமைத்தார். கருப்பினத்தவர்கள் தொடர்பாக இருந்த பழைய கற்பிதங்கள்ளை மாற்றிக் காட்டினார்.

கவிஞர்கள், தீர்க்கதரிசிகள், சீர்திருத்தவாதிகள் அனைவரும் சித்திரங்களை உருவாக்கக் கூடியவர்கள். இந்தத் திறன்தான் அவர்களுடைய ஆற்றலுக்கும் சாதனைகளுக்கும் பின்னுள்ள ரகசியம் என்று பிரெடரிக் எழுதியிருக்கிறார். இங்குதான் கலைஞர்கள் தங்கள் முத்திரையைப் பதிக்கிறார்கள். நமது பொதுவான உணர்வு நிலைக்கு மாறான சித்திரங்களை ஆழ்மனத்தில் பதிக்கிறார்கள். நம் கண்கள் உட்கிரகிக்கும் வியங்கள் மீது மதிப்பையும், கனத்தையும் அந்தச் சித்திரங்கள் ஏற்படுத்துகின்றன. கலைஞர்கள் ஏன் சார்பு நிலையிலும் சட்ட விவகாரங் களிலும் ஈடுபடுகிறார்கள் என்று எனக்குப் புரியவேயில்லை. மக்களின் மனச் சட்டகத்தை மாற்றியமைப்பதில்தான் கலைஞர்களின் உண்மையான ஆற்றல் இருக்கிறது.

காணொலிகளின் காலத்திலும் ஒளிப்படம் சக்திமிக்கது. காரணம், ஒற்றை உண்மையை வேரூன்றச் செய்யும் திறன் அதற்கு உண்டு. ஈடன் தோட்டத்தைச் சித்திரிக்கும் ஓவியம், டச்சு ஓவியர் ஜோகன்னஸ் வெர்மீர் வரைந்த கேர்ள் வித் எ பேர்ல் இயர்ரிங் போன்ற படைப்புகளில், அதிரடியாகக் கருப்பினத்தைச் சேர்ந்த மொடல்களை வைத்து ஏகப்பட்ட படைப்புகள் வெளியாகின்றன.

இவை உங்கள் எண்ணத்தை மட்டும் மாற்றுவதில்லை. உங்கள் பார்வையை இதுவரை கட்டமைத்து வந்த லென்ஸ்களையே சிதறடிக்கின்றன.

*- நன்றி: தி நியூயோர்க் டைம்ஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வண்ண நிலா

வெள்ளையாக அசைகிறதே வானத்திலே
மேகமெல்லாம் நகர்கிறது காற்றினிலே
புள்ளியாக தெரிகிறதே என்ன அது
பூத்திருக்கும் நட்சத்திரக் கூட்டமது
வட்டமாக ஒளிப்பிளம்பாய்த் தெரிகிறதே
வண்ண நிலா தெரிகிறதே வானத்திலே

## வர்ணம் தீட்டுவோம்....



## நட்பின் மகத்துவம்

ஒரு காட்டில் எல்லா மிருகங்களும் வாழ்ந்து வந்தன. அதில் மானும் முயலும் நண்பர்களாகவும், இணைபிரியாதவர்களாகவும் இருந்தன. இவர்கள் இருவரது நட்பைப் பார்த்து மற்ற மிருகங்களான நரி, கரடி, குரங்கு, யானை ஆகியன பொறாமை கொண்டிருந்தன. ஆகையால் இவர்கள் இரண்டு பேரையும் பிரிக்க வேண்டும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டன.

மானும் முயலும் தமது உணவைத் தேடிச் சென்று கொண்டிருக்கையிலே இவர்களை அவதானித்த யானையும், குரங்கும் "இவர்கள் ஏதோ ஒரு பெரிய உயிர் நண்பர்கள் போலத் திரிகின்றனர். இருவருக்கும் இடையில் இருக்கும் நட்பின் ஆழம் எந்தளவு இருக்கும் என்பதனைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டன.

இதற்காக வேறு மிருகங்களின் உதவியை நாடி யானையும் குரங்கும் செல்கையில் கரடியும் நரியும் சேர்ந்து ஒரு யோசனையை முன்வைத்தன. "மானும் முயலும் எப்போதாவது பிரிந்து செல்லும்போது அதில் ஏதாவது ஒருவரை வேடன் தோண்டி வைத்திருக்கும் குழிக்குள் விழச் செய்ய வேண்டும். அதில் இருந்து இவர்கள் மீண்டெழுவதை ஒழிந்திருந்து பார்ப்போம்" என்றது நரி. அதேபோன்று அடுத்த நாள் முயல் அந்தக் குழி இருந்த பக்கம் தனியாகச் சென்று குழிக்குள் அகப்பட்டுக் கொண்டது. இதனை அவதானித்த மற்ற மிருகங்கள் உதவி செய்யாமல் பார்த்துக் கொண்டு இருந்தன. "முயல் என்னைக் காப்பாற்றுங்கள்" என்று கத்தியது.குரங்கு மானிருக்கும் இடத்திற்குச் சென்றது. மான் புல் மேய்ந்து கொண்டிருக்கையில் குரங்கு வந்து "உன் நண்பன் குழிக்குள் விழுந்து கத்திக் கொண்டு இருக்கின்றான். அந்த இடத்தில் காப்பாற்றுவதற்கு வேறு மிருகங்களும் இல்லை. நீ வந்து காப்பாற்று" என்று சொன்னது. மான் தலை தெறிக்க முயல் இருக்கும் இடத்திற்கு ஓடி வந்தது. மானைக் கண்டதும் முயலுக்குத் தைரியம் வந்து. என்றாலும் பயத்தில் "காப்பாற்று நண்பா" எனக் கத்தியது.



உடனே மான் யோசித்து விட்டு "நான் குழிக்குள் விழுகிறேன். நீ என்மீது ஏறி மேலே பாய்ந்து செல்" என்று முயலிடம் கூறிவிட்டு குழிக்குள் விழுந்தது. மான் கூறியபடியே முயல் தப்பித்துக் கொண்டது. அதேசமயம்குழிதோண்டிய வேடன் அந்தப் பக்கம் வந்து குழியைப் பார்க்கையில் "இன்று நல்ல வேட்டை" என்று நினைத்து மானை வேட்டையாட எண்ணுகையில் பக்கத்தில் முயல் நிற்பதையும் அவதானித்தான். மான் உடனே முயலிடம் "நீ ஓடித் தப்பிவிடு. நான் இங்கிருந்து தப்பிப்பது கஸ்டம்" எனக் கத்தியது. "நண்பா உன்னை விட்டு எப்படிச் செல்வேன்" என்று முயல் கூறுகையில் "நான் எவ்வாறு தப்புவது? நீயாவது ஓடித் தப்பிக் கொள் என்றது. முயல் மிகுந்த மன வருத்தத்துடன் அவ்விடத்தை விட்டு போக மனமில்லாமல் நிற்கையில், இதை அவதானித்துக் கொண்டிருந்த வேடனின் கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தது. அவன் உடனடியாகவே செயற்பட்டு மானைக் குழியிலிருந்து காப்பாற்றினான். மகிழ்ச்சியடைந்த முயலும் மானும் அங்கிருந்து துள்ளிக் குதித்து ஓடின. நட்புக்கு [illegible] இல்லை. உண்மையான நட்பு என்றுமே நிலைத்திருக்கும்.

*- சரண்யா*



## கடற்பஞ்சு

கடலில் வாழும் கடற்பஞ்சு தாவரம் அல்ல. அது ஒருமிருக இனத்தைச் சார்ந்தது. மிருகங்களில் வாழ்க்கையை ஒட்டியே இதன் வாழ்க்கையும் உள்ளது. இது கடலில் வாழ்ந்து அங்கு கிடைக்கும் ஆகாரத்தையே உட்கொள்கின்றது.





## வரலாற்றில் இன்றைய தினம்

708 – செப்புக் காசு ஜப்பானில் முதன்முதலாக உருவாக்கப்பட்டது.
1825 – பிரேஸிலின் சுதந்திரத்தைப் போர்த்துக்கல் அங்கீகரித்தது.
1831 – காந்தப் புலத் தூண்டலை மைக்கல் பரடே கண்டுபிடித்தார்.
1869 – மலைத் தடத்தில் ஏறும் முதலாவது புகையிரதப் பாதையான மவுண்ட் வோஷிங்டன் கோக் புகையிரதப் பாதை திறந்து வைக்கப்பட்டது.
1898 – குட் இயர் ரயர் கம்பனி தொடங்கப்பட்டது.
1907 – கியூபெக் பாலத்தின் கட்டுமானப் பணியின்போது பாலம் உடைந்து வீழ்ந்ததில் 75 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.
1910 – ஜப்பான் – கொரிய இணைப்பு ஒப்பந்தம் என அழைக்கப்படும் 1910 ஆம் ஆண்டின் ஜப்பான் – கொரிய ஒப்பந்தத்தையடுத்து கொரியாவில் ஜப்பானிய ஆட்சிக் காலம் தொடங்கியது.
1915 – விபத்தொன்றின்போது மூழ்கிய அமெரிக்காவின் முதலாவது நீர்மூழ்கிக் கப்பலான F-4 அமெரிக்காவின் மீட்பு சுழியோடிகளால் வெளிக்கொணரப்பட்டது.
1916 – பிலிப்பைன்ஸின் சுயாட்சி சட்டத்தை, அமெரிக்கா அனுமதித்தது.
1922 – நியூயோர்க் நகரில் முதலாவது வானொலி விளம்பரம் ஒலிபரப்பாகியது.
1943 – ஜேர்மன் ஆக்கிரமித்த டென்மார்க்கில், அதன் கடற்படை சிதைவடைந்ததையடுத்து, ஜேர்மனி டென்மார்க் அரசைக் கலைத்தது.
1941 – எஸ்தோனியாவின் தலைநகரான தலினை சோவியத் ரஷ்யா வைத்தொடர்ந்து நாஸி ஜேர்மன் ஆக்கிரமித்தது.

oolaham Foundation.
| aavanaham.org

# தமிழ்ப் பெண்களே நீங்களா இப்படி?

வெளிநாட்டில் இருந்த 5 இளம் பெண்கள் தமிழ் நாட்டுக்குச் சுற்றுலா வருகிறார்கள். அவர்கள் ஐவரும் தமிழ்ப் பெண்கள். ஆனாலும், அதைக் காட்டிக்கொள்ள விரும்பாதவர்கள். எனவே தமிழ் நாட்டைச் சேர்ந்த சாந்தி என்ற தமிழ்பெண் ஒருவரை தங்களுடைய தேவைக்காக நியமித்துக் கொள்கிறார்கள்.

சாந்தி தமிழ் பெண் என்பதால் அவர் சேலை உடுத்துள்ளாள். வெளிநாட்டில் இருந்து வந்த ஐவரும் நாகரிக உடையை அணிந்துள்ளார்கள். ஐவரில் ஒருத்தி மட்டும், மற்றைய நாலு பேருக்கும் தெரியாமல் தமிழ் பேசுவாள். 2ஆம் நாள் மாலை அவர்கள் தேனி மாவட்ட மலைபகுதிக்கு வருகிறார்கள். அவர்கள் மலையின் அந்தப் பக்கம் உள்ள ஊருக்குப் போக வேண்டும். அந்த மலையில் மாட்டு வண்டியைத் தவிர வேறு எந்த வாகனமும் செல்லமுடியாது. ஆனால், இருட்டி விட்டது. அப்போது தமிழ் நாட்டுப் பெண்ணான சாந்தி "இருட்டி விட்டது. இன்று இரவு இந்த ஊரில் தங்கிவிட்டு, விடிந்ததும் போகலாம்" என்று கூறினாள். அதற்கு வெளிநாட்டில் இருந்து வந்த அவர்கள் இந்த ஊர்காரர்களோடு தங்கமாட்டோம், நாகரிகமற்றவர்கள், காட்டு மிராண்டிகள், வேட்டி சேலை கட்டிக்கொண்டு இன்னமும் முன்னேற்றம் அடையாத மூடர்கள், வேட்டி, சேலையைப் பார்த்தாலே அருவருப்பாக உள்ளது. நாகரிக உலகிலும் மாட்டு வண்டி ஓட்டும் மடையர்கள் இங்கு உள்ளவர்கள்-என்றார்கள்.

சாந்தி மேற்கொண்டு எதுவும் பேசாமல் தலை கவிழ்கிறாள். அனைவரும் அந்த ஊரில் இருந்து நடந்து மலையேறுகிறார்கள். இருட்டும் தூரம் வரை மலையில் ஏறியவர்கள்; நன்றாக இருட்டியதும் மேலே ஏறமுடியாது ஒரு கூடாரம் அமைத்து தங்குகிறார்கள். தீமூட்டி வெளிச்சம் பெற்று, இரவு உணவுகளை அருந்தி, அயர்ந்து தூங்குகிறார்கள். நடுநிசியில் பலத்த காற்று வீசுகின்றது. இதன்போது தீப்பொறி பறந்து அவர்களின் கூடாரம் மீது விழ, கூடாரம் தீ பற்றி எரிகிறது. எல்லோரின் ஆடைகளிலும் தீ பற்றி எரிய, ஐவரில் ஒருத்தி தீ லேசாகப்பட்டதும், விழித்து கொண்டு அவள் மீது பற்றிய தீயை அணைத்தபடி அவர்களை எழுப்புகிறாள். ஆனால் அதற்குள் மற்றையவர்கள் மீது தீ வேகமாகப் பரவ, அவர்கள் வலியால் துடிக்கிறார்கள். தமிழ்ப் பெண்ணான சாந்தி சேலையில் தீ பற்றியதும் சேலையை உருவி விட்டு கூப்பாடு போட்டபடி தீயை அணைத்து, அவர்களைக் காப்பாற்ற முற்படுகிறாள். அந்த மலைக்கு வேட்டைக்கு வந்த பக்கத்து ஊர் வாசிகள் அங்கு வந்து, அவர்களின் நிலையை உணர்ந்து, தங்களுடைய வேட்டியை அவிழ்த்து அவர்களின் தீயை அணைத்து, இன்னும் சில வேட்டிகளால் அவர்களின் ஆடைகளற்ற மேனியைச் சுற்றிப் போர்த்தார்கள். அத்தோடு ஊருக்கு தொலைபேசியில் அறிவிக்கின்றார்கள். ஊரில் இருந்தவர்கள் மாட்டு வண்டியுடன் அந்த இடத்துக்கு விரைந்தார்கள். வேட்டைக்காரர்கள் மாட்டுவண்டியில் அந்த வெளிநாட்டவர்கள் ஐவரையும் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கிறார்கள். மருத்துவமனைக்குப் போகும் போது, அந்தத் தமிழ்ப் பேசும் வெளிநாட் டுப் பெண் சொன்னாள்; வேட்டியும் சேலையும் தமிழனின் கலாசாரம் மட்டுமல்ல, அதுதான் உங்களின் அடையாளம் எவருக்காகவும் மாற்றிக் கொள்ளாதீர்கள்-என்று.




இங்கும் இதேபோன்று ஒரு சம்பவத்தை நான் அவதானித்தேன். தற்போது நல்லூர்த் திருவிழா ஆரம்பமாகியுள்ளது. இந்த திருவிழாக் களுக்கு எமது இனத்தைச் சேர்ந்த வெளிநாட்டில்வசிப்பவர் கள் இங்கு வருகைதருகின்றார்கள், அத்தோடு வெளிநாட்டு வாசிகளும் வருகின்றார்கள். வெளிநாட்டவர்கள் அழகாக சேலை அணிந்து, கலாசாரத்தை உணர்ந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். எமது மக்களோ, ரெனிம்ரவுசர், நாகரிக உடைகளை அணிந்தவர்களாக வருகின்றார்கள். "அம்மா" என்ற அழகான வார்த்தையை "மம்மி" என்கின் றார்கள். கச்சான் கடையில் காசு என்பதற்கு பதிலாக "மணி" என்கின்றார்கள். இவற்றைப் பார்க்கும்போது ஒருபக்கம் சிரிப்பாகவும் இன்னொரு பக்கம் வேதனையாகவும் உள்ளது. எங்களது அடையாளங்கள் மாற்ற மடைகின்றன, மாற்றப்படுகின்றன. பாரம்பரியங்கள் அழிக்கப்படுகின்றன. எமது காலசாரங்களை சிதைத்துக் கொண்டு, நாம் கலாசாரத்தைப் பாதுகாக்கின்றவர்கள் என்றும், யாழ்ப்பாணத்து கலாசாரம் மேலானது என்றும்- பல இடங்களில் உயர்வாகக் காட்டிக் கொள்கின்றோம். அவ்வாறு இல்லாது அன்றைய எமது சமூகம் எம்முள் விட்டுச் சென்றவற்றை நாங்கள், எமது எதிர்காலச் சந்ததிகளுக்கு விட்டுச் செல்லவேண்டும். வழி தவறும் அவர்களுக்குச் சரியான வழி எது எனச் சொல்லி கொடுக்க வேண்டும். இவற்றையெல்லாம் உணர்ந்தவர்களாக. எமது எதிர்காலச் சந்ததிகளுக்கும் எமது பாரம்பரியங்களை உணர்த்தியவர்களாக இருப்பதே தமிழன் என்ற அடையாளத்தை தக்க வைக்கும். எமது அடையாளங்களை மாற்றுவோமானால் அது எமது இனத்தினுடைய அடையாளத்துக்குச் செய்யும் துரோகம் ஆகும்.

# பெண்ணியத்தைக் காத்துக் கொள்ளுங்கள் பெண்களே..

உடுவிலூர் கலா

பெண்ணியம் என்பது பெண்களைப் பற்றிய உடல்-உளம்-சார்ந்த தொகுப்பு ஆகும். பெண்களின்உடல், உளதேவைகள்நடை உடை வாழ்க்கை முறையாவும் அடங்கிய தொகுப்பாகப் பெண்ணியம் அமைகின்றது. பெண்ணியம் பற்றிய விளக்கம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் காலதேவனின் கட்டாயமாக அமைகிறது. பெண்ணியம் மிகவும் பக்குவமாகக் கையாள வேண்டிய ஒன்று. ஒரு பெண்ணின் தலையில் இருந்து கால்வரை பரவி நிற்கிறது பெண்ணியம். இதனால் பாதம் பட்டு மிதிபடாமலும் இயற்கை செயற்கை வார்த்தைகள் சொல்லம்புகளால் களங்கப் படாமலும் பெண்ணியத்தைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு பெண்ணினதும் தலையாய கடமையாகும்.

> ஒவ்வொரு பெண்ணும் தனது சுதந்திரத்தை உரிமையை எவரிடமும் அடகு வைக்காமல் பாதுகாப்பதே சிறந்த பெண்ணியம். மானத்தை, ஒழுக்கத்தை ஆடம்பர அசிங்க அலங்கோலங் களுக்குள் திணித்து ஆபாசத்தைத் தூண்டுவது பெண்ணியமாகாது.

ஒவ்வொரு பெண்ணும் தனது சுதந்திரத்தை உரிமையை எவரிடமும் அடகு வைக்காமல் பாதுகாப்பதே சிறந்த பெண்ணியம். மானத்தை, ஒழுக்கத்தை ஆடம்பர அசிங்க அலங்கோலங்களுக்குள் திணித்து ஆபாசத்தைத் தூண்டுவது பெண்ணியமாகாது. மின்சார விளக்காக பலர் கண்களில் பளிச்சிடுவது பெண்ணியத்துக்கு ஏற்புடையதல்ல. வீண் தொலைபேசி உரையாடல்களில் தொலைந்து போவது பெண்ணியக் கொள்கைக்குள் அடங்கவில்லை. பாலியல் வன்புணர்வுகளுக்குப் பக்கம் சார்ந்து வாழ்வது பெண்ணியத்துக்கு இழுக்கானது. ஒவ்வொரு பெண்ணும் ஒழுக்கமான வாழ்க்கை வாழ்ந்து, தமது சுதந்திரத்தை உள்ளங்கையில் பொத்திக் கொண்டாலே பெண்ணியம் சிதை வடையாது சிறப்படையும்.

ஆண்களைப் போன்று நடந்து கொள்வதோ, அடக்கமின்றி வாழ்வதோ, அதிகாரம் செலுத்துவதோ பண்பாட்டைச் சீரழிப்பதோ பெண்ணியமில்லை. ஆண்களுக்கு நிகராக வாழ்வதும் சமூகத்தில் ஆணைப்போல பெண்ணை சமமாக மதிப்பதும், ஆண்கள் செய்யும் தவறுகளை எதிர்த்து உண்மையை எடுத்துரைப்பதும் பெண்ணியமாகும்.

ஒருவனுக்கு ஒருத்தி என வாழப் பணிக்கும் எம் பண்பாடு பெண்ணியத்தைப் போற்றி மெருகேற்றுகிறது. ஆனால், அக்கொள்கையே இன்று அருகி மருகிச் செல்கிறது. அழகான மனைவியிருக்க அப்பாவிச் சிறுமிகளை வன்புணர்வு செய்யும் ஆண்களாலும், தன் துணையிருக்க அலைந்து திரிந்து பாலியல் சுகம் தேடும் பெண்களாலும் எம் பண்பாட்டின் ஒழுக்க விதிகள் புதைக்கப்படுவது மட்டுமல்ல, பெண்ணியமும், கண்ணீர் வடிக்கிறது. பாலியல் வன்புணர்வுகளாலும் வீண் கொடுமையாலும் பெண்ணியம் கடினப்படுவதும், விவாகரத்தினாலும், விபசாரத்தினாலும் புனிதத்தையும் இழக்கிறது.

பெண்ணியத்தைப் பற்றி எழுதிக் கொண்டே போகலாம். சமகால நிகழ்வுகளை நோக்குமிடத்து ஆண்களால் மட்டுமல்ல, பெண்களாலும் பெண்ணியம் சோபை இழந்து நிற்கிறது என்பதே உண்மை. பெண்ணியத்தைப் பாதுகாக்க வேண்டியது பெண்களின் பொறுப்பு. ஆண்கள் ஆணியத்தை சட்டைப் பைக்குள் பக்குவமாக போட்டு வைத்துள்ளார் கள். தேவையின்போது பயன்படுத்துகிறார்கள். வக்கிர ஆதிக்கத்தோடு ஆணியத்தைச் சேர்க்கும் போது வன்முறையாளர்களாக, வன்புணர்வாளர்களாக மாறுகின்றனர். ஆண்கள் எல்லோருமே ஆணாதிக்க சிந்தனையாளர்களுமில்லை. பெண்களை வதை செய்பவர்களுமில்லை. பெண்களைத் தெய்வமாகப் போற்றுகின்ற, பெண்களை பெண்களாக மதிக்கின்ற ஆண்களும் இருக்கிறார்கள். பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அழகை ரசித்து வாழ்க்கையை அர்த்தமாக்குகின்ற அவதார புருஷர்களும் எம் மத்தியில் உள்ளனர். இவர்கள் சிறந்த பெண்ணியவாதிகள். பெண்ணியம் என்பது ஆண்களுக்கு எதிரான கோட்பாடோ, மாற்றுக் கருத்துக்களோ அல்ல. ஆண்களுக்குச் சமமாக சமத்துவமாக அனைத்து நிர் வாகங்களிலும் பங்கு கொள்வதையும், சுதந்திரமாக வாழ்வதையும் குறிக்கோளாகக் கொண்டது. இவற்றைச் சரிவர உணர்ந்த ஆண்கள், பெண்ணியத்தைப் பாதுகாத்து தமது ஆண்மையை அழகாக சமுதாயத்திலும் சரி. குடும்பத்திலும்சரி, பதிவு செய்கிறார்கள்.

பெண் விடுதலைக்காகப் போராடுகிறோம். ஆனால், பெண்களே பெண்களின் வாழ்வை இருளாக்கு கின்றனர். இதனால் கறைபடிகின்றது. பெண்மைக்கு என்பதை இவர்கள் உணரவில்லை. இருபாலினத்தவரையும் கொண்டதே இவ்வுலகம். இருவரும் சமமாகவே வாழவேண்டும். ஆண்-பெண்ணை வதை செய்வதும், பெண்ணே பெண்ணை அழிப்பதும் என்றால்– பெண்ணியத்தின் இன்றைய நிலை என்ன? பெண்களே சிந்திக்க வேண்டும். தவறைத் தட்டிக் கேட்பவராக; உண்மையை இடித்துரைப்பவராக; துயரத்தில் பங்கு கொள்பவராக பெண்ணின் விழிநீர் துடைப்பவராக தட்டிக் கொடுப்பவர்களாக பெண்கள்வாழவேண்டும். பெண்ணின விடுதலைக்காய் போராட வேண்டும். பெண்ணியத்தைக் கொன்று போடும் நாசதாரிகளை கொன்றுபோடும் பெண்களாக வாழ வேண்டும். அப்போது தான் பெண்ணியம் முழுமை பெறும்.

ஆக பெண்களே! பெண்ணியம் உங்களது உள்ளங்கைகளில். நீங்களே அதனைக் களங்கப்படுத்தாதீர்கள். பெண்ணியத்தின் எதிரியாக மாறும் நிலையைத் தவிருங்கள். புனிதமான பெண்மையைக் கொச்சைப்படுத்தாதீர்கள். இவ்வுலகில் ஆண்கள் மிக மிக விரும்புவது பெண்ணையே. இதனால் தானே பெண்களை அன்பாகவும்சரி, அதிகாரமாகவும்சரி நெருங்குகிறார்கள். இந்த உண்மையை, நாம் உணரத் தவறலாமா? எமது பெண்மையை, ஆண்களால் விரும்பப்படும் பெண்மையை, கவிஞர்களால் வடிக்கப்படும் பெண்மையை, புலவர்களால் புகழப்படும் பெண்மையை, பெண்களே கொச்சைப் படுத்தலாமா? கொன்றுபோடலாமா? சிந்தியுங்கள் பெண்களே...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**மேடம்:** உங்களின் தனித்திறமையை, நண்பர்கள் பாராட்டுவர். முயற்சிக்கு உரிய பலன் முழுமையாக வந்து சேரும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள், புத்தாடை, நகை வாங்குவர்.

**இடபம்:** பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் உள்ள குளறுபடியைச் சரி செய்வது நல்லது. இலாபம் சுமார். பெண்கள், வீட்டுச் செலவுக்காக கடன் வாங்கலாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** மனதில் தைரியம் உண்டாகும். எதிர்ப்புக்களைச் சாதுரியமாக வெல்வீர்கள். தொழில், வியாபாரத்தில், இலாபம் உயரும். நிலுவைப் பணம் வசூலாகும். மனைவி விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம்:** புதிய முயற்சியில் ஈடுபட்டு, நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரம், தாமதகதியில் இருக்கும். மிதமான இலாபம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு, மனம் அமைதி பெற உதவும்.

**சிங்கம்:** செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.



**கன்னி:** தடை விலகி, செயலில் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் பன்மடங்கு உயரும். பெண்கள் விரும்பிய பொருள் கைக்கு வந்து சேரும். குடும்பத்தில் சுப நிகழ்வு உண்டாகும்.

**துலாம்:** உறவினரின் செயலால், தொல்லை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், கூடுதல் உழைப்பால் வருமானம் சீராகும். பெண்கள் நகை, பணத்தை விழிப்புடன் பாதுகாக்கவும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.



**விருச்சிகம்:** சொந்த விடயம் பற்றி, பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மிதமான வருமானம் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது.

**தனுசு:** மனதில் ஆன்மிக சிந்தனை மேலோங்கும். தாயின் அன்பும், ஆசியும் ஊக்கம் தரும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**மகரம்:** புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் கூடும். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமங்கள் விலகும். இலாபம் சீராகும். புத்திரர் விரும்பியதை வாங்கிக் கொடுப்பீர்கள். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கும்பம்:** பணிகளில் விழிப்புடன் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாற்றம் ஏற்படலாம்.

**மீனம்:** முக்கிய பணி நிறைவேற தாமதம் ஆகலாம். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான பணவரவு கிடைக்கும். உடல் நலனில் அக்கறை தேவை.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 6 | | | | | | |
| | 1 | | 9 | 8 | | | | |
| | | | | 1 | | | 6 | |
| | | 5 | | | | | | 1 |
| | 6 | | 4 | | 5 | | 8 | |
| 9 | | | | | | 3 | | |
| | 7 | | | 6 | | | | |
| | | | | 3 | 2 | 6 | 1 | |
| | | | | | | 9 | 2 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 7 | 9 | 6 | 8 | 3 | 2 | 5 |
| 2 | 6 | 8 | 3 | 5 | 4 | 7 | 1 | 9 |
| 3 | 5 | 9 | 7 | 2 | 1 | 6 | 4 | 8 |
| 1 | 7 | 6 | 2 | 3 | 9 | 5 | 8 | 4 |
| 9 | 2 | 3 | 8 | 4 | 5 | 1 | 6 | 7 |
| 8 | 4 | 5 | 6 | 1 | 7 | 2 | 9 | 3 |
| 7 | 8 | 1 | 5 | 9 | 2 | 4 | 3 | 6 |
| 6 | 9 | 2 | 4 | 7 | 3 | 8 | 5 | 1 |
| 5 | 3 | 4 | 1 | 8 | 6 | 9 | 7 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## தமிழில் வெளிவருகிறது டோண்ட் ப்ரீத்



உலக மக்களால் அடுத்து எதிர்பார்க்கப்படும் ஹொலிவுட் படம் 'டோண்ட் ப்ரீத்'. இதில் பிரபல ஹொலிவுட் நடிகர் ஸ்டீபன் லாங் பார்வையற்ற முன்னாள் அமெரிக்க இராணுவ வீரராக நடித்துள்ளார். பார்வையற்றவராக நடிக்க தன் கண்பார்வையை மங்கச் செய்யும் லென்ஸ் அணிந்து நிஜமான பார்வையற்றவராக மாறி நடித்திருக்கிறார். ஸ்டீபன் லாங்கின் இந்த செயல் உலக அளவில் விவாதிக்கப்பட்டு வரும் நிலையில் படத்துக்கு எதிர்பார்ப்பும் அதிகரித்திருக்கிறது.

இது பற்றி ஸ்டீபன் லாங் கூறியிருப்பதாவது: "போரில் ஏற்பட்ட காயத்தால் அவருக்குப் பார்வை பறிபோயிருக்கும். வெடித்துச் சிதறிய உலோகத்துண்டு ஒன்று அவரது கண்ணைத் தாக்கியிருக்கும். எனவே, இது கண்பார்வை அற்றவராக பிறந்தவரைப்போல் அல்ல. அது சாதாரணமான கண்களும் அல்ல. அவை வெடிகுண்டால் தாக்கப்பட்டவை. அதை என்னால் சாதாரணமாக செய்ய முடியாது. எனவே அதற்காக ஒரு லென்ஸை உருவாக்க வேண்டும். அதை சிறப்பாக உருவாக்கித் தந்தார்கள். ஜாம்பி படங்களில் வருவது போலவே, பேய்ப் படங்களைப்போல வெறும் வெள்ளையாகவோ இந்த லென்ஸுகள் இருக்காது. லென்ஸ்கள் அணிந்திருந்தாலும் அதற்குப் பின் இருக்கும் கண்கள் தெரியும். ஆனால் அவை சரியான வடிவில் இருக்காது. நடிக்கும் போது வெறும் நிழலாக மட்டுமே தெரியும். அதனால் பார்வை குறைவு செய்து கொண்டேன்" என்று கூறியுள்ளார்.

ஸ்டீபன் லாங்குடன் ஜேன் லெவி, டெலான் மின்னட்டே, டேனியர் ஸ்வாட்டோ ஆகியோர் நடித்துள்ளனர். கோஸ்ட் ஹவுஸ் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தை பெடரிக் அஸ்வரேஸ் இயக்கி உள்ளார். இவர் பிரபலமான ஈவில் டெத் படத்தை இயக்கியவர். வருகிற 26ஆம் திகதி அமெரிக்காவில் வெளியாகும் இந்தப் படம் இந்தியாவில் செப்ரெம்பர் 2ஆம் திகதி வெளிவருகிறது. இந்தியாவில் ஆங்கிலத்துடன் இந்தி, தமிழ், தெலுங்கில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளிவருகிறது.



"எந்தப் புக்க எடுத்தாலும் தூக்கம் தூக்கமா வருது கருமம்; இந்தப் பேஸ்புக்க எடுத்தா மட்டும் தூக்கமே வரமாட்டேங்குதே என்னவா இருக்கும்..."



"அடா... களவாணிப் பயலுகளா! ஒரு மரம் கூட இல்லாமல் களவாடிட்டீங்களேடா, என் காட்டை...!"



rajini vijay @rajinivijay

பணம் படைத்தவன் "முயலுக்கு மூன்று கால்கள் மட்டும் தான்" என்று சொன்னாலும் "ஆமாம்" என்று சொல்லும் சமுதாயத்தில் தான் நாம் உள்ளோம்.

"மூன்று நாளா ஒரே பல் வலி; சாப்பிடக் கூடமுடியலை."
"டாக்டரிட்டப் போய்ப் பல்லைப் பிடுங்க வேண்டியது தானே."
"பிடுங்கினால் வலிக்குமே."
"ஊசி போட்டுத்தான் பிடுங்குவாங்க; வலிக்காது."
"ஊசிபோடும்போது வலிக்குமே"
"பல்வலி எண்டு சொல்லாதே... வாய் வலிக்கப் போகுது"





"கடைக்காரரே... இது எங்க அலுவலகக் கடிகாரம். இதை காலையில் அரை மணி நேரம் பிந்தியும் மாலையில் ஒரு மணிநேரம் விரைவாகவும் ஓடுற மாதிரி செட் பண்ணித் தர முடியுமா?"



"பக்ரீரியா வோட படம் வரையச் சொன்னா வெள்ளைப் பேப்பரைக் கட்டி கொடுத்திருக்கியே... ஏன்?" விவரம் புரியாமப் பேசாதீங்க ரீச்சர்; இது கண்ணுக்குத் தெரியாத பக்ரீரியா."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளுந்து லட்டு



**தேவையான பொருள்கள்**

உளுந்து – ஒரு கப்
சீனி – ஒரு கப்
ஏலக்காய்த் தூள் – சிறிது
நெய் – 4 மேசைக்கரண்டி
உலர் திராட்சை – சிறிது
முந்திரி – சிறிது

**செய்முறை**

உளுந்தை வெறும் சட்டியில் சிறு தீயில் லேசாக வறுத்து எடுத்துக் கொள்ளவும்.
சீனியுடன் ஏலக்காய் சேர்த்து பொடி செய்யவும்.
பொடி செய்த சீனி, ஏலக்காயை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொள்ளவும்.
வறுத்து வைத்த உளுந்தை மிக்சியில் நன்றாக அரைக்கவும்
அரைத்த உளுந்தை சர்க்கரை, ஏலக்காய் போட்டுச் சேர்க்கவும்.
ஒரு சட்டியில் நெய் விட்டு திராட்சை, முந்திரியை வறுத்து எடுக்கவும்.
அதனை உளுந்துடன் சேர்க்கவும்.
நெய்யை சூடு செய்து அந்தக் கலவையைக் கொட்டி, அதனுடன் திராட்சையும் சேர்த்து, சிறிது சிறிதாக நெய் சூட்டுடன் உருண்டையாகப் பிடிக்கவும்.
சுவையான, சத்தான உளுந்து லட்டு தயார்.

## நாளை

ஆவணி-14
செவ்வாய்க்கிழமை
-30.08.2016
திதி: திரயோதசி பி.ப.03.19
நட்சத்திரம்: பூசம் மு.ப.11.13
ராகுகாலம்:
03.05-04.35 வரை
சுபநேரம்:
10.35-12.05 வரை





உயர் ரக தரை விரிப்புகள் அறிமுகமாகியுள்ளன. ஒன்றரை இஞ்சிகள் அகலமான கம்பளித் தடிப்பில், தரமான பருத்திப் பட்டில் இவை உருவாகியுள்ளன. இவை 8 ஆயிரம் ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 500 | 700 | 800 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 800 | 700 | – |
| பாரை | 550 | 500 | 400 | 800 | 700 | 600 | 500 |
| சுறா | 500 | 800 | 500 | 800 | 1000 | – | 570 |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 450 | 500 | 450 |
| விளை | 650 | 500 | 300 | 600 | 500 | – | 500 |
| முரல் | 300 | 400 | 300 | 500 | 400 | 450 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 100 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 450 | 400 | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 300 | 200 | 350 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 400 | 200 | 380 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | – |
| ஓட்டி | 300 | 250 | 200 | – | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 400 | 150 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 300 | – | 300 |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 500 | 400 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 400 | 300 | – |

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 60 | 60 | 40 | 30 | 30 | 20 |
| கத்தரி | 50 | 60 | 50 | 60 | 40 | 40 | 90 | 40 |
| கரட் | 100 | 120 | 160 | 120 | 100 | 120 | 110 | 100 |
| மரவள்ளி | 100 | 90 | 100 | 80 | 60–80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 40 | 50 | 70 | 120 | 60–80 | 100 | 100 | 60 |
| பாகல் | 120 | 80 | 100 | 120 | 100 | 120 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | 140 | – | 80 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 80 | 100 | 90 | 90 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 60 | 80 | 80 | 100 | 90 | 60 |
| பூசணி | 60 | 35 | 50 | 50 | 30 | 40 | 70 | 40 |
| தக்காளி | 40 | 60 | 60 | 60 | 40 | 50 | 120 | 40 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 100 | 80 | 60 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 10 | 20–30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 90 | 160 | 120 | 80 | 300 | 200 | 140 |
| புடோல் | 40 | 35 | 40 | 60 | 60 | 40 | 70 | 40 |
| கோவா | 100 | 100 | 120 | 120 | 100 | 120 | 90 | 80 |
| வெண்டி | 40 | 60 | 50 | 60 | 40 | 60 | 70 | 20 |
| போஞ்சி | 120 | 140 | 200 | 180 | 160 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 | 120 | 120 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 30–35 | 30 | 30 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 100–120 |
| தேசிக்காய் | 80 | 200 | 240 | 240 | 200 | 200 | 120 | 150 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 100 | 140 | 150 | 160 | 200 | 200 | 100 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 80 | 80 | 80 | 40 | 80 | 50 |

# உணவை ஆரோக்கியமாக எப்படி சாப்பிடலாம்?

நாம் சாப்பிடும் ஒவ்வொரு உணவும் வயிற்றை நிரப்புவதற்காகவும், சுவைக்காகவும் சாப்பிடப் படுவதில்லை. சத்து, ஆரோக்கியம், உடல் இயக்கம் போன்றவைகளுக்காகவே உணவுகளைச் சாப்பிடுகிறோம்.

நீங்கள் விரும்பும் படியான ஆரோக்கியம் நீங்கள் சாப்பிடும் உணவில் இருக்க வேண்டுமானால், நீங்கள் சமையலுக்காக வாங்கும் பொருள்கள், அதை நறுக்கும் முறை, சமைக்கும் முறை, பரிமாறும் முறை, சாப்பிடும் முறை போன்ற அனைத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

- ஏற்கனவே சாப்பிட்ட உணவு ஜீரணமான பிறகே அடுத்த வேளை உணவை சாப்பிடுங்கள்.
- ஆற, அமர உட்கார்ந்து சாப்பிடுங்கள். மென்று விழுங்குங்கள். 'நொறுங்கத் தின்றால் நூறு வயது.'
- மிக வேகமாகவோ, ரொம்பவும் மெதுவாகவோ சாப்பிடாதீர்கள். சாப்பிடும்போது பேசுவதும் நல்லதில்லை.
- கோபம், மனவருத்தம், தன்னிரக்கம் என உணர்ச்சிக் குவியலாக இருக்கும்போது சாப்பிடாதீர்கள்.
- பசி இல்லாதபோது சாப்பிடாதீர்கள். பசிக்கும் போது சாப்பிடாமல் இருக்காதீர்கள்.
- சாப்பிட்டதும் படுக்காதீர்கள். சாப்பிட்டு ஒரு மணி நேரம் கழித்துத் தூங்குவதுதான் நல்லது.
- எப்போதும் உணவை வீணாக்காதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுனிலீவர் நிறுவனத்தின் செயற்றிட்டம் விஸ்தரிப்பு



நாட்டில் பெருந்தோட்டத் துறையுடனான தனது ஈடுபாடுகளைத் தொடர்ச்சியாக விஸ்தரித்து வருகின்ற யுனிலீவர் சிறிலங்கா நிறுவனம், தம்பேதென்ன எஸ்டேட்டில் அண்மையில் யுனிலீவர் புதிய செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

யுனிலீவர் சிறிலங்கா நிறுவனத்தின் பணிப்பாளர், சபைத் தலைவரான கார்ள் குரூஸ் இதனை ஆரம்பித்து வைத்தார். தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்து முற்றிலுமாக புனரமைப்புச் செய்யப்பட்ட எஸ்டேட்டில் உள்ள நலன்புரி விற்பனை நிலையத்தையும் அவர் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

யுனிலீவர் நிறுவனத்தின் நிலைபேற்றியலுடன் வாழ்க்கையை முன்னெடுக்கும் செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக தேசத்திலுள்ள மக்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு அது உதவி வருகின்றது என்றும், யுனிலீவர் சிறிலங்கா நிறுவனமும், பேராதனை பல் வைத்தியபீடமும் இணைந்து, இந்த எஸ்டேட்டில் பல் சுகாதார மருத்துவ முகாமொன்றை ஏற்பாடு செய்திருந்தன எனவும் கூறப்பட்டது. இதில் 500 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு, பயன் பெற்றுள்ளனர். இந்த மருத்துவ முகாமில் பல் மருத்துவச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தேவையான சிகிச்சைகளும் வழங்கப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டில் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட செயற்றிட்டமானது, நிலைபேற்றியல் கொண்ட வர்த்தகச் சந்தை முறைமையொன்றை உருவாக்கி, எட்டுவதற்குச் சிரமமான கிராமப்புறச் சமூகங்களுக்கு தனது உற்பத்திகள் தொடர்பான விழிப்புணர்வு, அறிவு மற்றும் அவற்றை உள்வாங்கிக் கொள்வதை முன்னெடுக்கும் பெபெக்ட் ஸ்ரோர் செயற்றிட்டத்தின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிராமப் புறங்களிலுள்ள பெருந்தோட்டங்களை இனங்கண்டு, உற்பத்தி தொடர்பான அறிவூட்டல் அமர்வுகள், சமூகங்கள் மத்தியில் ஆரோக்கியம், அழகு மற்றும் சுகாதாரம் தொடர்பானச் செயலமர்வுகள் அடங்கலாக பல்வேறு செயற்றிட்டங்களை நிறுவனம் அறிமுகப்படுத்தி வருகின்றது என்றும் கூறப்பட்டுள்ளது.

சிக்னலுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட பல் சுகாதார சிகிச்சை முகாம்கள் மற்றும் லைவ்போயுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட கைச் சுகாதார விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் அவற்றுள் அடங்கியுள்ளன. (த)

வணிகம்

## 12ஆவது வருடமாக அதிமதிப்பு வாய்ந்த வங்கியாக கொமர்ஷல்

நேர்மைக்கு முதல்தர வங்கியாக தொடர்ந்து 4வது வருடமாகவும் நிதிச் செயற்பாட்டில் முதல் தர வங்கியாக தொடர்ந்து 2 வருடங்களாகவும் கொமர்ஷல் வங்கி தரப்படுத்தப்பட்டுள்ளது.

கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் தொடர்ந்து 12ஆவது வருடமாக இலங்கையின் அதி மதிப்பு வாய்ந்த வங்கி என்றும் தொடர்ந்து 6ஆவது வருடமாக நாட்டின் அதி மதிப்பு வாய்ந்த நிறுவன அமைப்பு என்றும் எல்.எம்.டி சஞ்சிகையின் 2016ஆம் வருட அதிசிறந்த நிறுவனத்துக்கான மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கி நேர்மைக்கு இலங்கையில் முதல் தரம் என்ற நிலைப்பாட்டைத் தொடர்ச்சியாக 4ஆவது வருடமாகத் தக்க வைத்துள்ளது. நிதி செயற்பாட்டுக்கு முதல் தரம் என்று-தொடர்ந்து இரண்டாவது வருடமாக வங்கி தரப்படுத்தப்பட்டுள்ளது. கடைசியாக வெளியிடப்பட்ட தரப்படுத்தலிலும் 10 துறைகளுக்குள் 6 துறைகளில் உள்ள 5 உயர் நிறுவனங்களுக்குள் ஒன்றாக கொமர்ஷல் வங்கி வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கி அதிமதிப்பு வாய்ந்த முதல் 5 நிறுவனங்களுள் ஒன்றாகத் தொடர்ந்து 2016ஆம் ஆண்டிலும் இருந்து வருகிறது.

எல்.எம்.டி. சஞ்சிகை 2005ஆம் ஆண்டில் தரப்படுத்தலை ஆரம்பித்திலிருந்து அதன் வருடாந்தத் தரப்படுத்தலில் கொமர்ஷல் வங்கி அதிமதிப்பு வாய்ந்த வங்கியாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

கொமர்ஷல் வங்கியின் முகாமைப் பணிப்பாளர், பிரதம நிறைவேற்று அதிகாரி ஜெகன் துரைரட்ணம் கருத்துத் தெரிவிக்கையில், நிறுவன ரீதியான இலங்கையின் விவரப்பட்டியலில் அதி உயர்வாகத் தரப்படுத்தப்பட்ட வங்கியாக இருப்பது குறித்து, நாம் பெருமைப்படுவது நியாயமானதே. நேர்மை, நிதிச் செயற்பாடு ஆகியவற்றிலும் நாம் அதிஉயர் ஸ்தானத்தை பிடித்திருப்பது குறித்தும் நாம் மீண்டும் பெருமகிழ்ச்சி அடைகிறோம். தொலைநோக்காற்றல், சுறுசுறுப்பு, தர விழிப்புணர்வு, புதுமை காணல் ஆகியன வங்கி நடவடிக்கையில் குறிப்பாக முக்கியமானவை என்பதால், வங்கி இந்தத் துறைகளில் சிறப்புற்று விளங்குவதாக தரப்படுத்தப்பட்டமை ஒரு விசேட அம்சமாகும்-என்றார். (த)

## யூனியன் வங்கியின் ரஜீவ் டேவிட்டுக்கு சிறந்த சந்தைப்படுத்தல் நிபுணர் விருது

யூனியன் வங்கியின் சந்தைப்படுத்தல் முகாமையாளர், ரஜீவ் டேவிட்டுக்கு ஆண்டின் சிறந்த சந்தைப்படுத்தல் நிபுணர் கௌரவிப்பு வழங்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் அண்மையில் நடைபெற்ற சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக நாமங்கள் தொடர்பான 7ஆவது சி.எம்.ஓ. ஆசியா விருதுகள் வழங்கும் வைபவத்தில் இந்த விருது வழங்கப்பட்டிருந்தது.



இந்த ஆண்டு, இந்த விருதைப் பெற்றுக் கொண்ட ஒரே இலங்கையர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த சந்தைப்படுத்தல் நிபுணர்களும் தத்தமது நாடுகளுக்கான விருதுகளைப் பெற்றிருந்ததன் மூலம் இவருடன் இணைந்துகொண்டனர்.

வர்த்தகநாமம் மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்ததுடன், 12 வருடகால அனுபவத்தைக் கொண்ட நிபுணத்துவம் வாய்ந்த சந்தைப்படுத்தல் வல்லுநராக ரஜீவ் டேவிட் திகழ்கிறார். வேறுதுறைகளில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ள ரஜீவ், 8 வருடகாலம் காப்புறுதித் துறையில் பணியாற்றியுள்ளார். பல புத்தாக்கமான திட்டங்களை வடிவமைத்து, முன்னெடுப்பதில் இவர் முன்னோடியாக திகழ்ந்திருந்தார். (த)

நுட்பம்

## இஸ்ரோவின் மறுபயன்பாட்டு விண்கலம்

இஸ்ரோ விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்ட மறுபயன்பாடு விண்கலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இன்று காலை 6 மணிக்கு விண்ணில் பயணிக்க இருக்கிறது.

இந்திய தொழில்நுட்பத்தால் வடிவமைக்கப்பட்ட அதிநவீன மறுபயன்பாட்டு விண்கலம் அதிகாலை 1.30 மணிக்கு கவுண்டவுன் தொடங்கப்பட்டு இன்று காலை 6 மணிக்கு விண்ணில் ஏவப்படுகிறது.



இஸ்ரோ (இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்) இதுவரை பி.எஸ்.எல்.வி. மற்றும்ஜி.எஸ்.எல்.வி. விண்கலங்களை கொண்டுதான் செயற்கை கோள்களை விண்ணில் செலுத்தி வந்தது.

இதனால் ஒவ்வொரு முறையும் புதிய விண்கலங்களை வடிவமைக்க அதிகமாகச் செலவுகள் ஆயின.

தற்போது செலவுகளைக் குறைப்பதற்காக ரீயூசபிள் லாஞ்ச் வெய்கிள் டெக்னாலஜி டெமான்ஸ்ரேட்டர் (மறு பயன்பாட்டு விண்கலம்) (ஆர்.எல்.வி.டி.டி.) விண்கலத்தை இஸ்ரோ விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர். முழுக்க முழுக்க இந்தியத் தொழில்நுட்பத்தால் ஆன ஸ்க்ராம் ஜெட் இயந்திரத்தைக் கொண்டு இந்த விண்கலம் இயக்கப்படுகிறது.

இதன் முதல் கட்டச் சோதனையாகக் கடந்த மே மாதம் 23ஆம் திகதி ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி மையத்தில் இருந்து இந்த விண்கலம் விண்ணில் ஏவப்பட்டு, சோதனை செய்யப்பட்டது. இந்தச் சோதனை வெற்றி நிலையில் இன்று காலை இரண்டாம் கட்டச் சோதனையாக இந்த மறு பயன்பாட்டு விண்கலம் விண்ணில் ஏவப்படுகிறது.

இது குறித்து விஞ்ஞானிகள் கூறுகையில்; அட்வான்ஸ் டெக்னாலஜி வெய்கிள் (ஏடிவி) மூலம் இந்த விண்கலத்தை விண்ணில் செலுத்த உள்ளோம். கடந்த முறை சோதனை முழு வெற்றி அடைந்துள்ளது.

இருந்தபோதிலும், விண்கலம் பூமிக்குத் திரும்பும்போது வெப்பத்தை தணிப்பது குறித்து தீவிரமாக ஆய்வுசெய்து வருகிறோம். வரும் 2030ஆம் ஆண்டு முதல் இந்த விண்கலம் முழுமையாக பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் எனத் தெரிவித்துள்ளனர். (த)

## வட்ஸ் அப்பின் புதிய முயற்சி பயனர்களுக்கு ஆபத்தா?

இணைய இணைப்பின் ஊடாக நண்பர்களுடன் பேசி மகிழ்வது மட்டுமின்றி, அனைத்து வகையான கோப்புக்களையும் பகிர்ந்து கொள்ளும்வசதியை தரக்கூடிய அப்பிளிக்கேஷனாக வட்ஸ் அப் காணப்படுகின்றது.

இந்த அப்பிளிக்கேஷனை இரண்டு வருடங்களுக்கு முன்னர் பேஸ்புக் நிறுவனம் சுமார் 19 பில்லியன் டொலர்கள் செலுத்திக் கொள்வனவு செய்திருந்தது. இதன் பின்னர் அசுர வளர்ச்சி கண்ட வட்ஸ் அப் ஆனது, பல மில்லியன்கணக்கான பயனர்களை தற்போது கொண்டுள்ளது. இதேவேளை-வட்ஸ் அப்பில் பகிரப்படும் தரவுகள், தகவல்கள் தொடர்பில் பல நம்பிக்கையின்மைகள் அண்மைக் காலங்களில் வெளிவந்தவண்ணம் இருந்தன.

இப்படியான ஒரு தருணத்தில் மற்றுமொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதாவது வட்ஸ் அப்பில் தரப்பட்டுள்ள பயனர் தகவல்கள் அனைத்தும் இனி முகநூல் தளத்துடன் நேரடியாகப் பகிரப்படவுள்ளது.

முகநூல் ஆனது தனது விளம்பர சேவையை விரிவுபடுத்தும் முகமாக தொலைபேசி இலக்கங்கள் உட்பட சில தகவல்களை இவ்வாறு வட்ஸ் அப்பிலிருந்து பெற்றுக்கொள்ளவுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னாட்டு...

வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் வழங்கிய செவ்வி வருமாறு:

***கே.*** *இலங்கை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நீங்கள் குழுவை நியமித்ததாகவும், ஏனைய நாடுகள் விடயத்தில் அவ்வாறு செயற்படவில்லை என்ற கருத்து இலங்கையில் காணப்படுகின்றது. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சிறிய நாடுகள், பெரிய நாடுகள் என்று ஐ.நா. பாகுபாட்டைக் கொண்டுள்ளதா ?*

**ப.** இலங்கை பொறுப்புக் கூற வேண்டும் என்ற ஐ.நா.வின் கோரிக்கைகள் தனித்துவமானவையல்ல. பன்னாட்டுக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும் என்பது ஐக்கிய நாடுகளின் முக்கியமான நிகழ்ச்சி நிரல். பன்னாட்டு மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான சட்ட மீறல்கள் இடம்பெற்ற பிராந்தியங்கள் மற்றும் நாடுகளில் நாங்கள் இந்த வேண்டுகோளை விடுப் போம். 2009ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையின் அடிப்படையிலேயே நான் இலங்கைக்கான எனது நிபுணர்கள் குழுவை நியமித்தேன்.

***கே.*** *இலங்கைப் படையினருக்கு எதிரான போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைகளில் பன்னாட்டு நீதிபதிகள் இடம்பெற மாட்டார்கள் என்று ஜனாதிபதி சிறிசேன தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றார். இது உங்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதா?*

**ப.** இலங்கை தற்போது நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறையை உருவாக்குவது குறித்த முக்கிய விவாதத்தில் ஈடுபட்டுள்ளது. இதன் முடிவுகள் எவ்வாறிருக்கும் என்பது குறித்து மதிப்பீடுகளை முன்வைக்க நான் விரும்பவில்லை.

பாதிக்கப்பட்டவர்களும், பாதிக்கப்பட்ட சமூகங்களும் தங்களுக்கு நீதியைப் பெற்றுத் தரக் கூடிய நம்பகத்தன்மைமிக்க நடைமுறைப் பன்னாட்டுப் பங்களிப்புடன் மாத்திரமே சாத்தியமாகும் என்று நம்புகின்றனர். பொறுப்புக்கூறும் செயற்பாடுகளில் காணப்படும் தாமதங்களும், இலங்கையின் நீதித்துறை மற்றும் சட்ட நடைமுறை அமைப்புகளின் சுதந்திரம் குறித்த கரிசனைகளும் இதற்குக் காரணம். இதன் காரணமாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையும், இலங்கை தொடர்பான தீர்மானமும் பன்னாட்டுப் பங்களிப்பை வலியுறுத்தியிருந்தன.

இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானம் குறித்து அர்ப்பணிப்புடன் செயற்படும். அதனை நடைமுறைப்படுத்தும் என்று எதிர்பார்க்கின்றேன். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் பரந்துபட்ட தன்மையை கருத்திற் கொள்வது அவசியம். பன்னாட்டுப் பங்களிப்புக் குறித்த விவாதம் முக்கிய விடயங்களிலிருந்து கவனத்தைத் திசை திருப்பாது எனக் கருதுகின்றேன்.

**கே.** *இலங்கையில் நீங்கள் காணும் குறைபாடுகள் என்ன ?*

2009ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவடைந்துள்ள போதிலும், இலங்கை இன்னமும் கடந்த காலங்களுக்குத் தீர்வைக் காணவில்லை. பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் தங்கள் உறவுகள் குறித்து நிச்சயமற்ற நிலையில் உள்ளன. அவர்கள் உண்மையை ஆதரவை - நீதியைத் தேடுகின்றனர். இது தவிர, பாதிக்கப்பட்ட பலர் உள்ளனர். பலவந்தமாக படையணிகளில் சேர்க்கப்பட்டவர்கள், பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டவர்கள், மோதலில் ஈடுபட அனுப்பப்பட்டு நிரந்த காயங்களுடன் அங்கவீனர்களாகத் திரும்பியவர்கள் என்று பலர் உள்ளனர்.

கடந்த கால மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகத்தன்மைமிக்க, பக்கச் சார்பற்ற விசாரணைகளை முன்னெடுப்பது, உண்மையைக் கண்டுபிடித்து குற்றவாளிகளைப் பொறுப்பாளிகளாக்குவது இலங்கை சமூகத்துக்கும் நாட்டின் எதிர்காலத்துக்கும் மிகவும் முக்கியமானது என்றார். (வ-5)

## வலி.வடக்கில்...

927.7 ஏக்கர் நிலப்பகுதியில் 725.29 ஏக்கர் விடுவிக்கப்படவுள்ளது. 202 ஏக்கர் உடனடியாக விடுவிக்கப்பட முடியாது எனத் தெரிவித்த இராணுவத்தினர், அங்கு படைமுகாம்கள் அமைக்கப்பட் டுள்ளதாகக் குறிப்பிட்டனர்.

இந்தக் கலந்துரையாடலுக்கு நூற்றுக் கணக்கான காணி உரிமையாளர்கள் சென்றனர். எனினும் விடுவிக்கப்படவுள்ள காணிகளை அடையாளம் காண்பதற்காகக் காணி உரிமையாளர்களில் முப்பது பேரை மாத்திரமே இராணுவத்தினர் அழைத்துச் சென்றனர். ஏனையவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர். காங்கேசன்துறை மேற்கு, காங்கேசன்துறை தெற்கு, காங்கேசன்துறை மத்தி, தையிட்டிவடக்கு, பளை வீமன்காமம்வடக்கு, தையிட்டி கிழக்கு ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளே விடுவிக்கப் படவுள்ளன. (வ-ரி7)

## கொழும்புக்கு...

கடற்படை மாலுமிகள் தரையில் விடுமுறையைக் கழிக்கவுள்ளதாகவும் அமெரிக்கத் தூதரக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோ - பசுபிக் பிரதேசத்தில் மீட்பு மற்றும் உதவிப் பணிகளை மேற்கொள்வதற்கும், அமெரிக்கப் படைகளுக்கு உதவவும், நீர்மூழ்கி விநியோக, உதவிக் கப்பலான யு.எஸ்.எஸ். பிராங்க் கேபிள், குவாம் தீவில் நிலை கொண்டிருக்கிறது.

இந்தக் கப்பலில் 500 மாலுமிகள் வரை பணியாற்றுகின்றனர்.

இந்த ஆண்டில், இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் மூன்றாவது அமெரிக்கப் போர்க்கப்பல் இதுவாகும். இந்த ஆண்டு ஆரம்பத்தில் யு.எஸ்.எஸ். புளூ ரிட்ஜ், யு.எஸ்.எஸ். நியூ ஓர்லியன் ஆகிய அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கான பயணங்களை மேற்கொண்டிருந்தன. (வ-5)

## மரண அறிவித்தல்

### செபஸ்ரியன் யேசுதாசன்(குணம்)

பிறப்பு 21 . 01 . 1946



இறப்பு 26 . 08 . 2016

மவுண்கார்மேல் வீதியைப் பிறப்பிடமாகவும் பழைய பூங்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியன் யேசுதாசன்(குணம்) 26.08.2016 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியன் - செல்லமாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும் அன்னமேரி அக்னஸின்(பவா) அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக (31.08.2016) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத் திலிருந்து புனித பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74/2, பழையபூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.


தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி
மற்றும் குடும்பத்தினர்.

(J 4155)
(14.17.18)

077 468 5431

# மரண அறிவித்தல்

## மரிய அருளானந்தம் மரிய யேசுதாசன் (சிறி)



சாவகச்சேரி, கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் இத்தாலி நாபோலியை வதிவிடமாகவும் கொண்ட மரிய அருளானந்தம் மரிய யேசுதாசன் (சிறி) 25.08.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரிய அருளானந்தம் மற்றும் மரியறோஸ் தம்பதியரின் அன்பு மகனும் கணேசன் - காலஞ்சென்ற அனிற்றா கிறிஸ்ரின் தம்பதியரின் அன்பு மருமகனும், ரசியாவின் (இத்தாலி) அன்புக் கணவரும், சுயந்தனின் பாசமிகு தந்தையும், மரிய பேணாட் (J.P.), மரியதாஸ் (கனடா), காலஞ்சென்ற மரிய அல்போன்ஸ் மற்றும் மரிய அருள்தாஸ் (கனடா), மரிய ஞானசீலன் (சுவிஸ்), மரிய அன்ரனி, மரிய பொன்கலன் (பிரான்ஸ்), மரிய நவசீலன் (இத்தாலி), மரிய அல்வீனா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அகுஸ்தீன் மற்றும் மொனிக்கம்மா தம்பதியரின் அன்புப் பெறாமகனும், காலஞ்சென்ற சிங்கராசா மற்றும் பிரான்சிஸ்கா, தேவசகாயம்பிள்ளை (முன்னாள் தவிசாளர் - சாவகச்சேரி நகராட்சி மன்றம்), செபமாலையம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், மரிய திரேசா,ஜேன்மரியா (கனடா), மேரி கிலமென்ட் (கனடா), சியாமளா (சுவிஸ்), மேரி புளோரிடா ஜெயசுதா ஜோன் ஸ்ரெலா (இத்தாலி), அன்ரனி பொபிசாண்டஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஞானேஸ்வரி சந்திரராசா (பிரான்ஸ்), தேவபரன் தேவபாலன் (பிரான்ஸ்), தேவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு உடன்பிறவாச் சகோதரரும், ஜெகநாத் (லண்டன்),மரிய ஜெயந்தினி (லண்டன்), மரிய ஜெயவதனி, மரிய ஜெயரமணி (லண்டன்), மரிய ஜெகதீபன் (சுவிஸ்), மரிய ஜெகரூபன், மரிய ஜெயரூபிணி, மரிய ஜெனிற்றா, மரிய அன்ரனீற்றா மரிஜூட் நிக்ஸன், மரிய யஸ்ரினா ஜெனிபர் (கனடா), ஜோநாத் (கனடா), மீர்த்தி (கனடா), அல்போன்ஸ் (சுவிஸ்), யூலியா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், பரீத்தி (இத்தாலி), செறின் (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், மரிய செடோன், மரிய செறோனி ஆகியோரின் அன்பு மாமனும், பிரஷாந்தன் (இத்தாலி), சஞ்சீவ், றெஜீனா, விதுஜேனா, லக்ஷாந்தினி, திலக்ஷா, மரிய றாபேல் (பிரான்ஸ்), மரிய கதறின், மரிய அருள்ராணி, மரிய ஜெறோம், மரிய நியூட்டன் (லண்டன்), மரிய பெனடிற்றா (லண்டன்), மரிய நிரோஜன், மரிய கொறற்றி (சுவிஸ்), மரிய அன்ரனி (இத்தாலி), மரிய நாயகி (சுவிஸ்), மரிய அஞ்சலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி இரங்கல் திருப்பலி இன்று (29.08.2016) திங்கட்கிழமை மு.ப.10.00 மணியளவில் இத்தாலி நாபோலி **Chesa Di Samtamartha Via San Sebastiano** தேவாலயத்தில் நடைபெற்று தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இன்று (29.08.2016) மாலை 5.00 மணிக்கு சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

| | | | |
|---|---|---|---|
| சீலன் (இத்தாலி | - 0039 3293 447848) | பேணாட் | - 077 487 7368 |
| தாஸ் (கனடா | - 0014 1671 06196) | அன்ரனி (விஜி) | - 077 070 0359 |
| ரவி (கனடா | - 0014 1674 06196) | அல்வீனா | - 077 614 1281 |
| சீலன் (குட்டி - சுவிஸ் | - 0041 7927 62722) | பொன்கலன் (பிரான்ஸ்) | - 0033 6438 60583 |
| வணி (இத்தாலி | - 0039 3510 196828) | | |

(சி.25077) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நள்ளிரவில் 5 வீடுகளில் கொள்ளை

கொழும்பு, ஓக. 29
நள்ளிரவில் ஐந்து வீடுகள் உடைக்கப்பட்டு களவாடப்பட்ட சம்பவம் ஹட்டன்-அக்கரப்பத்தனைப் பகுதியில் இடம் பெற்றது.

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லோவர் கிரன்லி தோட்டத்திலேயே நேற்று நள்ளிரவு இவ்வாறு வீடுகள் உடைக்கப்பட்டு பணமும், பெறுமதியான பொருள்களும் களவாடப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு திருமண வீடுகளும், ஒரு பூப்புனித நீராட்டு விழா நடைபெற்ற வீடு மற்றும் அருகிலிருந்த இரண்டு வீடுகளும் உடைக்கப்பட்டே களவாடப்பட்டன.

திருடர்கள், கத்தி, குடை மற்றும் பாதணிகளை அவ்விடத்திலேயே விட்டுச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-5)


## மரண அறிவித்தல்கள்

### விசாகரத்தினஐயர் நாகேந்திரன்ஐயர்



செல்வச்சந்நிதி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், மொன்றியல் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட விசாகரத்தினஐயர் நாகேந்திரன் ஐயர் கடந்த (26.08.2016) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விசாகரத்தினஐயர் (பிரதமபூசகர் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்) - நேசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற இராஜேந்திரம் (Headmaster) - ஞானாம்பாள் தம்பதியரின் மருமகனும் ஜெயதேவியின் அன்புக்கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2016) திங்கட்கிழமை மொன்றியலில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
வி. தெய்வேந்திரஐயர்
(செல்வசந்நிதி தொண்டமானாறு)
021 321 2914, 077 3526917

### திருமதி பத்மாசனி சுந்தரலிங்கம்



கரவெட்டி கிழக்கு, வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாசனி சுந்தரலிங்கம் (28.08.2016) இறைபதம் அடைந்தார்.

அன்னார் சுந்தரலிங்கம் (இளைப்பாறிய உதவி பிரதேச முகாமையாளர் - மக்கள் வங்கி) அவர்களின் அன்பு மனைவியும், மனோகரி (ஆசிரியை -நெல்லியடி மத்திய மகா வித்தி யாலயம்), சுரேந்திரன் (லண்டன்), திவாகரன் (லண்டன்), நளினி(லண்டன்)ஆகியோரின் பாசமிகு தாயாரும், விக்னேஸ்வரன் (ஆசிரியர்-ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாலயம்), லாவன்யா (லண்டன்), ஜெயானி (லண்டன்), வாதவூரன் (லண்டன்), ஆகியோரின் மாமியாரும், நந்திதா, ஐதுசன், ஹம்சினி, அக்ஷரா, சேயோன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரவெட்டி கிழக்கு,
வீரபத்திரர் கோயிலடி.

தகவல்
குடும்பத்தினர்.

### வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை

பிறப்பு
31 . 07 . 1935



இறப்பு
28 . 08 . 2016

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும், மணற்பிட்டி தங்கோடையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை நேற்று (28.08.2016) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மாவதியின் அன்புக்கணவரும் கணேசலிங்கம், புஸ்பராணி, தவராணி ஆகியோரின் அன்புத்தந்தையும் சியாமளா (மலர்), மகாதேவன், தேவராஜன் ஆகியோரின் பாசமிகு மாமனும் சுஜீவன், அபிநாஸ், ஆதவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2016) திங்கட்கிழமை மு.ப.9 மணியளவில் அவரின் செம்பாட்டு இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
077 6021047

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெயகாமசுந்தரி விமலகாந்தன் (சுந்தரி)



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயகாமசுந்தரி ( சுந்தரி) விமலநாதன் கடந்த (27.08.2016) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான செல்லத்துரை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற விமலகாந்தனின் அன்பு மனைவியும் கீத்தா, ரமேஸ், சர்மினி, கல்யாணி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான செல்வராஜா, செல்வநாயகம் ஆகியோரின் அன்பு சகோதரியும் நந்தகுமார், ரவிக்குமார், பானுரேகன், சிவாஜினி ஆகியோரின் அன்புமாமியும் சர்வநாதன், தர்மலிங்கம், நடராஜா, லகுலேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் நிதர்சன், ஜோதிகா, சஜிதன், அஜிதன், கபிலாஸ் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2016) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு.

தகவல் :
குடும்பத்தினர்

### திருமதி பத்மாவதி வேதநாயகம்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், வசாவிளான் மற்றும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்போது விதானையார் லேன், கோப்பாய் தெற்கு கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி வேதநாயகம் நேற்று (28.08.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா-முத்தம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான இறப்பியேற்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற வேதநாயகத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்ற ஜோண்சன் (முன்னாள் ஆசிரியர் யா/மகாஜன கல்லூரி) மற்றும் விநோதினி, வதனி (லண்டன்), றொபின் சன் (லண்டன்), வில்சன் (லண்டன்), ஜெசி, ஜெனிதா (இந்தியா) ஆகியோரின் அன்புத்தாயும் ஸ்ரீறதி (ஆசிரியை யா/மல்லாகம் ம.வி), கௌதமன் (வட்டக்கச்சி), ஸ்ரீதேவர் (லண்டன்), றதி (லண்டன்), சுதர்சினி (ஆசிரியை யா/வேலணை செட்டிபுலம் அ.த.க.), அமரசிங்கம் (இந்தியா) ஆகியோரின் மாமியும் கனகாம்பிகை (திருகோணமலை), மகேந்திரன், மலர் (வட்டக்கச்சி), குலேந்திரன், சுந்தரலிங்கம், புவனேஸ்வரி, பர்வதம், வசந்தி, வித்துவான் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இம்மானுவேல், சிங்கராஜா மற்றும் செல்வநாயகம், துரைசிங்கம் காலஞ்சென்றவர்களான புஸ்பராணி (யோகு), ஜெயசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் சஞ்சுதா, சப்தனா காலஞ்சென்ற சஜினிக்கா மற்றும் லிவிசா, றக்சனா, லக்சியா, ஜெனோசன், யதுசன், கஜினிக்கா, கீர்த்தனா, கெல்சி, றொசிகாந், ரிசிக்காந், கௌசிகாந், ரிஷபவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி இன்று (29.08.2016) திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு திருநெல்வேலி தூய சவேரியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விதானையார் லேன்,
[illegible],
[illegible]
கோப்பாய்.

தகவல் :
வேதநாயகம் றொபின்சன்
([illegible])
[illegible] குடும்பத்தினர்
077 711 0295, 077 514 6508

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை பற்குணம்

(முன்னாள் உப தபாலதிபர், இலிகிதர் ஸ்ரீறங்கன் என்ரபிறைஸ் - யாழ்ப்பாணம்)



மாப்பாணவூரி - காரைநகரை பிறப்பிடமாகவும், மண்டைதீவை வசிப்பிடமாகவும் இல.29/01 கடையிற்சுவாமி வீதி நீராவியடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை பற்குணம் நேற்று (28.08.2016) ஞாயிற்றுக் கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு புத்திரனும் காலஞ்சென்றவர்களான நவரத்தினராசா (முன்னாள் விதானையார் மண்டைதீவு) தில்லைநாயகி தம்பதியரின் பாசமிகு மருமகனும் மங்களராணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற செல்வநாயகம் (சட்டத்தரணி) மற்றும் திருமதி பூபாலதுரை, சரோஜினிதேவி காலஞ்சென்ற செல்லையா மற்றும் திருமதி கந்தசாமி மகாலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திருமதி தெய்வேந்திரா துரைச்சாமி சிதம்பரராணி காலஞ்சென்ற ஏகாம்பரம் மதுரைராணி மற்றும் திருமதி இராமச்சந்திரன் ஸ்ரீரங்கராணி (ஓய்வு நிலை உதவிகல்விப்பணிப்பாளர் அழகியல்), நவ.பாலகோபால் (ஓய்வு நிலை பிரதம முகாமைத்துவ உதவியாளர்), நவ. ஜெயகோபால், நவ. இராசகோபால் காலஞ்சென்ற செல்வி ந.முத்துராணி(ரமணி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்ற சதீஸ்குமார் (தாதிய உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை) மற்றும் சைலஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்), செல்வகுமார் (முகாமையாளர் இலங்கை வங்கி காரைநகர், கிளை), ரேனுஜா (வீதி அபிவிருத்தி திணைக்களம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் எந்திரி சி. விகிர்தன் (பொறியியலாளர் கல்வி அமைச்சு) இன் பாசமிகு மாமனும் அங்குயன் சதுஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2016) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிய ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 29/01 கடையிற்சுவாமி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
021 221 7688

### விஜயகுமாரி வீரசிங்கம்



42, மானிப்பாய் வீதியைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி விஜயகுமாரி வீரசிங்கம் (26.08.2016) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் சொர்ணாம்பிகை தம்பதியரின் அன்பு மகளுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.08.2016) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போர்க்குற்றம்...

வேற்றியது. அதேபோன்று தேசிய நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தையும் நாட்டுக்குள் நிறுவியுள்ளது.

ஐ.நா.வினதும், பன்னாட்டு சமூகத்தினதும் தேவைகளை அரசு நிறைவேற்றியமைக்காக, அரசுக்கு பாராட்டுத் தெரிவிப்பதற்காகவே ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கைக்குப் பயணம் செய்கின்றார்.

அதேபோன்று உண்மையைக் கண்டறியும் குழுவை அமைப்பது மற்றும் போர்க் குற்றச்சாட்டு நீதிமன்றம் அமைப்பது தொடர்பான சட்ட வரைவுகளை இந்த வருட இறுதிக்குள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதாக அரசு உறுதியளித்துள்ளது.

இதனைத் துரிதப்படுத்தி அந்தச் சட்டவரைவுகளை நிறைவேற்றுவதற்கு அழுத்தம் கொடுக்கவும், அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேவையான விடுதலைப் புலி உறுப்பினர் களை விடுதலை செய்வதற்கான அழுத்தங்களை பிரயோகிக்கவுமே பான் கீ மூன் இலங்கை வருகிறார் - என்றார். (வ-5)

### யாழ்...

லாளர் இ.இரவீந்திரன்.

பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக் கிழமை தொடக்கம் வழமைபோல் இயங்குவதுடன் விடுமுறை வழங் கப்பட்ட தினத்துக்காகப் பதில் பாடசாலை செயற்பாடு எதிர்வரும் 3ஆம் திகதி சனிக் கிழமை நடைபெறும் என்று அவர் தெரிவித்தார். (வ-4,ரி)

### மீண்டும்...

இதனால் தனியார் காணியின் ஊடாகவே இந்து மயானத்துக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நேற்றைய தினமும், விபத்தில் சாவடைந்த இளைஞர் ஒருவரின் உடலைத் தகனம் செய்ய எடுத்துச் சென்றபோது கடற்படையினர் மாற்றுப் பாதையினூடாகச் செல்லப் பணித்தனர். "இந்த விடயம் எனது கவனத்துக்கு இது வரையில் கொண்டு வரப்படவில்லை. கடற்படையினருடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படும்" என்று யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.(வ-5-10)

### காணி...


குடும்பங்கள் வரையிலேயே தமது காணிகள் இதில் விடுவிக்கப்படவுள்ளதாகப் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

காணிகள் விடுவிக்கப்படவுள்ளதாகப் பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கு சில தினங்களுக்குள் கடிதம் வழங்கி வைக்கப்படவுள்ளது.உங்களது காணி விரைவில் விடுவிக்கப்படும். வீடு வழங்கப்படும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

தேவை
மானிப்பாய் வீதி ஆறுகால் மடத்தில் இயங்கிவரும் மருத்துவ நிலையத்துக்கு பெண் உதவியாளர் தேவை.
0776625036-2 மணிக்கு பின்னர் தொடர்பு கொள்ளவும்.

காணிவிற்பனைக்கு
திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் சம்பத் வங்கிச் சூழலில் பிரதான வீதியிலிருந்து இரண்டாவது காணி 3 பரப்பு விற்பனைக்கு.
0777037058

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் லிகிதராக கடமையாற்றும்

**செல்லத்துரை பற்குணம்**

அவர்கள் நேற்று (28/8/2016) மரணம் அடைந்த செய்தி கேட்டு துயரடைந்ததோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

370,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ றங்கன் என்ரப்பிறைஸ்
உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
29 . 11 . 1946

மறைவு
17 . 07 . 2016

அமரர் **கதிர்காமராசா பராசக்தி (பேபி)**

கடந்த 17.07.2016 இல் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அவர்களின் மரணச்செய்தி கேட்டு நேரிலும்,தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளை தெரிவிப்பதோடு நாளை (30.08.2016) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.


குறிப்பு :- இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

முத்தட்டுமட லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**கதிரித்தம்பி சின்னக்குட்டி** (அண்ணையர்)



தோற்றம்
1936 . 01 . 21

மறைவு
2016 . 08 . 28

கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி சின்னக்குட்டி நேற்று (28.08.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக்கணவரும் சண்முகநாதன் (கச்சாய் அண்ணை-மட்டுவில்) காலஞ்சென்ற பத்மநாதன் (ஜேர்மனி) தர்மலிங்கம் பத்மாவதி (சாவகச்சேரி) பரமநாதன் (அப்புக்கண்டு - சுவிஸ்) அகிலன் கமலாதேவி (ஜேர்மனி) கமலநாதன் (தயா - லண்டன்) கைலைநாதன் (செல்வா - லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் மீனாட்சி, கலைமதி, தர்மலிங்கம், யாமினி, அகிலன் , பிரியா ஆகியோரின் அன்புமாமனும் தயாபரன் (பிரான்ஸ்), தயாகரன், பவித்ரா, பிரசாத் (ஜேர்மனி,) பாலேஸ்வரன் (லண்டன்), சிறீகலா (லண்டன்), சர்மிலா (பிரான்ஸ்), தர்சினி, ஜனனிதா, ஜனுசா, பிருந்தா (சுவிஸ்), அபிசாந், அபிராம், அபிநயன், அபிநாஷ் (ஜேர்மனி), கிஷானா, நிரூஷன், றொபிகா, சப்ரீனா, கெவின் (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேரனும் அக்சிகா (லண்டன்), ஆர்ரவி (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2016) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கச்சாய் தெற்கு எறியால்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.
077 844 8172 (சண்முகநாதன்)
077 668 5069 (பத்மாவதி)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

திருமதி **சின்னம்மா சின்னத்தம்பி**



புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா சின்னத்தம்பி கடந்த (27.08.2016) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சின்னாச்சி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான நாகையா - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னு, கந்தையா, பர்வதம், ஆறுமுகம், கண்ணம்மா, தம்பிப்பிள்ளை மற்றும் செல்லம்மா, தையல்முத்து (சின்னத்தங்கச்சி), பிள்ளையம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் கணேசலிங்கம் (ஆஸ்திரேலியா) அவர்களின் பாசமிகு தாயாரும் இரஞ்சிதநாயகியின் அன்புமாமியும் அருணன், அர்ஜீன், கௌதமன், அபிநயா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2016) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
கணேசலிங்கம் (ஆஸ்திரேலியா),
பிரபாகரன் (மருமகன் - பிரபா பாமசி
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)
077 8445 649

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வீரர்கள் மீதான தாக்குதல் நடத்தியோர் நேற்று சுட்டுக் கொலை

பாகிஸ்தானின் லாகூர் நகரில் வைத்து கடந்த 2009ஆம் ஆண்டு, இலங்கை அணியின் மீது தாக்குதல் நடத்திய ஆயுததாரிகள் நால்வர், பாகிஸ்தான் பொலிஸாரால் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டனர்.
பாகிஸ்தானுக்கு எதிரான சுற்றுப் பயணத்தில் இலங்கை வீரர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே குறித்த ஆயுததாரிகள் இலங்கை வீரர்கள் சென்ற பஸ் மீது தாக்குதல் நடத்தினர். இதனால் இன்றுவரை அந்த நாட்டில் பன்னாட்டுத் தொடர்கள் நடைபெறுவதில் சிக்கல்கள் உள்ளன. இந்த நிலையில் பஞ்சாப்மாநிலத்தின் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு எதிராகக்குறித்த நான்கு ஆயுததாரிகளும் நேற்று துப்பாகிச் சூடு நடத்தியதாகவும், இந்தத் தாக்குதலை முறியடித்து மேற்கொள்ளப்பட்ட பதில் தாக்குதலிலேயே அவர்கள் நால்வரும் சாவடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து மேற் கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில் அவர்கள் நால்வரும் இலங்கை அணியின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுடன் நேரடித் தொடர்புடையவர்கள் என்பது தெரியவந்தது. (ம)

## கடற்கரை கரப்பந்தாட்டம் வவுனியாவிடம் கிண்ணம்



யாழ்ப்பாணம், ஓக. 29
மாகாணமட்ட கடற்கரைக் கரப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.கம்சா, எச்.ஜென்சி இணை கிண்ணத்தைத் தனதாக்கியது.
வல்வெட்டித்துறை உதயசூரியன் வி.கழக மைதானத்தில் நேற்று இந்த இறுதியாட்டம் நடைபெற்றது.
இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்ட இணையை எதிர்த்து எம்.மதுசா, வி.வேணுப்பிரியா ஆகியோரைக் கொண்ட யாழ். மாவட்ட இணை மோதியது.
முதல் செற்றை 21:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய வவுனியா மாவட்ட அணி, இரண்டாவது செற்றிலும் ஆதிக்கம் செலுத்தி அந்த செற்றையும் 23:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-422)

## கடற்கரை கரப்பந்தாட்டத்தில் சம்பியனானது கிளிநொச்சி



யாழ்ப்பாணம், ஓக. 29
மாகாணமட்ட கடற்கரைக் கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் என்.நிசாந்தன், ஜெ.மோகனரூபன் ஆகியோரைக் கொண்ட கிளிநொச்சி மாவட்ட அணி சம்பியனானது.
இறுதியாட்டம் வல்வெட்டித்தறை உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட இணையை எதிர்த்து ப.நிதர்சன், ச.ஜெனகன் ஆகியோரைக் கொண்ட யாழ். மாவட்ட இணை களமிறங்கியது.
மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 21:18, 21:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கிளிநொச்சி மாவட்ட இணை 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-422)



## செல்ராவை வென்றது ரியல் மட்ரிட் ரொனால்டோ இல்லாத நிலையிலும்

லா லிகா தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் செல்ராவை வீழ்த்தித் தொடரை வெற்றியுடன் ஆரம்பித்தது ரியல் மட்ரிட்.
நடப்பு வருட பருவகால லா லிகா தொடரில் ரியல் மட்ரிட் அணி எதிர்கொண்ட முதல் ஆட்டமாக இந்த ஆட்டம் அமைந்தது. செல்ரா டி விகோ அணி ரியல் மட்ரிட் அணிக்கு நிகரான பலம் கொண்டதாகக் கருதப்படுவதில்லை. எனவே அந்த அணியின் நட்சத்திர வீரர்களான ரொனால்டோ, ரமோஸ் இருவருக்கும் ஓய்வு வழங்கப்பட்டிருந்தது. முதல் பாதியில் இரு அணிகளாலும் கோலெதுவும் பதிவுசெய்ய இயலவில்லை. இரண்டாம் பாதியின் 60 ஆவது நிமிடத்தில் அல்வரோ மோர்ட்ரா ரியல் மட்ரிட்டின் முதற் கோலைப் பதிவு செய்தார்.
அடுத்த ஏழு நிமிடங்களில் ஒரில்லானாவின் உதவியுடன் பதிலடி கொடுத்தது செல்ரா டி விகோ. நிலமை 1:1. ஆட்டத்தின் 81 ஆவது நிமிடத்தில் ரொனி குரூஸ் மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். (ம)


## பிராவோ 50

பன்னாட்டு ரி-20 ஆட்டங்களில் 50 இலக்குகளை வீழ்த்தியுள்ளார் மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரரான பிராவோ.
இந்தியாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ரி-20 ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் பிராவோ 49 இலக்குகளை வீழ்த்தியிருந்தார். இதனால் அந்த ஆட்டத்தில் அவர் 50 இலக்குகளை எட்டுவதற்கான வாய்ப்பு அதிகம் என்று எதிர்பார்க்கப்பட்டது. கோக்லியை ஆட்டமிழக்கச் செய்த அவர் தனது 50 ஆவது இலக்கை எட்டினார். ஆட்டத்தின் இறுதிப்பந்தில் டோனியை வீழ்த்தி தீவுகள் வெற்றி பெறவும் பிரதான காரணமாக இருந்தார். (ம)




## போல்ட்டின் பெருந்தன்மை

ரியோ ஒலிம்பிக் தொடரில் தனக்குக் கிடைத்த பரிசுத் தொகை அனைத்தையும் தான் படித்த பாடசாலை, பயிற்சி பெற்ற அக்கடமி, ஜமைக்க விளையாட்டுத்துறை ஆகியவற்றுக்கு அன்பளிப்புச் செய்துள்ளார் போல்ட்.
ரியோ ஒலிம்பிக் தொடரில், கிடைத்த பரிசுப் பொருள்கள் விளம்பர நிறுவனங்களுடனான ஒப்பந்தங்கள் என ஒட்டுமொத்தமாக 100 கோடிகளைச் சம்பாதித்திருந்தார் போல்ட். இந்தத் தொகைகளை அவர் தான் படித்த பாடசாலை, பயிற்சி பெற்ற அக்கடமி, ஜமைக்க விளையாட்டுத்துறை என்பவற்றுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.
ஜமைக்கா அரசு, பொருளாதாரப் பிரச்சினை காரணமாக விளையாட்டுத்துறைக்குப் போதிய நிதி ஒதுக்காத நிலையில் போல்ட்டின் உதவி பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாகக் கருதப்படுகிறது. (ம)






## சிந்துவின் பயிற்சியாளருக்கும் வழங்கப்பட்டது பி.எம்.டபிள்யு.

சிந்துவின் வெற்றிக்குப் பிரதான காரணமாக இருந்த அவரது பயிற்சியாளர் கோபி சந்துக்கும் பி.எம்.டபிள்யூ. வகைக் காரைப் பரிசாக வழங்கியது ஹைதராபாத் பூப்பந்தாட்ட சம்மேளனம்.
ரியோ ஒலிம்பிக் தொடரில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனை சிந்துவுக்கு பி.எம்.டபிள்யு. வகை சொகுசுக் காரைப் பரிசாக அறிவித்திருந்தது ஹைதராபாத் பூப்பந்தாட்ட சம்மேளனம். தற்போது இந்த அறிவிப்பில் மாற்றம் செய்யப்பட்டு சிந்துவின் பயிற்சியாளரான கோபிசந்த், வெண்கலப் பதக்கம் வென்ற மல்யுத்த வீராங்கனை சாக்சி மலிக், ஜிம்னாஸ்டிக் போட்டியில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய தீபா கர்மாகர் ஆகியோருக்கும் குறித்த வகைக் காரை ஹைதராபாத் பூப்பந்தாட்ட சம்மேளனம் பரிசாக வழங்கியது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 29
இலங்கைக் கிரிக்கெட் சபை நடத்தும் 15 வயதுக்குட்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்று கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது.
மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி இந்த ஆட்டத்தில் மோதவுள்ளது. (ம-23)

## முல்லையை வீழ்த்தியது வவுனியா

யாழ்ப்பாணம், ஒக். 29
நிவேதிகனின் சிறப்பான பந்துவீச்சின் மூலம் முல்லைத்தீவு மாவட்ட அணியை 77 ஓட்டங்களால் வீழ்த்தியது வவுனியா மாவட்ட அணி.
இலங்கைக் கிரிக்கெட் சபை நடத்தும் 15 வயதுக்குட்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட அணி 26.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது.
அதிகபட்சமாக இயலரசன் 40 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் முல்லைத்தீவு மாவட்ட அணியின் சார்பில் சுஜீதரன் 4 இலக்குகளை வீழ்த்தினார்.
119 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு மாவட்ட அணி, 44 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் முல்லைத்தீவு மாவட்ட அணியின் சார்பில் நிவேதிகன் 8 இலக்குகளை வீழ்த்தினார். (ம-23)

## செபஸ்ரியன், உதயசூரியன் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஒக். 29
கொடுக்குளாய் சத்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். செபஸ்ரியன், உதயசூரியன் அணிகள் வெற்றிபெற்றன.
சக்திவேல் வி.கழக மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில், சென். செபஸ்ரியன் அணியும், கருணாகரன் அணியும் மோதின.
இந்த ஆட்டத்தில் சென். செபஸ்ரியன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில், கணேசானந்தா அணியை எதிர்த்து வத்திராயன் உதயசூரியன் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் உதயசூரியன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(ம-23)



# இமையாணனின் தொடரில் டயமன்ஸ் சம்பியன்
# பலம்மிகுந்த சென். மேரிஸ் கழகத்தை வீழ்த்தி


கரணவாய், ஒக. 29
இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில், டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.
இமையாணன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. ஆட்டத்தின் 6 ஆவது நிமிடத்தில் மூலை உதை வாய்ப்பை ஜெனற் கோலாக மாற்ற, சென். மேரிஸின் முதல் கோல் பதிவானது. 20 ஆவது நிமிடத்தில் தனக்குக் கிடைத்த தண்டனை உதையை டயமன்ஸ் அணி கோலாக்க, கோல் கணக்கு 1:1 என்று சமநிலை கண்டது. 25 ஆவது நிமிடத்தில் துஷி டயமன்ஸின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் டயமன்ஸ் 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.
இரண்டாம் பாதியின் நிமிடங்கள் ஓர் முனையில் நிறைவடைந்து கொண்டிருக்க, மறுமுனையில் டயமன்ஸின் வெற்றி படிப்படியாக உறுதியாகிக் கொண்டிருந்தது. ஆட்டத்தின் 68 ஆவது நிமிடத்தில் நிதர்சன் மேரிஸின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். வேறு எந்த மாற்றமும் இல்லாமல் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் ஓடி மறைந்தன. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் கிண்ணத்தைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட, முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது டயமன்ஸ் விளையாட்டுக் கழகம். மூன்றாமிடத்தை விண்மீன் விளையாட்டுக் கழகம் தனதாக்கியது.
ஆட்டநாயகனாக சென். மேரிஸின் நிதர்சனும், தொடராட்ட நாயகனாக டயமன்ஸின் பிரேம்குமாரும், சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் ஜெனாவும் தெரிவானார்கள். பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டார். (ம-108)

## யாழ். பல்கலைக்கு வெள்ளி
## குண்டெறிதலில் கிடைத்தது




யாழ்ப்பாணம், ஒக். 29
பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் யாழ். பல்கலைக் கழகத்துக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.
தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் தொடர் இடம்பெற்று வருகிறது. நேற்று இடம்பெற்ற ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆர்.எம்.ஒ.டி. ரணசிங்க 11.5 மீற்றர் தூரத்துக்குக் குண்டை ஏறிந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-23)

## தடைதாண்டலில் வெண்கலம்
## கைப்பற்றியது யாழ். பல்கலை



யாழ்ப்பாணம், ஒக். 29
பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான தடைதாண்டுதலில் யாழ். பல்கலைக் கழகத்துக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.
தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் தொடர் இடம்பெற்று வருகிறது. நேற்று இடம் பெற்ற ஆண்களுக்கான 110 மீற்றர் தடைதாண்டுத லில் யாழ். பல்கலைக் கழகத்தின் சார்பாகக் களமிறங்கிய ஜெ.ஜெனந்தன் 17.01 செக்கனில் ஓடிமுடித்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-23)

# டெஸ்ட்டில் முதலிடமென்பது உலகக் கிண்ணம் வென்றதைப் போன்றது
## மிஸ்பா தெரிவித்தார்

டெஸ்ட் தரவரிசையில் பாகிஸ்தான் அணி முதலிடத்துக்கு முன்னேறியமையானது, உலகக்கிண்ணம் வென்றதை போல் மகிழ்ச்சியானது என்று அந்த அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவித்தார்.
டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் இருந்த ஆஸ்திரேலியா, இலங்கை அணியிடம் படுதோல்வி அடைந்ததன் மூலம் தரவரிசையில் பின்னுக்குத் தள்ளப்பட்டது. இதனால், விராட் கோக்லி தலைமையிலான இந்திய அணி முதலிடத்தைப் பிடித்தது. இந்திய அணி முதலிடத்தை தக்கவைக்க, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற்றாக வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால், 4 நாள்களாக தொடர் மழை பெய்ததால் அந்த ஆட்டம் சமநிலையில் முடிந்தது.
இதனால் இரண்டாவது இடத்திலிருந்த பாகிஸ்தான் முதலிடத்துக்கு முன்னேறியது. இதனையடுத்தே மிஸ்பா இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.
பாகிஸ்தான் அணி டெஸ்ட் கிரிக்கெட்டில் முதலிடத்துக்கு முன்னேறியமை மிகப் பெரிய சாதனை. ஏனெனில் நாங்கள் எமது சொந்த மண்ணில் விளையாடியது கிடையாது.
தற்போது உலகக்கிண்ணத்தை வென்றது போல, மகிழ்ச்சியாக இருக்கிறது. இருப்பினும் இந்த முதல் இடத்தை தக்க வைத்துக் கொள்வது என்பது சவாலான விடயம் என மிஸ்பா மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெறாசோ சிப்ஸ் (இந்தியா)
மலிவு விற்பனை
சகல நிறங்களும் அளவுகளும்
100 சூடைகளுக்கு மேல் மொத்தவிலை.

# நிறைவான வழியனுப்புதலுடன் அணியைப் பிரிந்தார் டில்சான்

வேலை வாய்ப்பு
Cleaning மற்றும் Garden வேலை
நிறுவனம்: பிரெஞ்சுமொழி கற்பிக்கும் தனியார் நிறுவனம்.
ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri, Nallur Road, Jaffna.
phone: 0212228093


## இலங்கையை வீழ்த்தியது ஆஸ்திரேலியா

இலங்கைக்கு எதிராக நேற்று நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் இரு இலக்குகளால் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி தொடரில் 2:1 என்று முன்னிலை வகிக்கிறது. இதனால் அடுத்த இரு ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே தொடரைக் கைப்பற்ற முடியும் என்ற நெருக்கடியான நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக டில்சான் மற்றும் குணதிலக. முதல் பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப்பந்தில் ஸ்ராக்கிடம் போல்ட் ஆனார் குணதிலக. ஹசில்வூட்டின் வேகத்தில் சிக்கினார் குசல் மெண்டிஸ். டில்சான், சந்திமல் இணை சிறிது தாக்குப்பிடித்து ஆஸியின் பந்துவீச்சை எதிர்த்துப் போராட்டத்தை வெளிப்படுத்தியது. 42 ஓட்டங்களுடன் தனது இறுதி இன்னிங்ஸை முடித்துக் கொண்டார் டில்சான்.

சந்திமல் ஓர் முனையில் நிலைத்து நின்றாலும் மத்திய வரிசை பலவீனமாகவே உணரப்பட்டது. இரு ஓட்டங்களுடன் சாம்பாவின் சுழலில் பவிலியனுக்குத் திரும்பினார் மத்தியூஸ். டி சில்வா, குசல் ஜெனித் பெரேரா இருவரும் முறையே 12, 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். ஒருமுனை இவ்வாறிருக்க மறு முனையில் சதத்தை நெருங்கிக் கொண்டிருந்தார் சந்திமல். சந்திமல் சதம் கடக்க முன்னர் இலங்கை சகல இலக்குகளையும் இழக்கும் நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால் டில்ருவான் பெரேராவை வைத்து சதத்தைச் சாதித்தார் சந்திமல். 105 ஓட்டங்களுடன் சந்திமலை வீழ்த்தினார் பல்க்நெர். கூடவே 226 ஓட்டங்களுடன் இலங்கையின் இன்னிங்ஸும் முடிவு கண்டது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியாவின் சார்பில் சாம்பா 3 இலக்குகளையும், ஸ்ராக், ஹஸ்ரிங்ஸ், பல்க்நெர் மூவரும் தலா இரு இலக்குகளையும், ஹசில்வூட் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.



பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா முதல் நான்கு பந்துப் பரிமாற்றங்கள் நிறைவுவரை இலக்குகளை இழக்கவில்லையாயினும் ஐந்தாவது பந்துப்பரிமாற்றத்தில் வோர்ணரை வீழ்த்தினார் மத்தியூஸ். சோன் மார்ஸ் ஒரே ஓட்டத்துடன் நடையைக் கட்டினார். பின்ஞ் 30 ஓட்டங்களுடன் அபோன்சோவின் பந்தில் ஆட்டமிழக்க ஆஸி. 44-3 என்றிருந்தது. பெய்லி, ஹெட் இணை இலங்கையின் வெற்றிக்கனவை படிப்படியாகத் தகர்த்தது. இணைப்பாட்டமாக 60 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் ஹெட்டின் இன்னிங்ஸ் முடிவு கண்டது. பெய்லி 70 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். பெய்லி ஆட்டமிழந்தபோது ஆஸியின் வெற்றிக்கு 23 ஓட்டங்களே தேவைப்பட்டன. முடிவில் இரு இலக்குகளால்வெ ற்றிபெற்றது ஆஸ்திரேலியா. டில்சானின் பன்னாட்டு ஒருநாள் வாழ்க்கை தோல்வியுடன் முடிந்தது.

### அணியைப் பிரிந்தார் டில்சான்

இலங்கை அணியின் சகலதுறை வீரரரான டில்சான், பன்னாட்டு ஒருநாள் ஆட்டங்களிலிருந்து நேற்றுக் கண்ணீர் மல்க விடை பெற்றார். அவர் களமிறங்கிய போது சக வீரர்கள் அவருக்கு உரிய கௌரவத்தையும் கரகோசங்களையும் வழங்கினர். ஆஸ்தி ரேலிய வீரர்களும் விதிவிலக்கல்ல. டில்சான் ஆட்டமிழந்தபோதும் ஆஸ்திரேலிய வீரர்கள் இலக்குச் சரிவைக் கொண்டாடவில்லை. மாறாக அவரை வாழ்த்தி வழியனுப் பினர். ஆட்டம் முடிந்த பிற்பாடு மைதானத்தை சுற்றி தனது ரசிகர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார். சிலர் அழவும் செய்தனர். டில்சானின் கண்களிலும் கண்ணீர் மல்கியது. அவருக்கான நினைவுப்பரிசிலை இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால வழங்கி வைத்தார். பின்னர் தனிச் சிங்களத்தில் உரையாற்றி அணியைப் பிரிந்து சென்றார் டில்சான். (ம)

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு CEYLON ART CREATION
K.T பிரசாத் பெருமையுடன் வழங்கும் தென் இந்திய விஜய்
தொலைக்காட்சி கலைஞர்கள் கலந்து சிறப்பிக்கும் மாபெரும் இசைநிகழ்ச்சி


நாளை மாலை 7.00 மணிக்கும்
31ம் திகதி மாலை 3.00 மணிக்கும்
இடம்: நல்லூர் முருகன் கோவில் பின் வீதியும் சங்கிலியன் வீதியும் இணையும் சந்தியில் அமைந்திருக்கும் திறந்த வெளியரங்கில்
நன்கொடை நுழைவுச்சீட்டுக்கள்
300/= / 500/= / VIP
அரங்க நுழைவாயிலில் பெற்றுக்கொள்ளலாம்
ஏற்பாட்டுக்குழு
Ceylon Art Creation
077 550 4910
077 430 3020
இந்நிகழ்வு இன்று மாலை 6 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் நடாத்தப்படுகிறது
இடம்: நெல்லை முருகன் திருமண மண்டபம், நெல்லியடி
ANDPA PRINTERS
JAFFNA
021 221 7279 / 077 6622981

கோலாகல திறப்புவிழா
தீன்சுவை வெதுப்பகம்
Theensuvai Bakery
Branch 03
எமது அன்பான வாடிக்கையாளர்களே!
பன்நெடுங்காலமாக உங்கள் நன்மதிப்பை வென்ற
தீன்சுவை வெதுப்பகமானது
தனது மூன்றாவது (03) கிளையினை முல்லை நகரில் சுற்றுவட்டசந்திக்கு அருகில் மங்கலகரமாக ஆரம்பிக்கவுள்ளது.
காலம் : 29.08.2016 திங்கட்கிழமை
நேரம் : முற்பகல் 9.23 மணிமுதல் 10.33 மணிவரை
இடம் : பிரதான வீதி, முல்லைத்தீவு
இதுவரை காலமும் நீங்கள் எமக்களித்தபேராதரவுக்கு மிக்க நன்றி.தொடர்ந்தும் உங்கள் ஆதரவை வழங்குவீர்கள் எனப்பெருமனதோடு எதிர்பார்க்கின்றோம்.

வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு
யாழ்./நல்லூர், மருதடி ஒழுங்கையில் இல.38/2/A முகவரி கொண்ட 1675 சதுர அடி கொண்டதும் 4 அறைகளும் இணைந்த குளியல் அறையும் புறம்பான குளியல் அறையும் கொண்ட சகல வசதிகளும் உள்ள மாடி வீடும் 3 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.
தொடர்புகளுக்கு:-
077 801 4335, 076 545 5426

A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!
21வது ஆண்டில் காலடிபதித்துள்ள IIS ல் நவீன தொழில்நுட்ப அறிமுகங்களுடன் கூடிய கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன......
பிரிவு I: 05.09.2016 காலை 10.00மணி
கற்கை நெறிகள்
CERTIFICATE IN MICROSOFT OFFICE
CERTIFICATE IN DESKTOP PUBLISHING
CERTIFICATE IN WEB DESIGNING
CERTIFICATE IN AUTO CAD
CERTIFICATE IN JAVA PROGRAMMING
CERTIFICATE IN VISUAL PROGRAMMING
CERTIFICATE IN HARDWARE TECHNOLOGY
CERTIFICATE IN COMPUTERIZED ACCOUNTING
CERTIFICATE IN MULTIMEDIA
IIS உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தின் வழிகாட்டி
Institute of Informatics Studies
200, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
071 777 3444 / 021 4900 900

(30.08.2016) 9.00 மணி
9.00 am - 3.00 pm
TP : 076 656 3394

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.